நுண்பொருள் விளக்கம்

(சொல்லிலக்கணம்)

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

நுண் பொருள் விளக்கம்

(சொல்லிலக்கணம்)

ஆசிரியர் :
வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

புதுச்சேரி குஹாகம்பெனி உரிமையாளர்,
உயர்திரு,
P. N. இராஜமாணிக்கம் பிள்ளையவர்களின்
பொருளுதவியால்
ஆசிரியர் வெளியிட்டது.

பதிவு செய்தது] 1963 [விலை ரூ. 1-80 ந. பை.

உள்ளுறை

எண்		பக்கம்
1.	இன்னன் ஏது சங்கு (சென்னைப் பல்கலைக் கழகப் பத்திரிகை) ...	1
2.	சொற்பொருள் (தெ. பொ. மீ. மணிவிழா மலர்) ...	9
3.	பன்மை சுட்டிய பெயர் (ஸ்ரீ கோபாலகிருஷ்ணமாசாரியர் 60-ஆம் ஆண்டு நிறைவுவிழா மலர்) ...	37
4.	உயர்திணை உம்மைத்தொகை (" ஞானசம்பந்தம்") ...	44
5.	வியங்கோள் (செ. ப. க. பத்திரிகை) ...	49
6.	ஏவல்வினை யமைப்பு (R. P. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர்) ...	86
7.	உந்தீற்றுச் சொல் ("பரணர்" செ. ப. க. வெளியீடு) ...	97
8.	அசைச் சொல் (பல தொகுப்பு) ...	119
9.	'தெவ்'வா, 'தேவ்'வா? (செ. ப. க. பத்திரிகை) ...	127
10.	நக்கீரரா, நற்கீரரா? ("தமிழ்ப் பொழில்") ...	133
11.	திராவிட மொழிகளில் சில இலக்கண நியதி (செ. ப. க. பத்திரிகை) ...	136

முத்துக்குமரன் அச்சகம், சென்னை-1

முன்னுரை

யான் 1941 மே மாதத்தில் புதுச்சேரிக்குச் சென்றிருந்தபோது, அங்கு நண்பர், வித்வான், ஸ்ரீ, சு. கோவிந்தராஜுலுநாயடு திருவாளர், பி. என். ராஜமாணிக்கம்பிள்ளையவர்களை அறிமுகப்படுத்தினர்கள். பின்னர், பிள்ளையவர்களோடு பழகப் பழக, அவர்கள் தமிழிலக்கியத்தில் மட்டுமன்றி, இலக்கணத்திலும் ஆழ்ந்த புலமை வாய்ந்தவர்கள் என அறிந்து மகிழ்வுற்றேன். மேலும், அவர்கள் சைவ, வைஷ்ணவ, வேதாந்த நூல்களிலும் சிறந்த புலமை பெற்றிருத்தலும் எனக்கு மிக்க இன்பம் விளைத்தன. அவர்களோடு உரையாடுங்கால், யான் அடைந்த இன்பத்திற்கு எல்லை இல்லை.

உயர் திரு. ராஜமாணிக்கம் பிள்ளையவர்கள் என் நூல்களையும் கட்டுரைகளையும் வாசித்து, தங்கள் கருத்தினைத் தெரிவித்து எனக்கு ஊக்கம் அளிப்பார்கள். அவர்கள் என் கட்டுரைகளைப் புத்தகமாக வெளியிடுதல் அவசியம் என்றும், முதலில் சொல்லிக்கணம்பற்றிய கட்டுரைகளை அச்சிடலாம் என்றும், அதற்காகுஞ் செலவிற்குத் தாங்கள் பொருளுதவக் கூடும் என்றும் 1962 ஏப்ரல் 9-இல் எனக்கு எழுதினர்கள். யான் இலக்கணவாராய்ச்சிநூலை யாருமே விரும்பார்; வாசிக்கார். அந்நூலை அச்சிடுதல் பயனில் செயல் என்று பலமுறை தெரிவித்தும், அதனை ஏற்றுக் கொள்ளாமல், அச்சிடுதற்கு வேண்டும் பொருளை

முந்துற அனுப்பினர்கள். அவர்களது அன்பின் பணியை மறுக்க இயலாமல் அதனை மேற்கொண் டேன். இந்நூலின் பலனைக் கருதியன்றுகிலும், உயர்திரு, பிள்ளையவர்களின் தமிழார்வத்தைக் கருதியாவது தமிழறிஞர் இதனை ஆதரித்தல் கடனுகும்.

இந்நூலில் என் கட்டுரைகளைச் சேர்த்துக் கொள்ள அனுமதி நல்கிய சென்னைப் பல்கலைக் கழகத்தவர்க்கும் பிறருக்கும் நன்றியறிதலுடை யேன்.

இந்நூலை வெளியிடுமாறு என்னை வற்புறுத்தி வலிந்து பொருளுதவி செய்த புதுவை உயர்திரு, பி. என். ராஜமாணிக்கம்பிள்ளையவர்களின் அன் பினையும் ஆதரவினையும் எழுமையும் மறவேன். அவர்கட்கு எல்லா நன்மைகளும் மேன்மேலும் பெருகத் திருவருள் புரியுமாறு இறைவனை வேண்டிக்கொள்ளுதலன்றி வேறு யான் செய்ய லாவது யாதுளது!

அறிஞர்க்கடியவன்,

வே. வேங்கடராஜுலு

நுண்பொருள் விளக்கம்

1. 'இன்னன் ஏது ஈங்கு'

ஆசிரியர் தொல்காப்பியனார், சொல்லதிகாரத்தில் வேற்றுமையியற்கண் 10-ஆஞ் சூத்திரம் முதல் 21-ஆஞ் சூத்திரம் முடிய 12 சூத்திரங்களில், இரண்டாம் வேற்றுமைமுதல் ஏழாம் வேற்றுமைவரை ஆறு வேற்றுமைகளைக்குறித்துக் கூறியுள்ளார். அவ்வாறு கூறுமிடத்து, ஒவ்வொரு வேற்றுமையின் உருபினையும், அதன் முக்கியமான பொருளையும் முதற்சூத்திரத்திலும், அப்பொருளின் வகையினை [1]இரண்டாஞ் சூத்திரத்திலும் அமைத்திருக்கின்றார். அம்முறையில், மூன்றாம் வேற்றுமையின் உருபினையும் அதன் முக்கியமான பொருளினையும்

'மூன்றாகுவதே
ஓடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே'

என்னும் முதற்சூத்திரத்திற் கூறி, பொருளில் வகையினை,

'அதனி னியறல்.....அதன்பால என்மனார்'

என்னும் இரண்டாஞ் சூத்திரத்தில் விளக்கினார்.

அச்சூத்திரத்தில்,

'இன்னன் ஏது ஈங்கென வரூஉம்'

என்னும் அடியின் பொருளில், உரையாளர் மாறுபடுகின்றனர். ஆகலின், அதனை ஈண்டு நோக்குதும்:

---

1. சிறுபான்மையாய் வரும் பொருளும் கூறப்பட்டுளது.

இளம்பூரண அடிகள், 'இன்னுன் என்புழியும் ஏதுவின்கண்ணும் வரும் மூன்றும் வேற்றுமை' என்று பொருள் கூறி,

'இன்னுன் என்பது— கண்ணுற் கொத்தை, காலான் முட [வன் என்பன.
ஏது என்பது—முயற்சியாற் பிறத்தலான் சொல்லு நிலை-
யாது என்பது'

என்று உதாரணங் கொடுத்தார்.

சேனாவரையர், 'இன்னுன் ஏது என்பது— முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது என்பது. "அதனின் ஆதல்" எனக் காரகவேது முற்கூறப்பட்டமையான் இது ஞாபகவேதுவாம். இப்பொருள் ஆனுருபிற்கும் இன்னுருபிற்கும் உரித்து என்பது விளக்கிய, "ஏது" என்னுது, "இன்னுன் ஏது" என்றார். "இன்னுன்" என்பது **உம்மைத்தொகை.** அவற்றது ஏதுப்பொருண்மை என்றவாறு' என்று உரைத்தார்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர், சேனாவரையருரை-யைப் பின்பற்றி, 'இன்னுன் ஏது—**இன்னும் ஆனும்** ஆகிய ஏதுப்பொருண்மை' என்று பொருள் கூறி, 'முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது. இதனுள், முயற்சியின் என்பது காரகவேது; பிறத்தலான் ஒலி நிலையாது என்பது ஞாபகவேது' என்று உதாரணங் கொடுத்து விளக்கினர்.

கல்லாடர், 'இத்தன்மையான் என்னும் பொருண்மை, ஏதுப் பொருண்மை' என்று பொருள் கூறி,

'இன்னுன் என்பது — இத்தன்மையான் என ஒருவன்-
பெற்றி கூறல்.

அது கண்ணுற் கொத்தை, காலான் முடவன் என்பன.
ஏது—முயற்சியிற் பிறத்தலான் இசை நிலையாது என்பது'

என்று உதாரணங் கொடுத்து, 'முன்னும் ஏதுவின் பாகுபாடு ஓதிவைத்துப் பின்னும் "ஏது" என ஓதியது அவ்வாறெழிய வருவனவற்றைக் கருதிப்போலும். அவ்வேது—காரகவேதுவும் ஞாபகவேதுவும் என இருவகைத்து. முயற்சியிற் பிறத்தல் காரகம்; பிறத்தலான் இசை நிலையாது என்பது ஞாபகம். அஞ்ஞாபகத்தைப்போலும் ஈண்டு ஏது என ஓதியது' என்று விளக்கமும் எழுதினர்.

தெய்வச் சிலையார், 'இன் என்பது—இன் என்னுஞ் சொல். ஆன் என்பது ஆன் என்னுஞ் சொல். ஏது என்பது ஏது என்னுஞ் சொல்' என்று பொருள் கூறி, 'புகை உண்மையின் நெருப்புண்மை அறிக; புகை உண்மையான் நெருப்புண்மை அறிக; புகை ஏதுவாக நெருப்புண்மை அறிக' என்று உதாரணங் கொடுத்தார். இன்னும் அவர், 'அன்ன பிறவாவன—காரணம், நிமித்தம், துணை, மாறு என்பன' என்று கூறி, அவற்றிற்கும் உதாரணம் கொடுத்துள்ளார்.

பழைய வுரை ஒன்றில், 'இன்னென் ஏது—இன்னும் ஆனும் ஏதுவின்கண் வரும்' என்று பொருள் கூறி, முயற்சியிற் பிறத்தலான் ஒலி நிலையாது' என்று உதாரணங் காட்டியதேயன்றி,

'இன்னென் என்பது கண்ணுற் கொத்தை அவன்
காலான் முடவன் அவன் என்றுமாம்'

என்று எழுதப்பட்டுளது.

'இன்னு னேது ஈங்கென வரூஉம்'

என்னும் அடியில், ஈங்கு என்பதனைக்குறித்து, [2]உரை யாசிரியரும், கல்லாடரும் தெய்வச்சிலையாரும் ஒன்றுமே கூறிற்றிலர். சேனவரையர், 'என என்பதனை மாற்றி ஏது என்பதன் பின் கொடுத்து, "ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்" என இயைக்க' என்றார். நச்சினார்க்கினியர், 'என வரூஉம்; ஈங்கு வரூஉம் அன்ன பிறவும்' என்று, 'வரூஉம்' என்பதனை இரண்டிடத்துக் கூட்டிப் பொரு ளுரைத்தார். அவர், 'ஈங்கு' என்பதற்கு, 'வினைமுத லும் கருவியும் ஆகிய பொருளிடத்து' என்று எழுதி யுள்ளார்.

ஆசிரியர், 'அதனி னியறல்' என்னுஞ் சூத்திரத்தில் மூன்றும்வேற்றுமைப் பொருளின் வகையினைக் கூறு கின்றாராகலின், அதிற் கூறியனவெல்லாம் அவ்வேற் றுமையின் பொருள்வேறுபாடேயாகும். ஆகலின், சேனவரையரும் நச்சினார்க்கினியரும் 'இன்னுன்' என் பதை இன், ஆன் என்றுபிரித்து உருபாகக் கொண்ட-தூஉம், தெய்வச்சிலையார் இன், ஆன், ஏது என்னுஞ் சொற்களே வரும் என்றதூஉம் அமைவனவல்ல என் பது எளிதிற் புலனாகும்.

இனி 'இன்னுன் ஏது ஈங்கென வரூஉம்' என்னும் அடியின் அமைவுடைப்பொருளை நோக்குதும்:

மூன்றும் வேற்றுமைச் சூத்திரத்தில்,

'வினைமுதல் கருவி அனைமுதற் றதுவே'

---

2. 'இன்னுன் ஏது' என்பவற்றிற்கு அமைவுடைய பொருள் கூறியவர் 'ஈங்கு' அல்லது 'ஈங்கனம்' என்பதற்கும் பொருள் கூறாது விடுவாரல்லர் எனவும், அது விடுபட்டிருத்தல் வேண்டும் எனவும் ஐயம் உண்டாகின்றது.

என்று கூறப்பட்டுள்ள வினைமுதல் கருவிப்பொருள்-களே,

'கர்த்ரு கரணயோ: த்ருதியா'

என்னும் பாணினீயசூத்திரத்திலும் கூறப்பட்டுள.

அச்சூத்திரத்தை யடுத்து,

3'ஸஹயுக்தே அப்ரதானே' (2. 3 : 19)

என்னுஞ் சூத்திரமும்,

அதனையடுத்து,

'யேநாங்க விகார:' (2. 3 : 20)

'இத்தம் பூதலக்ஷணே' (2. 3 : 21)

என்னுஞ் சூத்திரங்களும், பின்னர்,

'ஹேதௌ' (2. 3 : 23)

என்னுஞ் சூத்திரமும் உள்ளன. இவற்றுள், 'யேநாங்க விகார:' என்பது முதலிய மூன்று சூத்திரங்களின் பொருளும்

'இன்னன் ஏது ஈங்கு'

என்பவற்றின் பொருளும் தம்முள் ஒத்தன வாகும்.

இன்னன் என்பது—இன்னவன் என்பதாம். அஃதாவது—நெடுமூக்கன், குறுங்கழுத்தன் என்பன போல உறுப்புக்களைப்பற்றி வருவது. இது வழக்கி லுள்ளும் பெரும்பாலும் அறியலாகும். அதனனே, இளம்பூரண அடிகள்,

'இன்னன் என்பது— கண்ணற் கொத்தை, காலான் முட வன் என்பன'

---

3. இச்சூத்திரப்பொருளோடு தொடர்புடையது 'ஒருவினை யொடுச்சொல் உயர்பின் வழித்தே' (வேற். மயங். 8) என்பது.

என் றெழுதினர். 'யேநாங்க விகார:' என்னுஞ் சூத்திரத்திற்கும் இப்பொருள் படுகின்ற—

'அக்ஷ்ணு காண:' (கண்ணுற் குருடன்)

என்பதனையே வடமொழியில் உதாரணமாகக் காட்டியிருத்தல் அறியத்தக்கது. இதனால், 'யேநாங்க விகார:' என்னுஞ் சூத்திரத்தின் பொருளும் 'இன்னென்' என்பதனால் குறித்த பொருளும் ஒன்றே என்பது போதரும்.

'ஏது' என்பதும்,

'ஹேதௌ'

என்னுஞ் சூத்திரத்தின் பொருளும் ஒன்றேயாதல் கூறுமலே விளங்கும். ஏதுவிற்கும் காரணத்திற்கும் (கருவிக்கும்) உள்ள [4]வேறுபாடு அறியத்தக்கது.

இனி, 'ஈங்கு' என்பதனை நோக்குதும்: 'ஈங்கு' என்பதற்கு 'ஈங்கனம்' என்னும் பாடம் உண்டென்பது [5]சேனவரையத்தால் அறியப்படுகின்றது. அதுவே பழைய பாடமாயிருக்கலாம் எனத் தோன்றுகின்றது. ஈங்கனம் என்பது **இத்தன்மை, இப்படி** என்னும் பொருளது. இனி, 'ஈங்கு' என்பதற்கும் இப்பொருள் உளது.

---

4. ஒரு தொழில் நிறைவேற்றுதற்கு நேரே சாதகமாயிருப்பது காரணம்: பிறகாரணமெல்லாம் ஏது—பொருள் குணம் தொழில் இம் மூன்றற்கும் காரணமாகும்.

5. 'ஈங்ஙனம்(ஈங்கனம்) என்று பாடம் ஓதுவாரும் உளர்' என்பது சேனவரையம்.

6‘ முழவுத்தோளான் முறுவலித் தீங்கே இருநீயென்று’

என்னும் அடியில், ‘ஈங்கே’ என்பதற்கு ‘இப்படியே என்று ஆசிரியர் நச்சினார்க்கினியர் பொருள் கூறியிருக்கின்றார். 7நற்றிணையிலும் ஈங்கு என்பது இப்படி என்னும் பொருளில் வந்துளது. ஆங்கு என்னுஞ் சொல் அத்தன்மை, அப்படி என்னும் பொருளிலும், யாங்கு என்பது எப்படி, எத்தன்மை என்னும் பொருளிலும் பயின்றுவருதல் ஈண்டுக் கருதத்தகும்.

இவற்றால், ‘ஈங்கு’ (ஈங்கனம்) என்பது,

‘ இத்தம் பூதலகூணே ’

என்னுஞ் சூத்திரத்தின் பொருளோ டொத்த தாகும் எனத் தோன்றுகின்றது. ‘இத்தம்’ என்பது ‘இப்பிரகாரம், இப்படி’ என்னும் பொருளது; ‘பூத’ என்பது ‘இருத்தல்’ என்பதாகும்.

‘ ஜடைகளால் தாபஸன் ’

என்பது இச் சூத்திரத்திற்குக் காட்டப்பட்டுள்ள உதாரணம். இதுபோல்வதே ‘ஈங்கு’ (ஈங்கனம்) என்பதற்கு உதாரணமாகும். ‘இன்னன்’ என்பதற்கு இத்தன்மையான் என்று கல்லாடர் கூறியது ஈண்டைக்கு அமைதல் இன்று.

ஆசிரியர், ‘ஈங்கென வரூஉம்’ என்னுந் தொடரில், ‘என’ என்னுஞ் சொல்லை ‘ஈங்கு’ என்பதன் பின்னர் வைத்திருத்தலின், ‘ஈங்கு’ என்பது மூன்றும் வேற்றுமைப்பொருள்களுள் ஒன்றேயாகும். ஆகலின், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ‘என’ என்பதனை

6. சீவக. 1593. 7. ‘பேதை நெஞ்சங் கவலை கவற்ற. ஈங்கா கின்றுல்.’ நற். 144

மாற்றிப் பொருள் கூறியது அமையாமை எளிதின் அறியப்படும். 'இன்னென் ஏது ஈங்கு' என்பவை ஒருங்கு கூறப்பட்டிருத்தலும், 'யேநாங்க விகார:' என்னுந் தொடக்கத்துச் சூத்திரங்கள் ஒருங்கே அமைந்திருத்தலும் உளங்கொளற் பாலன.

'இன்னென்' என்பதற்கு இளம்பூரண அடிகள் காட்டிய உதாரணம் பொருந்தாதென்று, வடநூற் புலமை வாய்ந்த சேனவரையர் மறுத்துக்கூறியது வியப்பினைத் தருகின்றது. **சொல்லதிகாரக் குறிப்பின் ஆசிரியர், டாக்டர், ஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்த்ரியாரவர்கள்,** '"அன்ன பிறவும்" என்பதனால், "கண்ணுற் கொத்தை" முதலியவற்றை அடக்கிய சேனவரையர், சூத்திரத்தினுள் "இன்னென்" என்பதற்கு அவற்றை உதாரணமாகக் காட்டிய உரையாசிரியர்கொள்கையை மறுத்தது பொருந்துமா' என்று எழுதியிருப்பது ஈண்டு அறியத்தக்கது.

'இன்னு னேது ஈங்கென வரூஉம்' என்னும் அடியில் இன்னென் ஏது என்பவற்றோடு ஒருங்கு கூறப்பட்டிருத்தலின், 'ஈங்கு' என்பது மூன்றும் வேற்றுமைப் பொருளதே யாதல்வேண்டும் என்பதூஉம், உரையாசிரியரும் கல்லாடரும் தெய்வச் சிலையாரும் அதனைப் பற்றி ஒன்றுமே கூறாது விடுத்ததும், சேனவரையரும் நச்சினார்க்கினியரும் அதற்கு மூன்றும் வேற்றுமைக்குரிய பொருள் கூறாது மாற்றிக் கூட்டி யுரைத்ததும் அமைவல்ல என்பதூஉம், அஃது 'இத்தம் பூதலக்ஷணே' என்னுஞ் சூத்திரத்தின் பொருளோடொத்ததாகக் காண்கின்றது என்பதூஉம் அடியேன் கருத்து.

——

2. சொற்பொருள்

"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"[1]

என்னுங் குறட்பாவின் உரையில், 'சொல்லின் தொகை' என்பதற்கு, 'சொல்லின் குழு' என்று பொருளெழுதி, "சொல்லின் குழு எனவே செஞ்சொல், இலக்கணைச் சொல், குறிப்புச் சொல், என்னும் மூவகைச்சொல்லும் அடங்கின" ஒன்று விளக்கம் எழுதினர் பரிமேலழகர். இனி அவர்,

"இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்
நடைதெரிந்த நன்மை யவர்"

என்னுங் குறளின் உரையில், 'சொற்களின் நடை யாவது—அம்மூவகைச் சொல்லும் செம்பொருள், இலக்கணைப்பொருள், குறிப்புப்பொருள் என்னும் பொருள்களைப் பயக்குமாறு' என்று விளக்கம் எழுதி னர். மேலும் அவர்,

"அவை யறியார்" என்னுங் குறளின் உரையில், 'அம்மூவகைச் சொற்களால் வரும் சொல்லுதல்-வகைமை கேட்பாரது உணர்வுவகைமை பற்றி வருத லால் "சொல்லின் வகை யறியார்" என்றும், இஃதறி யார் யாதுமறியார் என்று எல்லாரானும் இகழப்படுத லின் "வல்ல தூஉமில்" என்றும் கூறினர்' என்று எழுதி

---

1. 'குறிப்புச்சொல், குறிப்புப்பொருள்' என்பன பரிமே லழகர் குறித்துள்ளவாறு வருதல் ஒரு தலையன்று.

யிருக்கின்றார். இவற்றுள், செஞ்சொல் முதலிய மூன்று சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறிதல் இன்றியமையாதது என்பது பெறப்படும். ஆகலின், இங்கு அவற்றைப்பற்றிச் சிறிது நோக்குவோம்.

மேற்கூறிய சொற்களும் அவற்றின் பொருளும் :—

1. செஞ்சொல் — செம்பொருள்
2. இலக்கணைச்சொல் — இலக்கணைப் பொருள்
3. குறிப்புச்சொல் — குறிப்புப்பொருள்

என்பன.

இவற்றை வடநூலார் முறையே,

1. வாசகம் — வாச்யம்
2. லக்ஷகம் — லக்ஷ்யம்
3. வ்யஞ்ஜகம் — வ்யங்க்யம்

என்று கூறுவர்.

இனி, வாசகம் முதலிய சொற்கள் தம் பொருளை உணர்த்தும் வ்யாபாரமும் (வ்ருத்தி) மூன்று வகைப்படும். அவை முறையே,

1. வாசகம் — அபிதை
2. லக்ஷகம் — லக்ஷணை (இலக்கணை)
3. வ்யஞ்ஜகம் — வ்யஞ்ஜனை

எனப்படும்.

இன்ன சொல்லிற்கு இது பொருள் என்று எல்லா மொழிகளிலும் ஏற்பட்டுள்ள பொருள் சங்கேதப் பொருள் எனப்படும். அப்பொருளை மக்களனைவரும் அறிவர். அவ்வாறு ஒருபொருளை நேரே குறிக்கின்ற சொல் வாசகம் எனப்படும். அச்சொல் தன் பொருளை உணர்த்துதலில் செய்யும் வ்யாபாரம் 'அபிதை' என்று

பெயர் பெறும். அபிதையால் குறிக்கப்படும் பொருளே வாச்சியம் எனப்படுகிறது. இவ்வாறே ஒரு சொல் இலக்கணையினால் உணர்த்துகின்ற பொருள் லக்ஷ்யம் எனப்படும்; வ்யஞ்ஜனையினால் உணர்த்தப்படுகின்ற பொருள் வ்யங்க்யம் எனப்படும் என்பது அறியத்தக்கது. முதலில் அபிதையை நோக்குவோம். அபிதை என்பது சொல்லிற்கும் பொருளிற்கும் உள்ள நியதமான தொடர்பாகும். அபிதையைச் சொல்லாற்றல் என்று கூறுவர்.

அபிதை—ரூடி, யோகம், யோகரூடி என்று மூன்று வகையாகும். இவை தமிழில் முறையே இடுகுறி, காரணம், காரணவிடுகுறி என்று வழங்கப்படுகின்றன.

ரூடியாவது பகுதி, விகுதி என்னும் பிரிவு இல்லாமலே இன்ன எழுத்துக்களின் தொகுதிக்கு இது பொருள் என்று சங்கல்பிப்பது ஆகும். மண், கல், மரம் முதலியவை அதற்கு உதாரணங்கள். இவைபோன்ற சொற்கள் இப்பொருளே உணர்த்துவது சங்கேதத்தானேயன்றி வேறுகாரணத்தானன்று.

சொற்கு உறுப்புக்களைக் கற்பித்து அவற்றின் சேர்க்கையினால் பொருளைக் கூறுவது யோகம் (காரணம்) ஆகும். வேலைக்காரன், வலையன், கூனன், நாடோடி முதலியன உதாரணமாகும்.

இனி, யோகரூடி (காரணவிடுகுறி) என்பது அவயவசக்தியோடு கூடிய சமுதாயசக்தியாகும். நாற்காலி, முள்ளி, காற்றாடி என்பன உதாரணம். இவற்றில் காரணத்தை மாத்திரம் கருதினால், நாற்காலி என்பது நான்கு கால்களை உடைய கட்டில், மேசை முதலியவற்

றையும் உணர்த்துவதாகும். அவ்வாறே முள்ளி என்பது முள்ளையுடைய எல்லாச்செடிகளையும் காட்டுவதாகும். காற்றுடி என்பது காற்றினாலே அசைவன எல்லாவற்றையும் குறிப்பதாகும். ஆகலின், இங்குக் காரணத்தோடு இடுகுறியின் தன்மையும் கொள்ளப் பட்டதாயிற்று.

இனி, ஒரு சொற்குப் பல பொருள் இருத்தலின் அது எப்பொருளைக் குறித்து வந்துளது என்று ஐயம் உண்டாகுமிடத்தில், ஐயத்தைப் போக்கிப் பொருளை உறுதிப்படுத்தற்குச் சில நியாமகங்களை (கட்டுப்பாடுகளை) மேற்கொண்டுள்ளனர். அவை "அபிதா நியாமகம்" எனப்படும். தமிழில்,

> "வினைவேறு படூஉம் பலபொரு ளொருசொல்
> வேறுபடு வினையினும் இனத்தினும் சார்பினும்
> தேறத் தோன்றும் பொருள்தெரி நிலையே"

என்று ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியுள்ளார்.

"மா" என்னும் பலபொரு ளொருசொல், 'மா பூத்தது' என்னுமிடத்தில் ஒரு பொருட்கே உரிய வினையினாலும், 'மாவும் மருதும் ஓங்கின' என்னுமிடத்தில் இனத்தினாலும், கவசம் தரித்து நின்று, 'மாக்கொணர்க' என்னுமிடத்தில் சார்பினாலும் ஆண்டைக்குரிய பொருளை உணர்த்திற்று. இனி, 'இம் மா வயிரம்' என்று பெயராலும் பொருள் வேறுபடுதல் உண்டு. நன்னூலார்,

> "வினை சார்பு இனம் இடம் மேவி விளங்காப்
> பலபொரு ளொருசொல் பணிப்பர் சிறப்பெடுத்தே"

என்னுஞ் சூத்திரத்தால், தொல்காப்பியனார் கூறிய வினை, சார்பு, இனம் இவற்றோடு இடத்தையும் சேர்த்துக் கூறியுள்ளார். 'மா மறுத்த மலர்மார்பு' என்னுமிடத்தில் 'மா' என்பது இடத்தான் இலக்குமியை உணர்த்திற்று. வடமொழியில் பல பொருளொருசொல், பொருள் உணர்த்தும் முறைமை பதின் மூன்று வகையாகக் கூறப்பட்டுளது.

1. **ஸம்யோகம்**—அதாவது குணவிசேடமான பிரசித்தப் பொருளின் சேர்க்கை.

(**உதாரணம்**) சங்கு சக்கரங்களோடு கூடிய ஹரி.

இங்குப் பலபொருளொருசொல்லாகிய ஹரி என்பதற்குச் சங்கு சக்கரங்களினுடைய சேர்க்கையால் 'திருமால்' என்னும் பொருள் நியமனமாயிற்று.

2. **விப்ரயோகம்**—அதாவது சேர்ந்திராமை; பிரிவு.

(உ-ம்.) சீதையைப் பிரிந்த இராமன்.

சீதையைப் பிரிந்த இராமன் என்பதனுல் இராமன் என்பது தசரதராமனைக் குறித்தது.

3. **ஸாஹசர்யம்**—கூட்டுறவு (சேர்க்கை).

(உ - ம்.) இராமலக்ஷ்மணர்.

இங்கு, லக்ஷ்மணனுடைய கூட்டுறவினுல் இராமன் என்ற பலபொருளொருசொல் பரசுராமன், பலராமன் இவர்களை உணர்த்தாமல் தசரதராமனை உணர்த்திற்று.

4. **விரோதிதை**—பகை—அதாவது பிரசித்தமான வைரம்.

(உ - ம்.) இராமராவணர்.

இங்கு, இராமன் என்பது தசரதராமனை உணர்த்திற்று.

5. அர்த்தம்—பயன்.

(உ - ம்.) வீடுபேறு கருதி ஹரியை வணங்குக.

இங்கு, வீடுபேறு என்னும் பயனால் ஹரி என்பது திருமாலை உணர்த்திற்று.

6. ப்ரகரணம்—சந்தர்ப்பம்.

(உ - ம்.) தேவர் கட்டளையிட்டபடியே.

இங்குப் பணியாள் அரசனை நோக்கிக் கூறுவதாகிய இவ்வாக்கியத்தில் தேவர் என்னும் பலபொருளொருசொல் அரசனை உணர்த்திற்று.

7. லிங்கம்—தருக்க நூற் பிரசித்தமான ஹேது. தன் பொருளையன்றிப் பிறபொருள் உணர்த்தாமை. [வேறு பொருளில் சேராத தன்மை.]

(உ - ம்.) பூப்ருத்து கோபித்த காரணம்.

இங்கு, பூப்ருத்து என்னுஞ்சொல் கோபித்தலாகிய செயலால், மலையை உணர்த்தாமல் அரசனை உணர்த்திற்று.

8. வேறு சொல்லின் சந்நிதி - வேறு சொல் அடுத்திருத்தல்.

(உ - ம்.) தேவன் புராரி.

இங்கு, அடுத்திருக்கின்ற 'புராரி' என்னும் வேறு சொல்லினால், 'தேவன்' என்பது சிவனைக் குறித்தது.

9. ஔசித்தியம் - தகுதி.

(உ - ம்.) ஸம்ஸாரத்தைப் பொறுக்க முடியாத உலகத்தார், அதனைக் கெடுத்தற்குத் தேவனை வணங்குகின்றனர்.

இங்குத் தேவன் என்னுஞ்சொல் தகுதியினால் இறைவனை உணர்த்திற்று.

10. சாமர்த்தியம்—காரணம்.

(உ – ம்.) மதுவினால் மதங்கொண்ட குயில்கள்.

இங்கு, 'மது' என்னுஞ் சொல், குயில்களுக்கு மதத்தை உண்டு பண்ணுங் காரணத்தால் வஸந்த ருதுவை உணர்த்திற்று.

11. தேசம்—இடவிசேடம்.

(உ - ம்.) வைகுண்டத்தில் வாழுந் தேவன்.

இங்கு, தேவன் என்னுஞ்சொல் இடவிசேடத்தால் திருமாலை யுணர்த்திற்று.

12. காலம்—சமயம்.

(உ - ம்.) இரவில் சித்திரபானு நன்றாய் விளங்குகின்றது.

இங்கு, சித்திரபானு என்னுஞ்சொல், சமயத்தால் சூரியனை உணர்த்தாமல் தீயை உணர்த்திற்று.

13. ஆங்கிகம்—உறுப்புக்களின் செயல்.

(உ - ம்.) கரும்பு இவ்வளவு நீளம் வேண்டும்.

இங்கு, 'இவ்வளவு' என்பது கையின் செயலால் உணர்த்தப்பட்டது.

மேற்கூறப்பட்டவை அபிதையின் நியாமகங்கள் ஆகும். இனி,

இலக்கணையை நோக்குவோம்.

ஒரு சொல்லிற்கு உரிய பொருள் பொருந்தாத இடத்தில் அதன் தொடர்புடைய வேறொரு பொருளைப் பிரசித்தியினாலோ, பலத்தைக் கருதியோ நாம் கொள்கின்றோம். அவ்வாறு கொள்ளுதற்குரிய வியாபாரம் இலக்கணை எனப்படும். ஆகலின் இலக்கணை — ரூடி (பிரசித்தி) என்றும், பலன் என்றும் இரண்டு வகைப்படும். ரூடியை நிரூடம் என்றும் சொல்லுவர். ரூடியில் வ்யங்க்யம் இருக்காது; பல லக்ஷணையில் வ்யங்க்யம் இருக்கும். இது முக்கிய வேறுபாடு.

நிரூடமாவது — செஞ்சொற்பொருள் போல எல்லாராலும் அறியப்படுவது. உதாரணம்: வற்றல், பொங்கல் என்பன. இனி, வேப்பெண்ணெய் என்பதும் இது. இச்சொல்லில் எண்ணெய் என்பது எள்ளினது நெய் என்னும் தன் பொருளை விட்டு எள்ளில் எண்ணெய் போல், வேப்பமுத்தில் உள்ள பசை ரூபமான சாரத்தை உணர்த்துகிறது. இவ்வாறு பொருள் கொள்ளுதற்குக் காரணம் பிரசித்தியே.

இனி, பல லக்ஷணையாவது யாதேனுமொரு பலனைக் கருதிப் பொருள்கொள்வது.

'காசிநகரம் கங்கையி லிருக்கின்றது' என்பதில், கங்கை யென்பதன் சொற்பொருள் நீரோட்டமாகலின், அதில் காசிநகர் இருப்பது பொருந்தாமையின், சொற் பொருள் அமையவில்லை. பொருள் அமைதியின்-

பொருட்டு, கங்கை யென்னுஞ் சொல்லுக்குக் கங்கை யின் அண்மையிலுள்ள கரை என்று பொருள்கொள்-வது பலலக்ஷணை எனப்படும். பலமாவது, கங்கையின் குளிர்ச்சி, தூய்மை முதலியவை இந்நகரத்துக்கு அமை தல் ஆகும். இது வ்யங்க்யம். இனி இவ்வாறன்றி,

காசிநகரம் கங்கைக் கரையில் இருக்கின்றது என்றால், கங்கையின் தண்மை, தூய்மை முதலியன இந்நகரத்திற்கு வருதலில்லை. ஆதலின், காசிநகரம் கங்கையிலிருக்கின்றது என்று சொல்லப்பட்டது.

இனி நிரூட லக்ஷணை, கௌணி என்றும் சுத்த என்றும் இரண்டு வகை யாகும். சொல்லுக்கும் பொரு ளுக்கும் இருக்கும் தொடர்பு ஒப்புமையுடையதாயின் கௌணி எனப்படும்.

இராமன் சிங்கக் குட்டி

என்பதில், சிங்கக்குட்டி இராமனுக்குக் குணத்தால் ஒப் புமையுடையதாகும். யானை, குதிரை முதலியவற்றின் உருவம் எழுதிய படத்தை யானை, குதிரை என்று சொல்வதும் கௌணியேயாகும்.

இனி, தொடர்பு ஒப்புமையில்லாததா யிருக்கு மாயின் அது சுத்த எனப்படும். அண்மைத்தன்மை, ஸம்யோகம், விபரீத பாவம், காரிய காரண பாவம், உடைமையும்உடையானுமாகிய தன்மை, உறுப்பு உறுப்பியின் தொடர்பு முதலியனவெல்லாம் ஒப்புமை இல்வழியால் வரும் தொடர்பாகும்.

1. 'நெய் என்பது ஆயுளாகும்' என்பது காரிய காரண பாவம். ஆயுளுக்குக் காரணமாயிருக்கின்ற நெய் காரியமாகவே சொல்லப்பட்டுளது. இவ்வாறு சொல்வது நெய் தப்பாமல் ஆயுளை மிகுவிக்கும் என்பது கருதி. இது பலன்.
2. அரசனுடைய பணியாளன் சொல்லியதை அரசனுடைய உத்தரவாகக் கொள்வது உடைமையும் உடையானுமாகிய தொடர்பினதாகும்.
3. விரலிலிருக்கும் மோதிரத்தைக் கையிலுள்ள மோதிரம் என்பது உறுப்பு உறுப்பியின் தொடர்பாகும்.

இவ்வாறே பிறவும் அறிக.

இனி, பல லக்ஷணையைப் பொருள்வேறுபாடு கருதி விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும்விடாத இலக்கணை என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம்.

விட்ட இலக்கணையாவது—சொல்லின் பொருள் அமையாதவிடத்து அச் சொல்லின் பொருள் முழுவதும் விட்டுவிடுதல். மேற்கூறிய 'காசிநகரம் கங்கையிலிருக்கின்றது' என்பதுவே இதற்கு உதாரணமாகும். இங்குக் கங்கை என்னுஞ் சொல்லின் பொருள் முழுதும் இல்லாதொழிந்தமை அறிக. இதனை ஜஹல்லக்ஷணை என்பர்.

*சிவஞான முனிவர், இலக்கணை — விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூவகைப்படும் என்று கூறி, 'கங்கையின்கண் இடைச்சேரி' என்புழி, இடைச்சேரி கங்கைக்கரைக்கண் இருத்தலின் விடாத இலக்கணை என்றார். இங்கு, கங்கையின் சொற்பொருள் முழுவதும் விடப்பட்டு,

* நன். பெயர். சூ. 12—உரை

கரை என்னும் வேறொரு பொருள் இலக்கணையால் கொள்ளப்பட்ட தாகலின் இது விட்ட இலக்கணையே யாகும்.

இனி, ஒரு மந்தனைக் குறித்து 'இவன் நல்ல ஸமர்த்தன்' என்பதும் இந்த லக்ஷணையே. இதில் ஸம்பந்தம் விபரீதமானதாயிருத்தலின் இதனை விபரீதலக்ஷணை என்பர். மந்தத் தன்மையின் மிகுதியைக் குறிப்பது பலன்.

இனி, 'திங்கள் விரவிய பெயரினுள்' என்பதில், திங்கள் என்பதற்கு அதன் பரியாயப்பெயராகிய மதி என்பதனைக் கொண்டு அதற்குப் புத்தி என்னும் பொருளில் இலக்கணை கொள்கின்றனர். இது லக்ஷித லக்ஷணை எனப்படும்.

விடாத இலக்கணையாவது — தயிர் வருகிறது என்பது. இதில், தயிர், தானே வருதல் அமையாமையின் தயிர்க்காரி தயிர் கொண்டுவருகின்றாள் என்று பொருள் கொள்கின்றோம். அதனால் இலக்கணையாயிற்று. இங்குத் தயிர் வருதலும் உண்மையின் அச் சொல்லின் பொருளும் அமைகின்றது. ஆதலின் விடாத இலக்கணை எனப்பட்டது. இங்கு எளிதாகக் கூறியது பலன் ஆகும். அதாவது, 'தயிர்க்காரி தயிர் கொண்டுவருகின்றாள்' என்று சொல்லவேண்டுவதனை, 'தயிர் வருகிறது' என்று எளிதாகச் சொல்லியிருப்பது அறிக. இனி, இவ்வாறன்றித் 'தயிர்க்காரி வருகின்றாள்' என்றால், அவள் தயிர் கொண்டுவருதல் ஒரு தலையாகப் பெறப்படாமையின் அவ்வாறு கூறுதல் அமையாது. இது அஜஹல்லக்ஷணை எனப்படும்.

இனி, விட்டும்விடாத இலக்கணையாவது, யாதா னும் ஒரு பகுதியில் சொல்லின் பொருள் அமையாதிருப் பது. வெள்ளத்தால் சில வீடுகள் அழிந்தபோது, 'வெள்ளத்தால் அவ்வூர் அழிந்தது' என்பது உதா ரணம். இங்கு, ஊர் என்னும் சொல்லின் பொருள், ஒரு கூற்றில் (வீடுகள் அழிந்த பகுதியில்) அமைந்து, ஒரு கூற்றில் (வீடுகள் அழியாத பகுதியில்) அமையா மையின், விட்டும் விடாத இலக்கணை. இங்கு, பெரும் பான்மையைக் குறிப்பது பலன். இது ஜஹதஜஹல் லக்ஷணை எனப்படும்.

இனி, பல லக்ஷணையில் இவையே யன்றி, 'சாரோப', 'சாத்யவஸாய' என்னும் இரண்டுவகை உள்ளன.

உவமேயத்தைக் கூறி அதற்கு உவமானத்தின் பேதமின்மையைச் சொல்வது ஸாரோபம் எனப்படும்.

முகம் சந்திரனகும்.

முகத்துக்கும் சந்திரனுக்கும் உள்ள வேற்றுமையைக் குறிக்காமலே அபேதம் என்னும் நிலையில் இது கூறப் பட்டுளது. இங்கு, சந்திரன் என்பதற்குச் சந்திரனை ஒத்தது என்பது இலக்கணை. சந்திரரூபத்தின் பிரதீதி (அறிவு) பலன். உருவகவணியைத் தோன்றுவிப்பது இந்த இலக்கணையே.

இனி, உவமேயத்தைச் சொல்லாமலே அதன் இடத்தில் உவமானத்தைப் பிரயோகிப்பது ஸாத்யவ ஸாயம் எனப்படும்.

"சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்"

என்பது உதாரணம். இங்கு, மகளிர்முகத்தை முகம் என்னுஞ் சொல்லாற் சொல்லாமல் தாமரைமலர்

என்னுஞ் சொல்லால் சொல்லியிருப்பதனால் ஸாத்யவஸாயம் ஆகும். இங்கும் ஒப்புமைப் பொருளில் இலக்கணை. முழுவதும் வேற்றுமையின்மை இங்குப் பலன். இந்த இலக்கணை உயர்வுநவிற்சியணி (பேதகாதிசயோக்தி) ஆகின்றது.

இனி, கௌணியிலும் ஸாரோப, ஸாத்யவஸாயம் கொள்ளப்படும். ஆகலின் கௌணஸாரோப, கௌண ஸாத்யவஸாய; சுத்த ஸாரோப, சுத்த ஸாத்யவஸாய என்று நான்கு வகை ஆகும். இவை மேற்கூறிய 'விட்ட இலக்கணை' முதலிய மூன்றோடும் கூட்ட, பலலக்ஷணை ஏழ் ஆகும்.

இனி, லக்ஷணை—ரூடியில் 8 வகை என்றும், பலனில் 32 வகை என்றும், ஆக 40 ஆகும் என்றும், அவற்றையும் பதத்திலிருப்பது, வாக்கியத்திலிருப்பது என்னும் இரண்டு வேற்றுமையான் 80 வகையாகக் கொள்ளலாம் என்றும் கூறியுள்ளனர். நிற்க.

ஆசிரியர் தொல்காப்பியனார், வேற்றுமை மயங்கியலில் ஆகுபெயரின் இலக்கணத்தைப்பற்றி நான்கு சூத்திரங்கள் கூறியுள்ளார். அவற்றுள் முதற்சூத்திரம்,

> "முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்
> சினையிற் கூறு முதலறி கிளவியும்
> பிறந்தவழிக் கூறலும் பண்புகொள் பெயரும்
> இயன்றது மொழிதலும் இருபெய ரொட்டும்
> வினைமுத லுரைக்குங் கிளவியொடு தொகைஇ
> அனைய மரபினவே ஆகுபெயர்க் கிளவி"

என்பது. இதில் ஆகுபெயர்களுள் முக்கியமானவை கூறப்பட்டுள.

"அளவும் நிறையும் அவற்றோடு கொள்வழி
உளவென மொழிப உணர்ந்திசி னோரே"

என்பது மூன்றாஞ் சூத்திரம். இதில் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் ஆகுபெயராய் வரும் என்பது கூறப் பட்டுளது. இனி, இரண்டாஞ் சூத்திரத்தால் ஆகுபெயரின் வகைகளை உணர்த்தியுள்ளார்.

"அவைதாம்,
தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணலும்
ஒப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்
அப்பண் பினவே நுவலுங் காலை
வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்"

என்பது அச்சூத்திரம். ஆகுபெயர்கள் தத்தம் பொருட்கு இயைந்தனவற்றுமேலனவும், இயையாதனவற்றுமேலனவும் என இருவகையாய் நிற்கும் என்று இளம்பூரணர் விளக்கியுள்ளார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஆகுபெயர்கள் தத்தம் பொருளின் நீங்காது நின்று தம்பொருளின் வேறுஅல்லாத பொருளோடு புணர்தலும், தம்பொருட்கு இயைபு இல்லாத பிறிதுபொருளைச் சுட்டிநிற்றலும் என இரண்டு இயல்புகளை உடையன என்றனர். இவ் விருவரும் 'தத்தம் பொருள்வயின் தம்மொடு சிவணல்' என்பதற்குத் தெங்கு, கமுகு என்னும் முதற்பெயர் சினைமேல் நின்று தத்தம் பொருள்களைத் தருதலையும், 'ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டல்' என்பதற்குக் குழிப்பாடி *நேரிது என்பதையும் உதாரணமாகக்

* மலையாளத்தில் நேரியது என்பது ஒரு வகை அங்கவஸ்திரத்துக்குப் பெயராய் வழங்குகின்றது. நேரிது என்பது நேரியது என்னும் ஆடை ஆகுமாயின் அச்சொல் ஆகுபெயராகாது.

காட்டியுள்ளனர். குழிப்பாடி என்பது ஓர் ஊர். அது அவ்வூரில் நெய்த ஆடையை உணர்த்திற்று. இங்கு, 'குழிப்பாடி' என்பது ஒப்பில்லாத வழியால் பிறிது பொருள் சுட்டிற்று. 'முதலும் சினையும், பண்பும் பண்பியும் முதலான ஒற்றுமை இல்லாமை அறிக' என்று சேனவரையர் விளக்கம் எழுதியுள்ளார்.

நன்னூலார், 'பொருள் முதலாறேடு' என்னுஞ் சூத்திரத்தில் பதினைந்து பெயர்களை எடுத்தோதியுள்ளார். அச்சூத்திரத்தில் அளவை என்னுஞ்சொல் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நான்கு அளவையும்குறித்தது. அவர், தொல்காப்பியனர் கூறியாங்கு ஆகுபெயர்களின் இரண்டு வகையைக் கூறிற்றிலர்.

தொல்காப்பியனர் கூறியுள்ள வகைகளுள் ஒன்று, 'ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டல்' என்பது. ஆகலின் மற்றொன்று, ஒப்பு உள்வழியால் தம்பொருளை உணர்த்துவதாகும். அவ்வாறுயின், அது வடமொழியில் கூறியுள்ள ஸாத்ருசிய ஸம்பந்தம் உடையதாகும். ஸாத்ருசியம் ஒழிந்த காரணகாரிய பாவம் முதலியவையெல்லாம் ஒப்பில் வழியால் பிறிது பொருள் சுட்டுதலே. நன்னூலார் கூறியுள்ள ஆகுபெயர்களுள் ஒப்பு உள்வழியால் தம்பொருளை உணர்த்துவது காணப்படவில்லை. பொருள் (முதல்), சினை, குணம், தானி இவை விடாத ஆகுபெயர்களாகும். கருவி, காரியம் என்பவை காரண காரிய பாவமாகும். கருத்தன், உடைமையும் உடையானுமாகிய உரிமையதாகும். இனி, ஆதியுள் என்பதனுல் உரைகாரர்கள் காட்டுகின்ற பாவை வந்தாள், காளை வந்தான் என்பவை வட

மொழியில் குறித்த கௌணி வகைகளுள் ஸாத்ய வஸாயம் ஆகும். தொல்காப்பியனர் கூறிய,

கிளந்த வல்ல வேறுபிற தோன்றினும்
கிளந்தவற் றியலா னுணர்ந்தனர் கொளலே

என்னும் நான்காஞ் சூத்திரத்தில், உரைகாரர்கள் காட்டுகின்ற பாவை வந்தாள் என்பதிலுள்ள ஆகு பெயர் ஒப்பு உள்வழியால் பொருளுணர்த்துவது ஆகும். இவற்றுள் ஆசிரியர் இருவருமே ஒப்பு உள்வழியால் பொருள் செய்யும் ஆகுபெயரைக் கிளந்தோதிற்றிலர் என்பது புலனாகும்.

இனி, தொல்காப்பியனர் கூறிய இருபெயரொட்டு ஆகுபெயருக்கு, 'பொற்றொடி' (வந்தாள்) என்பதையே உரையாசிரியரும் சேனாவரையரும் உதாரணம் காட்டி யுள்ளனர். அது அன்மொழித் தொகைக்கு உரிய உதாரணமென்று கருதி, இருபெயரொட்டு ஆகுபெயர் ஆகாது என்று அதனை நீக்கி, 'மக்கட் சுட்டு' என்னுஞ் சொல்லை உதாரணங் காட்டினர் நச்சினர்க்கினியர். "மக்கட்சுட்டு என இரண்டும் இல்லாததோர் பெற்றியை உணர்த்தாது மக்களை யுணர்த்திற்று, நன்கு மதிக்கப்படும் பொருள் மக்களே யாதலின்" என்று அவர் விளக்கம் எழுதியிருப்பது காண்க.

கல்லாடர், 'இரு பெயரொட்டு – பொற்றொடி. இஃது அன்மொழித்தொகையன்றே எனின், படுத்த வோசைப்பட்டவழி அன்மொழித் தொகையாம்; எடுத்தலோசைப்பட்ட வழி ஆகு பெயராகும் என்பது' என்றெழுதியிருக்கின்றார்.

தெய்வச் சிலையார், 'இரு பெயரொட்டு என்பது இரண்டு பெயர் தொக்கு ஒரு சொன்னீர்மைப்பட்டு மற்றொரு பொருட்குப் பெயராகி வருவது. அது 'துடியிடை' என்பது. ஆகுபெயராவது ஒட்டுப்பட்ட பெயரோடு ஒற்றுமைப்பட்டு வரும்; அன்மொழித் தொகை அப்பொருளின் வேறுபட்டு வரும்' என்றும்,

'பொற்றொடி என்பது வேற்றுமைத் தொகை. அதனை உடையாட்குப் பெயராகியவழி அன்மொழித் தொகையாம். ஈண்டு, தொடிக்கு அடையாகி நின்ற பொன் தொடியையுடையாளது செல்வத்தைக் காட்டுதலின், இவ்விரண்டு சொல்லும் அதனை உடையாளைக் குறித்தவாறும் அறிந்துகொள்க' என்றும் எழுதியிருக்கின்றார்.

சிவஞான முனிவர், 'இருபெயரொட்டு ஆகுபெயர் இருமொழிக்கண் வந்ததன்றே எனின், அன்று. என்னை? வகரக்கிளவி, மக்கட்சுட்டு என்னும் இரு பெயரொட்டு ஆகுபெயருள் வகரமும், மக்களுமாகிய அடை மொழிகள் கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப் பொருளை விசேடித்துநில்லாது, எழுத்தும் பொருளுமாகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்ப, கிளவி, சுட்டு என்பனவே ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்த இருபெயரும் ஒட்டி நிற்குமாகலின்' என்றும், 'மக்கள் என்பது பொதுமையின் நீக்கிப் பொருளை விசேடித்து நிற்ப, சுட்டு என்பது விடாத ஆகுபெயராய், அப்பொருளின் உயர்ச்சி உணர நிற்ப, இருபெயரும் ஒன்றனை ஒன்று விசேடித்து இன்னது இது என வருமாறு காண்க' என்றும் எழுதியிருக்கின்றார்.

சூத்திரத்தில், *"இரு பெயரொட்டு" என்றது இருபெயர்த் தொகை என்றபடி. வேற்றுமைத் தொகை, பண்புத்தொகை, உம்மைத் தொகை, அன்மொழித்தொகை இந்நான்கு தொகைகளும் இருபெயரொட்டே. இவற்றுள் வேற்றுமைத்தொகை முதலிய மூன்றற்கும் பொருள் கொள்ளுங்கால் இலக்கணை வேண்டுதல் இன்று. பொற்றொடி என்னும் வேற்றுமைத்தொகை பொன்னாலாகிய தொடி என்று பொருள் அமையும்; இலக்கணை கொள்ளவேண்டுதலின்று. அவ்வாறே பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் இலக்கணை கொள்ளாமலே பொருள் அமைவுறும். அன்மொழித்தொகைக்குப் பொருள் கூறுங்கால் இலக்கணை கொள்ளுதல் இன்றியமையாததாகின்றது. பொற்றொடி வந்தாள் என்னுமிடத்து, பொற்றொடி என்னும் எழுவாய் வந்தாள் என்னும் உயர்திணைப் பயனிலை கொண்டு முடியாதன்றே? ஆகலின் வாக்கியப் பொருட்குக் கேடு வருகின்றது. அதனால் பொற்றொடி என்னுந் தொகையில் இரண்டு சொல்லிலும் இலக்கணைகொண்டு, பொற்றொடி உடையாள் என்று பொருள் கொள்கின்றோம்.

அதனால், அன்மொழித் தொகை இருபெயரொட்டு ஆகுபெயர் ஆகின்றது. அது கருதியே, 'அன்மொழிப் பொருள்மேல் நின்ற இரு பெயரொட்டும்' என்று சேனாவரையர் எழுதினாராவர்.

---

*இரு பெயரொட்டு ஆகுபெயரைப்பற்றி, மயிலாப்பூர் ஸம்ஸ்க்ருதகாலெஜ் பிரின்ஸ்பால், பண்டிதராஜ, மீமாம்ஸா அலங்கார, மீமாம்ஸா கேஸரி, வித்யாரத்ன, ப்ரஹ்மஸ்ரீ, கே. பாலசுப்பிரமணிய சாஸ்திரிகள் விளக்கமாக அறிவித்தார்கள்.

இக்கூறியவற்றுல், இளம்பூரணரும் சேனவரை யரும் காட்டிய உதாரணம் அமைவுடையதே என்பதும் சேனவரையர் எழுதியுள்ள விளக்கம் கொள்ளற் பாலதே என்பதும் பெறப்படும். ஆகலின், "கணங் குழை" என்பதற்கு 'ஆகு பெயர்' என்று பரிமேலழகர் கூறிய இலக்கணம் கொள்ளற்பாலதே.

இவற்றுல், அன்மொழித் தொகைப் பொருள் கொள்ளுமிடத்திலெல்லாம் இலக்கணை வரும் என் பதும், அதனுல் இருபெயரொட்டாகுபெயர் என்று அதனை ஆசிரியர் கூறியுள்ளார் என்பதும் நன்கு விளங்கும்.

இனி, வடமொழியில் லக்ஷணை என்பது பெயர்ச் சொல், வினைச்சொல் இரண்டுமே தம் பொருள் பொருந் தாதவிடத்து, இயைபுடைய பிறிதொருபொருளை யுணர்த்தற்கண் வரும். ஆசிரியர் தொல்காப்பியனர் பெயர்ச்சொல் அவ்வாறு பிறிது பொருளுணர்த்தற்கு மட்டும் ஆகுபெயரென்று பெயரிட்டுக் கூறினர். அவர் காலத்தில் வினைச்சொல் அவ்வாறு பிறிது பொரு ளுணர்த்தி வந்திலது போலும். பிற்காலத்தில் அவ்வாறு வந்ததனை ஆகுவினை என்று பெயரிட்டு அமைத்திருத் தல் வேண்டும். அவ்வாறு நூலாசிரியர் யாருமே பெய ரிட்டிலர். ஆகலின், உரையாசிரியர்கள் வடநூலிலுள்ள லக்ஷணை என்னும் சொல்லைத் தொடர்புடைய பிறிது பொருளுணர்த்தும் வினைச்சொற்கு வழங்கியுள்ளனர். நன்னூல் உரைகாரர்,

"ஆன்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை யிடைநிலை"

என்னுஞ் சூத்திரத்தின்கீழ், 'தருவினையை அறைவினை என்றது இலக்கணை. மேலைச் சூத்திரத்தில் வருவதூஉம் அது' என்று எழுதியிருத்தல் காண்க. பரிமேலழகர் திருக்குறளில் பல இடங்களில் ஆகுபெயரென்று பெயர் குறித்தவர், 'வானுயர் தோற்றம் எவன் செய்யும்' என்னும் பாட்டில், 'வானுயர் தோற்றம்', "வான் தோய் குடி" என்றாற் போல இலக்கணைவழக்கு' என்றும்,

"அனிச்சப்பூக் காலைனையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை"

என்னுஞ் செய்யுளின்கீழ், 'மக்கட்குரிய சாக்காடும், பறைபடுதலும் இலக்கணைக் குறிப்பால் நுசுப்பின் மேல் ஏற்றப் பட்டன' என்றும்,

"கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று"

என்னுஞ் செய்யுளின்கீழ், 'தின்னும் என்பது இலக்கணைக் குறிப்பு' என்றும், இம் மூன்றிடத்தில்மட்டுமே இலக்கணை என்ற சொல்லைக் குறித்துள்ளார். இவ்விடங்களில் வினைச்சொல்லே பிறிது பொருளை உணர்த்தியுள்ளமை அறிக. 'தின்னும்' என்பதற்கு, 'தின்பன போன்று நலியாநிற்கும்' என்று பொருள் எழுதியிருத்தல் அறியத்தக்கது. இல்வாறு இலக்கணை என்னுஞ் சொல்லை வினைச்சொல் பிறிதுபொருளுணர்த்துமிடத்தேயே கொள்ளுதல் மரபாயுளது என்றறிக.

வடமொழியிலும் அதனையொட்டித் தெலுங்கு, கன்னடம், மலையாளம் இம் மொழிகளிலும் ஆகுபெயரின் இலக்கணத்தை இலக்கண நூலிற் கூறிற்றிலர்;

காப்பிய விலக்கண நூலில்—காவ்யாலங்கார நூலில்—கூறியுள்ளனர். ஆசிரியர் தொல்காப்பியனுர் தருக்க நூல் அலங்கார நூல் முதலியவற்றிற் கூறியுள்ள இலக்கணையை வேற்றுமை மயங்கியலில் கூறியிருக்கின்ருர்; இவ்வாறே இலக்கண நூலிற் கூறுதற்குரிய வல்லாத சிலவற்றையும் சொல்லதிகாரத்தில் கூறியுள்ளார்.

"எப்பொரு ளாயினும் அல்ல தில்லெனின்
அப்பொரு ளல்லாப் பிறிதுபொருள் கூறல்."

"அப்பொருள் கூறின் சுட்டிக் கூறல்"

என்பன போன்றவை காண்க.

இதுவரை செஞ்சொல், இலக்கணைச்சொல் இவற்றை ஒருவாறு அறிந்தோம்.

இனி, குறிப்புச்சொல்லை அறிவோம்.

மேலேகூறிய அபிதை என்னும் வியாபாரம் தன் செயலால் சொற்பொருளை அறிவித்துவிட்டு நின்று விடும். அவ்வாறே இலக்கணை என்னும் வியாபாரமும் தன் செயலால் இலக்கணைப் பொருளை (லக்ஷ்யார்த்தத்தை)த் தெரிவித்துவிட்டு நின்றுவிடும். பின், அவ்விரண்டு பொருளினின்றும் அவற்றின் வேறுய தொருபொருளில் எந்த வியாபாரத்தினுல் அறிவு செல்கின்றதோ அது வ்யஞ்ஜனை எனப்படும். அபிதைக்குமேல் தோன்றுவது அபிதா மூல வ்யஞ்ஜனை; லக்ஷணைக்குமேல் தோன்றுவது லக்ஷணை மூல வ்யஞ்ஜனை.

பல பொருளையுடைய சொற்கு அபிதா நியாமகங்களின் திறத்தால் அவ்விடத்திற்குரிய பொருள் உறுதிப்படுகின்றது. அப்பொருளை அறிவித்ததனேடு

அபிதையின் வியாபாரம் முடிந்துவிடுகின்றது. என்னெனின், சப்தம், புத்தி, கர்மம் இவற்றுக்குப் பிரவிருத்தி ஒரு தடவையே; அதன்பின் வியாபாரம் இல்லை என்றல் எல்லார்க்கும் உடன்பாடு. இதன்படி, ஒருகால் தன்பொருளை அறிவித்து நின்றுவிட்ட அபிதைக்கு வேறுபொருளை உணர்த்துந் திறன் இல்லை. ஆயின், சிலவிடத்தில் அபிதை சொற்பொருளை உணர்த்தி நின்றபின்னும் அச்சொல்லின் சிறப்பினால் வேறொரு பொருள் நல்லறிஞருள்ளத்தில் தோன்றும். அபிதை ஒருகால் தன் செயலாற்றி நின்றுவிட்டதனால் இப்பொருள் அபிதையால் ஆகியதன்று. ஆகலின் இது வ்யஞ்ஜனையினால் ஆகியதே. இவ்வ்யஞ்ஜனைக்கு அடி அபிதையேயன்றிப் பிறிதில்லை. ஆதலின் இது அபிதா மூல வ்யஞ்ஜனை எனப்படும். அபிதை, தன்னில் தோன்றிய பொருளினால் வ்யஞ்ஜனை என்னும் புதிய வியாபாரத்தைத் தோன்றுவித்தது. இவ் வ்யஞ்ஜனை செய்யுளில் ஒரு சொல்லாலும் தோன்றும்; செய்யுட் பொருளினாலும் தோன்றும். இவ்வாறு தோன்றும் பொருள் சொற்பொருளிற் காட்டில் சிறப்புடையதாய் இருப்பின் த்வனி எனப்படும். அல்லாக்கால் சிறப்பில்லாத வ்யங்க்யம் (குணீபூத வ்யங்க்யம்) ஆகும்.

த்வனி—ரஸத்வனி, பாவத்வனி, அலங்காரத்வனி, வஸ்துத்வனி என்று நான்கு வகைப்படும். இவற்றுள் ரஸத்வனியும் பாவத்வனியும் சிறப்புடையன.

இங்கு, அபிதா மூல வ்யஞ்ஜனையை நோக்குவோம்:

பாக்கத்தில் ஒருவன் வைத்தான்
பங்கயக் திருந்த பொன்னை

ஆகத்தில் ஒருவன் வைத்தான்
அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தின் மின்னே முன்னே
வென்றநுண் ணிடையி னாளை
மாகத்தோள் வீர பெற்றூல்
எங்ஙனம் வைத்து வாழ்தி?

இச்செய்யுளில், ஒருவன் பாகத்தில் வைத்தான்; ஒருவன் ஆகத்தில் வைத்தான்; ஒருவன் நாவில் வைத்தான். இவ்வாறு ஒரொருவரும் தம்முடம்பில் ஒரோர் உறுப்பில் வைத்தனர் என்றதனால் பிரகரணத்துக் கியைய, 'எங்ஙனம்' என்பதில் **ஙனம்** என்பதற்கு **இடம்** என்னும் பொருள் அபிதையால் தோன்றிற்று. ஆகலின், 'நீ சீதையை உன் உடம்பில் எந்த இடத்தில் வைப்பாய்?' என்னும் பொருள் பெறப்பட்டது. இதனோடு அபிதையின் வியாபாரம் நின்றுவிட்டது. ஆயின், இதன்மேல், 'நீ சீதையைக் கொண்டுவரின் எப்படி வாழ்வாய்! நீதான் இறந்துபட்டிடுவாயே!' என்னும் பொருள் காப்பியச்சுவை துய்க்கும் அறிஞர்க் குத் தோன்றும். இப்பொருள் சிறப்புடையதாயிருத் தலின் த்வனி ஆகும். இத் த்வனி 'ஙனம்' என்னுஞ் சொல்லினாற் போந்தது. ஙனம் என்னுஞ் சொல்லன்றி வேறு சொல்லைக் கூறியிருப்பின்— "எவ்விடன் வைத்து வாழ்தி" — என்று கூறியிருப்பின் — இப் பொருள் தோன்றாது. ஆகலின், இது சப்த சக்தி மூல த்வனி ஆயிற்று. மேற்கூறிய த்வனி வகை நான்கனுள் இது வஸ்துத்வனி; வஸ்து—செய்தி.

இந்த த்வனி விஷயத்தில் கருத்து வேறுபாடுகள் பல உள. அவற்றுள் இது ஒரு சாரார் கொள்கை.

இனி லக்ஷணமூல வ்யஞ்ஜனையை நோக்குவோம்:

ஒரு வாக்கியத்தில் முக்யார்த்தம் அமையாத விடத்தில் லக்ஷணையைக் கொள்கின்றோமன்றே? மேற் காட்டிய

காசி நகரம் கங்கையில் இருக்கின்றது

என்னும் வாக்கியத்தில், கங்கை என்னுஞ் சொல்லிற்கு ப்ரவாஹம் என்னும் பொருளே முதலில் தோன்றும். இதுவே முக்யார்த்தம்; இப்பொருள் அபிதையால் வந்தது. இதனோடு அபிதை நின்றுவிட்டது. வெள்ளத்தில் நகரம் இருத்தல் அமையாமையின் முக்யார்த்தத்துக்குக் கேடு வருகின்றது. ஆகலின், இங்கு, கங்கை என்பதற்குக் கங்கைக் **கரை** என்னும் பொருள் லக்ஷணையினால் கொள்ளப்பட்டது. அதனோடு லக்ஷணை நின்றுவிட்டது. இந்த லக்ஷணையினால் பலன் யாது? என்று ஆராயுங்கால், கங்கையின் குளிர்ச்சி, தூய்மை முதலியவற்றையுடைய கரை என்று, குளிர்ச்சி முதலியவை **கரைக்கு** அமைந்தது பலன் ஆயிற்று. இப்பலன் எதன் அடியில் தோன்றியது எனின், அபிதை லக்ஷணை இவைகளால் அன்று. ஆகலின் இது வ்யஞ்ஜனையின் வியாபாரமே. இவ்வாறு பல லக்ஷணைகளிலெல்லாம் பலனை அறிவிப்பது வ்யஞ்ஜனை எனப்படும். இது லக்ஷண மூல வ்யஞ்ஜனை ஆகும். வ்யஞ்ஜனையினால் தோன்றும் பொருள் வ்யங்க்யம் எனப்படும் என்று மேலே கூறப்பட்டுளது.

இனி பொருள் மூலமாகிய வ்யஞ்ஜனையை நோக்குவோம்:

கூறுவோன், முன்னின்று கேட்போன், கூறப்படுஞ் செய்தி, வாக்கியம் அறிவிக்கும் விதம், அண்மையி

லிருந்து கேட்பவர், காலம், இடம், பிரகரணம், காகு ஸ்வரம், சேஷ்டை (உடலுறுப்புக்களின் செயல்) இவை பத்திலும் உள்ள விலக்ஷணத்தால் வாச்யமாயோ, லக்ஷ்யமாயோ, வ்யங்க்யமாயோ உள்ளதொருபொருள் வேறொரு பொருளைத் தோன்றுவிக்கும். இதனால், சொல்லின் பொருளும் வ்யஞ்ஜகம் (வ்யஞ்ஜனைக்குச் சார்பாயுள்ள சொல்) ஆதல் புலனாகும்.

வ்யஞ்ஜனைவியாபாரத்துக்குச் சார்பாயிருக்குஞ் சொல் வ்யஞ்ஜகம் எனப்படும் என்பதும், வ்யஞ்ஜனையினால் தோன்றும் பொருள் வ்யங்க்யம் எனப்படும் என்பதும் முதலில் கூறப்பட்டுள்ளன.

ஆசிரியர் தொல்காப்பியனார்,

> 'பார்ப்பான் பாங்கன் தோழி செவிலி
> சீர்த்தகு சிறப்பிற் கிழவன் கிழத்தியொ
> டளவியன் மரபின் அறுவகை யோரும்
> களவிற் கிளவிக் குரியர் என்ப.' (செய். 181)

> 'பாணன் கூத்தன் விறலி பரத்தை
> ஆணம் சான்ற அறிவர் கண்டோர்
> பேணுதகு சிறப்பின் பார்ப்பான் மூதலா
> முன்னுறக் கிளந்த அறுவரொடு தொகைஇத்
> தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்' (செய். 182)

என்று கூறியிருப்பனவும் இவற்றையடுத்து, இடம், காலம் முதலியவற்றை அமைத்திருப்பதுவும் அறிதற்கு உரியன.

கூறுவோன், அண்மையிலிருந்து கேட்போன் முதலிய பொருள்களின் விசேடத்தால் நல்லறிஞர்-

கட்குச் சொற்பொருளின் பின் வேறுபொருள் தோன்றுதல் உண்டு. அது பொருளால் தோன்றுவதாகலின் பொருளும் குறிப்புச்சொல் (வ்யஞ்ஜகம்) ஆகும் என்று கொள்க.

சொற்பொருளினின்று தோன்றும் பொருட்குப் பழைய செய்யுட்களில் பல உதாரணங் காணலாம்.

நெடுங்கடல் அலைத்த கொடுந்திமிற் பரதவர்
கொழுமீன் கொள்ளா அழிமணற் குவைஇ
மீனெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய
சிறுதீ விளக்கில் துஞ்சும் நறுமலர்ப்
புன்னை ஓங்கிய துறைவனெ டன்னை
தான் அறிந் தன்றே இலளே ; பானாள்
சேரியம் பெண்டிர் சிறுசொல் நம்பிச்
சுடுவான் போல நோக்கும்
அடுபா லன்ன என் பசலை மெய்யே. (நற். 175)

துறைவனெடு நான் இருக்கக் கண்டிலளாயினும் சேரிப்பெண்டிர் கூறும் இழிவுரைகளை நம்பி அன்னை சினத்தொடு எனது பசலைமெய்யை நோக்குகின்றாள் என்பதுவே இப்பாட்டின் முக்கியமான பொருள். இதனோடு சொற்பொருள் முடிகின்றது. ஆகலின் அபிதைவியாபாரம் முடிவுற்றது. இப்பாட்டின் பொருள் சிறைப்புறம் நின்ற தலைவன் கேட்பக் கூறியதாகலின், 'இவளை வரைந்துகொடு சென்று வாழ்வாயாக' என்னும் பொருள் அறிஞருள்ளத்தில் தோன்றும். இப்பொருள் பாட்டின் பொருளால் தோன்றியதாகலின் அர்த்தமூல வ்யஞ்ஜனை ஆயிற்று. இதுவும் அபிதையினின்று தோன்றியதுவே.

இனி, வ்யங்க்யப் பொருளினின்று தோன்றும் வ்யங்க்யத்துக்கு உதாரணங் காண்போம்.

எல்லா உதுக்காண் ! எழின்மிகு காட்சி
தண்ணென் நிறைநீர்த் தடம்பெரும் பொய்கை
பரந்த தாமரைப் பாசடைக் குருகு
துளக்கமில் உடல தாகிப் பசுங்கலத்து
வஹியொளிர்ந் தாஅங் கொளிசெய் வதுவே.

இதில், பொய்கையில் தாமரையிலையில் குருகு அசைவின்றி நிற்கின்றது. இந்த எழில்மிகு காட்சியைக் காண் என்பது பாட்டின் முக்கியப் பொருள். அதனோடு அபிதை நின்றது. குருகு அசையாமல் நிற்கின்றது என்றதனால் அவ்விடம் மக்கள்வழக்கு இல்லாதது என்பது வ்யங்க்யம். அதினின்று அதுவே குறியிடத்துக் கேற்றது என்னும் வ்யங்க்யமும், அதனால் புணர்ச்சி நெடிது நிகழும் என்னும் வ்யங்க்யமும் தோன்றும். இவையெல்லாம் வ்யங்க்யத்தினின்று தோன்றும் வ்யங்க்யம். இதனை வடநூலார் 'அனுரணனத்வனி' என்பர்.

இனி, வேறோர் உதாரணம் :

வானுழை வாளம் பலத்தரன் குன்றென்று வட்கிவெய்யோன்
தானுழை யாவிரு ளாய்ப்புற நாப்பண்வண் தாரகைபோல்
தேனுழை நாக மலர்ந்து திகழ்பளிங் கான்மதியோன்
கானுழை வாழ்வுபெற் றுங்செழில் காட்டுமொர்
கார்ப்பொழிலே.

புறம் வெய்யோன் நுழையா இருளாய் இருக்கின்றது என்றதனால், அக் கார்ப்பொழிலுக்குள் மக்கள் வாரார் என்பது வ்யங்க்யம். அதனால் அவ்விடமே குறியிடத்துக்கேற்றது என்பதும் அங்கு அச்சமின்றி நெடிது

இன்புறலாம் என்பதும் வ்யங்க்யத்தினின்று தோன்றும் வ்யங்க்யமாகும்.

இனி, தொல்காப்பியனுர் வ்யங்க்யத்தினின்று பொருள் தோன்றுதல் உண்டு என்று கூறியுள்ளார்.

இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியன் மருங்கிற் றெளியு மோர்க்கே

என்பது காண்க. இறைச்சி — வ்யங்க்யம். இதில், "பொருளும் உளவே" என்றதனல் அப்பொருள் தோன்றுதல் அரிது என்பதும், "திறத்தியல் மருங்கிற் றெளியுமோர்க்கே" என்றதனல், அப்பொருள் அத் துறையிற் பயின்று தெளிந்த அறிவினை உடையோர்க் கே புலனுகும் என்னும் பொருள் போதரலின், அதனை அறிவார் அரியர் என்பதும் கூறினராயிற்று.

---

3. பன்மை சுட்டிய பெயர்

"ஒன்றே இருதிணைத் தன்பா லேற்கும்"

என்னுஞ் சூத்திரத்தின் உரையில் சங்கர நமச்சிவாயர் எழுதியிருப்பது :

'ஆசிரியர் தொல்காப்பியர்,

"பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்
ஒன்றே பலவே ஒருவ ரென்னும்
என்றிப் பாற்கும் ஓரன் னவ்வே"

எனப் பன்மைப் பொதுப் பெயர்கள், ஐம்பாலுள் உயர்-திணைப் பன்மைப்பாலொழிய ஏனை நாற்பாலினையும் ஏற்கும் என்றாராலோ எனின், செஞ்ஞாயிறு என்றுற் போலத் தன்னே டியைபின்மை நீக்கிய விசேடணத் தான் விசேடிக்கப்பட்டனவன்றி, செந்தாமரை என் றுற்போலப் பிறிதோடியைபு நீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டனவாகி, ஆண்மைப்பொதுப்பெயர், பெண்மைப்பொதுப்பெயர் என்றும், ஒருமைப்பொதுப் பெயர், பன்மைப்பொதுப்பெயர் என்றும் இனச்சுட்டுள வாய் வருதலின், இவற்றுட் பன்மைப்பொதுப்பெயர் பன்மை ஒழிதலும் ஒருமை ஏற்றலும் பொருந்தாது என்பது கருதி, "மறுத்தல்" என்னும் மதம்படத் "தன்பா லேற்கும்" என இவ்வாறு கூறினர்போலும்' என்று எழுதியுள்ளார். இவற்றை ஆராய்வோம் :

ஆண்மை சுட்டிய பெயர் உயர்திணை யாண்பாலை யும் அஃறிணை யாண்பாலையும், பெண்மை சுட்டிய பெயர் உயர்திணைப் பெண்பாலையும் அஃறிணைப்

பெண்பாலையுஞ் சுட்டுதல்போன்று, ஒருமை சுட்டிய பெயர் உயர்திணை யாணொருமை பெண்ணொருமை-யையும் அஃறிணை யொருமையையும், பன்மை சுட்டிய பெயர் உயர்திணைப் பலர்பாலையும் அஃறிணைப் பலவற் றுப்பாலையுஞ் சுட்டுதலே முறைமை என்பதை இக் காலத்தில் அனைவரும் உடன்படுவர். இவ்வாறே ஆண்மை சுட்டிய பெயர், பெண்மை சுட்டிய பெயர், ஒருமை சுட்டிய பெயர் இம்மூன்றனையுங் கூறிய ஆசிரி-யர் தொல்காப்பியனார், பன்மை சுட்டிய பெயரைக் கூறுமிடத்து இம்முறையின் வேறுபடக் கூறியதன் காரணம் யாதாகும் என்பதை நோக்குதல் வேண்டு மன்றே?

'ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்'

என்னுஞ் சூத்திரத்தின் உரையில், பன்மைப்பொதுப் பெயர் உயர்திணைப் பலர்பாலையும் அஃறிணைப் பலவற் றுப்பாலையுங் குறித்தற்கு உதாரணமாக, சங்கரநமச் சிவாயர், **'கோதைகள் இவர்**, கோதைகள் இவை', என்பனவற்றை எழுதியிருக்கின்றார். இவ்வுதாரணம் நன்னூலார்காலத்திற்கு அமையுமேயன்றித் தொல் காப்பியனார்காலத்திற்கு அமையாது. என்னெனின், தொல்காப்பியனார்காலத்தில் உயர்திணைச் சொற்களில் **கள்** விகுதி சேர்ந்து வருதல் இல்லை; அஃறிணைச் சொற் களிலும் [1]ஒரோவழியே கொள்ளப்பட்டது. இது,

---

1. அஃறிணை யியற்பெயர்கள், விகுதி பெறுமலே ஒருமை பன்மை இரண்டற்கும் வரும். நாய் வந்தது, நாய் வந்தன என விணைச்சொல்லால் பால் அறியப்படும். அதனால் ஈண்டுக் கள் விகுதி வேண்டுதல் இன்று. நம்பி நாயுடையன் என்பது போன்ற இடங்களில் பன்மையைக் குறித்தற்குக் கள் விகுதி வேண்டும்.

'கள்ளொடு சிவணு மஃறிணை யியற்பெயர்
கொள்வழி யுடைய பலவறி சொற்கே'

என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படும். 'கொள்வழி யுடைய' என்பதனால் யாண்டும் வருவதன்று என்பது போதருமன்றே? ஆகலின், அஃறிணைக்கண் 'கோதைகள் இவை' என்பது அமையினும், உயர்திணைக்கண் 'கோதைகள் இவர்' என்றல் அமையாது; இனி, உயர்திணைக் கேற்பக் 'கோதையர் இவர்' எனின் அஃது அஃறிணைக்கண் 'கோதையர் இவை' என்று வருதல் அமையாது. ஆகலின், பன்மையில் இருதிணைக்கண்ணுஞ் சேறற்குரிய பொதுப்பெயர் ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்தில் இல்லை என்பது தேற்றம். இங்கனம் உண்மையான், அவர் பன்மை சுட்டிய பெயர் உயர்திணைப் பலர்பாற்கு வரும் என்று கூறுதொழிந்தார். அவர் கூறிய நாற்பாற்கும் உதாரணமாக, யானை வந்தது, வந்தன, வந்தான், வந்தாள் என்று உதாரணங் காட்டினர் உரையாளர். மயிலை நாதரும் இவ்வாறே உதாரணங் கொடுத்துள்ளார். அவர், 'ஆண்மை பெண்மை... முறைப் பெயர்' என்னுஞ் சூத்திரத்தின் உரையில், 'யானை என்பது எல்லாவற்றிற்கும் பொது' என்று எழுதினராயினும் அதனைப் பலர்பாற்கு உதாரணமாகக் குறித்திலர்.

இனி, பன்மை சுட்டிய பெயர் ஒருமையைச் சுட்டி வரும் என்றல் அமையாதால் எனின், 'பன்மை சுட்டிய' என்னும் விசேடணத்தினால் பன்மையைச் சுட்டுதல் வேண்டும் என்பதுவேயன்றி, ஒருமையைச் சுட்டுதல் கூடாது என்று கோடல் ஆகாது. சேனாவரையர்,

"பன்மைப்பெயர் ஒருமை யுணர்த்துமாயினும் பிறவாற்றானுணர்த்தப்படாத பன்மையை ஒருகா லுணர்த்தலின் அப் பன்மையான் அவை வரைந்து சுட்டப்படுதலின் அப்பெயர வாயின. அற்றேனும், பன்மை சுட்டிய பெயரென்றமையாற் பன்மையே யுணர்த்தல் வேண்டுமெனின்—அற்றன்று : இயை பின்மை நீக்கலும் பிறிதினியைபு நீக்கலுமென விசே டித்தல் இருவகைத்து. வெண்குடைப் பெருவிறல் என்றவழிச் செங்குடை முதலியவற்றோடு இயைபு நீக் காது வெண்குடையோடு இயைபின்மைமாத்திரை நீக்கி, வெண்குடையானென்பதுபட நிற்றலின் அஃ தியை-பின்மை நீக்கலாம். கருங்குவளை என்றவழிச் செம்மை முதலானவற்றோடு இயைபு நீக்கலின், இது பிறிதினி யைபு நீக்கலாம். பன்மை சுட்டிய பெய ரென்பது, வெண்குடைப் பெருவிறல் என்பதுபோல, ஒருமை யியைபு நீக்காது, பன்மை சுட்டுதலோடு இயைபின்மை மாத்திரை நீக்கிப் பன்மை சுட்டு மென்பது பட நின் றது. அதனுன் விசேடிக்குங்காற் பிறிதினியைபு நீக்கல் ஒருதலையன்றென்க"

என்று எழுதியிருப்பது நோக்கற்குரியது. ஆயின், 'பன்மைப் பொதுப்பெயருட் பன்மை என்பது பிறி தோடியைபு நீக்கிய விசேடண மன்றெனத் தோன்றிய வாறே விசேட இலக்கணஞ் சிதைத்து இடர்ப்பட்டு உரை கூறுவாரும் உளர்' என்று இவ்வுரையைச் சங்கர நமச்சிவாயர் மறுத்துள்ளாராகலின் இஃது அமையாது எனின், கூறுவல். முதற்கண் விசேடண இலக் கணத்தை நோக்குவோம் :

விசேடணம்—அமைவுடையதும், மற்றொன்றி னின்று வேறுபடுத்துவதும் ஆகிய இரண்டிலக்கணமும் உடையதாயிருத்தல் வேண்டும். இது 'ஸம்பவ வ்ய-பிசாராப்யாம் ஸ்யாத் விசேஷணமர்த்தவத்' என்பத னுன் அறியலாகும். 'கைமத யானை' என்பதில் 'கை' என்பது அமைவுடையதாயினும் கையில்லாத யானை இன்மையான் ஒன்றனை வேறுபடுத்துதல் இன்றுகலின், இயைபுடையதாதல் இன்று. வெண்டாமரை என்ப தில் வெண்மை, செந்தாமரையை நீக்குதலின் இயை புடையதாயிற்று. வெண்டாமரைபோன்ற இத் தகைய விசேடணமன்றி, உபலக்ஷண விசேடணம் என்பதொரு வகை உளது: அஃதாவது—சாத்த னுடைய வீட்டை அறியாதவனுக்கு அதனை அறிவிக் கும்பொழுது அவ்வீட்டுக்கூரையில் காக்கை இருக்கக் கண்டு, 'அதோ, காக்கை யிருக்கும் வீடுதான் சாத்தன் வீடு' என்று ஒருவன் காட்டினுன். கேட்டவன் காக்கை-யினுல் அவ்வீட்டை அடையாள மறிந்து சென்று அவ் வீட்டை அணுகும்போது, காக்கை அங்கிருந்து பறந்து போயிற்றுயினும் அவன் அவ்வீட்டைச் சாத்தன்வீடு என்றே துணிவான்: 'காக்கை இல்லையே' என்று ஐயுறு தல் இல்லை. காக்கை யில்லாததனுல் அவ்வீடு பிற னொருவன் வீடாதல் இல்லையன்றே? இவ்வாறே பலருள் ஒருவனைச் சுட்டிக்காட்டுமிடத்து, 'சரிகைத்துகின்முடி (தலைப்பாகை) வைத்திருப்பவனே கொற்றன்' என்று ஒருவன் காட்டக் கண்டவன், மற்றொரு நாள் கொற்றன் சரிகைத்துகின்முடி தரிக்காதிருப்பினும், வெள்ளைத் துகின்முடி வைத்திருப்பினும், அடையாளங் கண்டு கொள்வான். சரிகைத்துகின்முடி இல்லாதபோது

கொற்றன் பிறனெருவன் ஆயினனல்லன். பன்மை சுட்டிய பெயர் என்பதில் பன்மை என்பது இது போன்ற உபலக்ஷண விசேடணம். பன்மை சுட்டிய பெயர் ஒருகால் ஒருமையைச் சுட்டினும் தவறு இன்று; பன்மை சுட்டுதல் உண்மையின் அது சாலும். அதனனே சேனவரையர், 'விசேடிக்குங்கால் பிறிதின் இயைபு நீக்கல் ஒருதலையன் றென்க' என்றது அமை வுடையதாகின்றது.

இனி, சேனவரையர்தாமும், 'இயைபின்மை நீக்க லும் பிறிதின் இயைபு நீக்கலும் என விசேடித்தல் இரு வகைத்து' என்றதும், நச்சினர்க்கினியரும் சங்கரநமச் சிவாயரும் அவ்வாறே விசேடணம் இருவகைத்து என்று கொண்டதுவும் பொருந்துவன அல்ல. இயை பின்மை நீக்கல் என்பது—அயோகவ்யவச்சேதம் என் றும், பிறிதின் இயைபு நீக்கல் என்பது—அந்யயோகவ்ய வச்சேதம் என்றும் வடமொழியிற் கூறப்படும். இவை விசேடணத்தின் வகையல்ல; ஏகாரத்தின் பொருள்.

சங்க: பாண்டுர ஏவ (சங்கு வெள்ளையே)—இஃது அயோகவ்யவச்சேதம். சங்கில் வெள்ளைநிறமன்றி வேறு நிறம் இல்லை. (யோகம்—சேர்க்கை).

பார்த்த ஏவ தனுர்தர: (பார்த்தனே வில்லாளி)—இஃது அந்யயோகவ்யவச்சேதம். வில்லாண்மைத்திறன் பிறரிடத்தில் இல்லை. 'வில்லுக்கு விசயன்' என்பது வழக்கு. இவ்விரண்டும் தமிழில் முறையே தேற்ற ஏகாரமும் பிரிநிலை ஏகாரமும் ஆகும். இதனால், அயோகவ்யவச்சேதம் அந்யயோகவ்யவச்சேதம் என்—

பன இரண்டும் ஏகாரத்தின் பொருளே எனவும் விசே டணத்தின் வகையல்ல எனவும் அறியலாகும்.

இனி,

நீலோத்பலம் பவத்யேவ
(கருந்தாமரை இருக்கவே இருக்கிறது)
—அத்யந்த அயோகவ்யவச்சேதம்.

என்பது காண்க. இதனால் ஏகாரத்துக்குப் பொருள் மூன்று உள என்பது அறியலாகும்.

இதுகாறுங் கூறியவற்றுன், சங்கரநமச்சிவாயர் 'பன்மை சுட்டிய எல்லாப் பெயரும்.....ஓரன்னவ்வே' என்னுந் தொல்காப்பியச் சூத்திரத்தைக் குறித்தும் அச் சூத்திரத்திற்குச் சேனவரையர் எழுதிய உரையைக் குறித்துங் கூறிய குற்றம் அமைவுடையதன்று என்பது நன்கு விளக்கமுறும்.

---

4. உயர்திணை உம்மைத்தொகை

நாம் பொருளை உணர்த்துவதற்குச் சொல்லை வழங்குகின்றோம். 'சொல்லாவது—எழுத்தினான் ஆக்கப்பட்டுப் பொருளை அறிதற்குக் கருவியாயிருக்கும் ஓசை' என்றார் ஆசிரியர் நச்சினார்க்கினியர். ஒரு சொல் ஒருகால் ஒரு பொருளையே உணர்த்தும். ஆயின், பல பொருளொரு சொல் ஒருகால் பல பொருள்களை உணர்த்துகின்றதால் எனின், அதுவும் ஒருகால் ஒரு பொருளையே உணர்த்தும். பல பொருளை உணர்த்துமிடத்து, ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கால் அச்சொல் நம் உள்ளத்தில் தோன்றும். அது நனி விரைவில் நிகழ்வதாகலின் நாம் அதனை அறிய இயலுதல் இல்லை என்பர் வடநூலார்.

இனி, தனித்தனியே வேறு வேறு பொருளையுடைய இரண்டு மூன்று சொற்கள் ஒருங்குசேர்ந்து ஒரு பொருளை உணர்த்துதல் உண்டு. அவற்றைத் தொகைச்சொல் என்று சொல்கின்றோம். தொகையில் இரண்டு சொல்லும் பெயராய் இருக்கும்; ஆயின் அவை இரண்டு பொருளை உணர்த்துதல் இல்லை. பொன்வளை என்னுந் தொகையில் பொன், வளை என்னுஞ் சொற்கள் தனித்தனியே பொன்னையும் யாதேனும் ஒரு வளையினையும் உணர்த்துதல் இல்லை; அத் தொகையில் முதல்மொழிக்கு லக்ஷணை கொள்ளுதலின் பொன்னாற் செய்த வளையாகியதொரு பொருளை வரும். இவ்வாறே மான்கொம்பு, வாழையிலை, யானைக்கோடு முதலிய தொகைகளிலும் ஒரு பொருளை

தோன்றுதல் அறிக. தொகைச்சொற்கள் ஒரு பொருளையே உணர்த்துதலின் ஆசிரியர் தொல்காப்பியனார்,

"எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய"

என்று கூறினர். இதனால், தொகைகளில் இருக்குஞ் சொற்கள் ஒருசொற் போன்று இயலும் என்பது அறியலாகும். இவ்வாறு பலசொற்கள் ஒரு பொருளை உணர்த்தும் ஆற்றலை 'ஏகார்த்தீபாவ ஸாமர்த்யம்' என்பர் வடநூலார். மேல்,

'எல்லாத் தொகையும் ஒருசொல் நடைய'

என்று கூறிய ஆசிரியர்,

"உயர்திணை மருங்கின் உம்மைத் தொகையே
1. பலசொல் நடைத்தென மொழிமனார் புலவர்"

என்று உயர்திணை உம்மைத்தொகையை எடுத்தோதியிருத்தல் நோக்கற்பாலது.

'பொன் வளை' என்னும்போது நமது கண்முன் பொன்னும் வளையும் ஆக இரண்டு பொருள் தோன்றுதல் இல்லை; பொன்னாற் செய்த வளையாகிய ஒரு பொருளே தோன்றுகிறது. இராமலட்சுமணர் என்னுமிடத்து அவ்வாறன்று; இராமர் இலட்சுமணர் ஆகிய இருவருருவமும் தோன்றுகின்றன. ஆகலின், இத் தொகையில் ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒரொரு பொருளை உணர்த்துதலின் 'பலசொல்

---

1. 'பலர்சொல் நடைத்து' என்று உரைகாரர்கள் பாடங் கொண்டிருத்தல் அமைவுடையதாகத் தோன்றவில்லை. 'ஒரு சொல் நடை' என்றதற்கு மாறுகக் கூறுமிடத்து, 'பலசொல் நடை' என்றலே அமைதியாதல் அறிக. தெய்வச்சிலையாருரையில் 'பல சொன்னடைத்து' என்னும் பாடம் உளது.

நடைத்து' என்றார். பல சொல்லாயிருத்தலின் பன்மை வினைகொண்டு முடியும் என்பது கூறுமலே அறியப்படும்.

ஆயின், கால்கை யானைகுதிரை என வரும் அஃறிணை உம்மைத்தொகையிலும் இரண்டு பொருள் தோன்றுதலின், அதனையும் பலசொல் நடைத்து என்று கூறுதல் வேண்டும். அதனை நீக்கியது என்னை? எனின், சரியே. அதனைப்பற்றி நோக்குவோம்.

உம்மைத்தொகை—'இதரேதர யோகத்வந்த்வம்' என்றும், 'ஸமாஹார த்வந்த்வம்' என்றும் இரண்டு வகை யாகும். "ஒருமையீறுய் வந்த அஃறிணை உம்மைத்தொகையை ஸமாஹாரத் துவந்துவன் என்றும், உயர்திணைப் பன்மையீறுய் வந்த உம்மைத் தொகையை இதரேதர யோகத் துவந்துவன் என்றும் .....கூறுவர்" என்னும் [2]பிரயோக விவேகத்தைக் காண்க. ஒன்றற்கொன்று அபேக்ஷையுடைய பல பொருள்கட்கு ஒரு வினையில் அன்வயம் இருக்குமிடத் தில் இதரேதரயோக த்வந்த்வம் ஆகும். இதில் உள்ள சொற்கள் பன்மையாயிருக்கும். [3]'தவகதிரௌ' (தவகதிரங்கள்) என்பது உதாரணமாகும். இனி, ஸமாஹாரமாவது — ஸமூஹம். உம்மைத்தொகை-யில் உள்ள பொருள்களின் ஸமூஹம் அங்கங்களின் மூலம் வினையோடு அன்வயிக்கும். முக்கியமான ஸமு தாயம் ஒன்றே தொகையினால் அறியப்படுதலின் ஸமாஹாரத்வந்த்வம் ஒருமைச்சொல்லாயிருக்கும்; அஃது அஃறிணையாயும் இருக்கும். இவ்வாறு ஒருமை-

2. பிர. 23. உரை. 3. மரவகை.

யாய் வருபவை பாணினீயத்தில் (2. 4: 2 முதல்) பல சூத்திரங்களில் கூறப்பட்டுள்ளன.

"த்வந்த்வச்ச ப்ராணி தூர்ய ஸேநாங்காநாம்" (2: 4 : 2)

என்னுஞ் சூத்திரத்தினால், பிராணி, வாத்யம், ஸேனை இவற்றின் அங்கங்களை ஸமூஹமாக்கி ஒருமையாலே சொல்லவேண்டும் என்று கூறப்பட்டுளது. சாகடாயனத்திலும்,

"ஸேநாங்க க்ஷுத்ர ஜந்து....." (2 : 1 : 98)

என்னுஞ் சூத்திரத்தினால், ஸேநாங்கத்துக்கும் சிறிய உயிர்கட்கும் உம்மைத்தொகையில் ஒரு பொருளே ஆகின்றது என்று கூறப்பட்டுளது.

"பாணிபாதம் (கை கால்)—ப்ராணிஅங்கம்"

"மார்தங்கிக பாணவிகம் (மிருதங்கம் மத்தளம்)—தூர்ய அங்கம்" (மிருதங்கம் பணவம் இவற்றை அடிப்பவரின் ஸமூஹம்)

"ரதிகாச்வாரோஹம் (தேர் குதிரை இவற்றில் ஏறுகை)—ஸேநாங்கம்" (தேரில் ஏறியவர் குதிரைமேல் ஏறியவர் இவர்களின் ஸமூஹம்)

இவையெல்லாம் அங்கங்களின் ஸமூஹமாதலின் ஒருமையாகச் சொல்லப்படும். ஸமூஹம் என்பது இலக்கணையினால் வந்தது. ஸமாஹார த்வந்த்வனில் இலக்கணை கொள்ளப்படும் என அறிக. இம் முறைப்படி தமிழிலும் கால்கை முதலியன ஒருமையாகச் சொல்லுதல் அமையுமாகலின், ஆசிரியர் அதனை நீக்கி, உயர்திணை உம்மைத்தொகைக்கே சிறப்புவிதி கூறினர் என்று கொள்க.

''காலகை வலிக்கின்றது'' என்பது அமையும்.

இவ்வாறு அங்கங்களேயன்றி, க்ஷுத்ர ஜந்துக்களும் ஒருமையாகச் சொல்லப்படும்.

''க்ஷுத்ர ஜந்தவ:'' (2. 4 : 8)

என்னுஞ் சூத்திரம் அறிக.

''தலையில் 'ஈர்பேன்' நிறைந்திருக்கின்றது.''

பகையாயுள்ளவையும் ஒருமையாகச் சொல்லப்படும்.

''யேஷாம் ச விரோத: சாச்வதிக:'' (2. 4 : 9)

என்னுஞ் சூத்திரம் காண்க.

''கீரிபாம்பு சண்டையிடுகின்றது.''

இவ்வாறே ஒருமையாகக் கூறப்படும் பொருள்கள், பல சூத்திரங்களிற் கூறப்பட்டிருத்தலை அறிந்துகொள்க.

ஆசிரியர் தொல்காப்பியனார் அஃறிணைப்பொருள்கள் உம்மைத் தொகையில் ஒருமையாகக் கூறப்படுதலைப் பெறவைத்தாரேயன்றி, பாணினிபகவான் போன்று விதந்து கூறிற்றிலர்.

---

5. வியங்கோள்

தோற்றுவாய் :—தமிழ்மொழியில் உள்ள இலக்கணங்களுள் மிக்க பழமையதாகிய தொல்காப்பியத்தில் வினைச்சொற்களின் வகைகளுள் வியங்கோள்வினை கூறப்பட்டுளதேயன்றி, ஏவல்வினை யென்பதொருவகை கூறப்படவில்லை. ஏவல் என்னுஞ் சொற்றானும் எழுத்ததிகாரத்துள் உயிர்மயங்கியலில், [1]'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்', [2]'ஏவல் குறித்த உரையசை மியாவும்' என்னும் இரண்டிடத்தில் வந்துளதேயன்றி, சொல்லதிகாரத்தில் யாண்டும் வந்திலது.

ஏவல்வினை நன்னூல் முதலிய பிற்கால இலக்கணங்களிற் கூறப்பட்டுளது; வியங்கோள்வினையின் இலக்கணம் தொல்காப்பியத்திற் கூறியிருப்பதற்கு மாறுகக் கூறப்பட்டிருக்கிறது.

தொல்காப்பியனார் கொள்கை :—முதற்கண் வியங்கோளைக் குறித்து ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியிருப்பதனை நோக்குவோம் : ஆசிரியர், [3]'முன்னிலை வியங்கோள் வினையெஞ்சு கிளவி' என்னுஞ் சூத்திரத்தில் இருதிணைக்கும் உரிய பொதுவினைகளைக் கூறி, அடுத்த இரண்டு சூத்திரங்களில் முன்னிலையொருமைபன்மை வினைகளைத் தெரித்து, அதன்பின்,

[4]'எஞ்சிய கிளவி இடத்தொடு சிவணி
ஐம்பாற்கும் உரிய தோன்ற லாறே'

---

1. உயிர்மயங். 8. 2. உயிர்ம. 22.
3. வினையியல் 23. 4. வினையியல் 26.

என்னுஞ் சூத்திரத்தால் 'வியங்கோள் முதலிய ஏழு வகை வினைகளும் ஐம்பால் மூவிடங்கட்கும் உரிய' என்று விதித்து, அதனை யடுத்து,

5' அவற்றுள்
முன்னிலை தன்மை ஆயீ ரிடத்தொடு
மன்னு தாகும் வியங்கோட் கிளவி'

என்று எய்தியதனை விலக்கியுள்ளார். ஆகலின், வியங் கோட்கிளவி முன்னிலை தன்மையில் வாராது என்பது அவர்கருத்தாதல் நன்கு அறியப்படும். வியங்கோளை விலக்கியாங்கே அதனை யடுத்து,

6' பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா'

என்னுஞ் சூத்திரத்தால், செய்யும் என்னும் முற்றுச் சொல் வாராத இடம் இவை என்று, எய்தியதனை விலக்கியுள்ளார். ஆகலின், செய்யும் என்னும் முற்றுச் சொல் பலர்பாற் படர்க்கையிலும் தன்மை முன்னிலை களிலும் வாராதது போன்றே வியங்கோட்கிளவியும் தன்மை முன்னிலைகளில் வாராது என்பது தெளிவுறும். 'இவை இரண்டு சூத்திரமும் ('அவற்றுள், முன்னிலை தன்மை...கிளவி', 'பல்லோர் படர்க்கை...கொள்ளா' என்பன) **பொதுவகையான் எய்தினவற்றை விலக்கி நின்றன**' என்று சேனவரையர் எழுதியிருப் பது அறியத்தக்கது.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனார் வியங்கோட் கிளவி என்று கூறுவது யாது என்று நோக்குவோம் :

5. வினையியல் 27. 6. வினையி. 28.

அவர், உயிர்மயங்கியலில் அகர வீற்றுப் புணர்ச்சிக்கண் வியங்கோட் கிளவியைச் சேர்த்துக் கூறியிருத்தலின், வியங்கோட்கிளவி அகரவீற்றது என்பது அறியலாகும். ஆகலின் அவர் கருத்தின்படி, வாழ்க, செய்க என்பனபோன்ற கவ்வீற்றுச் சொல்லே வியங் கோட் சொல் எனப்படும் என்பது தேற்றம். 'வியங் கோள்—படர்க்கைப் பொருண்மேல் ஏவற்பொருண் மையைக் கொண்டுவரும் முற்றுச் சொல்' என்று ஆசிரியர் நச்சினர்க்கினியர் எழுதியிருப்பது இதற்கே பொருந்தும். இது படர்க்கைக்கண் திணைவேறுபாடும் எண்வேறுபாடும் இன்றி, ஐம்பாற்கண்ணும் வழங்கும். கன்னடத்தில் கெ, கெ (ge) இவ்வீற்றுச் சொற்கள் வியங்கோட்பொருளில் படர்க்கை ஐம்பாற்கும் வருதல் ஈண்டைக்கு அறிதற்பாலது. தமிழில் கவ்வீற்றது கன்னடத்தில் கெவ்வீற்றதாய்த் திரிந்துள்ள இத் தனையே வேறுபாடு.

இனி, வியங்கோட்கிளவி முன்னிலை தன்மைகளில் நிலைபெறுது என்று ஆசிரியர் தொல்காப்பியனார் விலக் கியதன் காரணத்தை நோக்குவோம்: வியங்கோட் பொருளில் முன்னிலை தன்மைகளில் வரும் வினைச் சொல்லை முறையே முன்னிலைவினையிலும் தன்மை வினையிலும் ஆசிரியர் அடக்கினராகலின், அவ் வினைச் சொல், அவ்விடங்களில் ஒருமை பன்மை வினைகட்குக் கூறிய விகுதிகளுள் ஏற்றன பெற்று வரும். ஆகலின் எண்வேறுபாடு இன்றிப் படர்க்கைக்கண் வரும் கவ் வீற்று வியங்கோட்சொல் ஏனையிடங்களில் வாராது என்று விலக்கப்பட்டது.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் [7] 'இவை (முன்னிலை வினை) முன்னின்றுன்தொழில் உணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்துவனவும் என இருவகைய. இ ஐ ஆய் முதலியன தொழிலுணர்த்துவன ; நட வா முதலிய உயிரீறும் புள்ளியீறும் தொழிற்படுத்துவன' என்று எழுதியிருப்பதனாலும், தெய்வச் சிலையார், [8] 'முன்னிலை வினை என்னுது "முன்னிலை" எனப் பொதுப்பட ஓதியவதனால் அச்சொல் இருவகைப்படும். முன்னின்றுன்தொழில் உணர்த்துவனவும் அவனைத் தொழிற்படுத்தற்கு ஏவல் குறித்து வருவனவும் என' என்று எழுதியிருப்பதனாலும் முன்னிலையேவல்வினை-யையும் முன்னிலை வினையுள் ஆசிரியர் அடக்கியுள்ளார் என்பது அறியலாகும். அவ்வாறே வாழ்த்துதல் முதலிய பொருளில் முன்னிலைக்கண் வரும் வியங்கோள் வினையையும் முன்னிலைவினையுள் அடக்கினர் என்று கொள்ளப்படும். தன்மைக்கண்ணும் அவ்வாறே கொள்க. கன்னட மொழியில் **கெ, கெ** (ge) ஈற்று வினைச்சொல் **முன்னிலை தன்மைகளில் வராமை** ஈண்டு அறிதற்பாலது. ஆயின், முன்னிலை தன்மைக்கண் வியங்கோட்பொருளில் வருஞ் சொற்கள் எவ்வெவ் விகுதி பெற்று வரும் எனின், அது முன்னர்க் கூறப்படும்.

ஈண்டு, வியங்கோளைக் குறித்து உரையாசிரியர்கள் எழுதியிருப்பவற்றை நோக்குவோம் :

---

7. தொகைமரபு 9-உரை.
8. வினையியல்26-உரை.

உரையாசிரியர் ;—உரையாசிரியர், 'முன்னிலை தன்மை ..... வியங்கோட்கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்கு, 'முன்னிலை தன்மை இரண்டிடத்துஞ் செல்வன வாகிய வியங்கோள்வினைச்சொல் சிறுவரவின' என்று பொருள் எழுதியுள்ளார். 'மன்னுது' என்பதற்கு நிலையாது என்பது பொருளாதல், [9]'மன்னுப் பொருளும் அன்ன இயற்றே' என்னுஞ் சூத்திரத்தான் அறியப்படுமாகலின், அதற்கு, 'சிறுவரவின' என்று கூறும் பொருள் அமைவதன்று.

சேனாவரையர் :— 'முன்னிலை..... வியங்கோட்கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்குச் சேனாவரையர் 'மேல், எஞ்சிய கிளவி எனப்பட்ட ஏழனுள் வியங்கோட்கிளவி முன்னிலையும் தன்மையும் ஆகிய இரண்டிடத்தோடு நிலைபெறுதாம்' என்று பொருள் கூறி, பின், 'ஆயிரிடத்தொடு **கொள்ளாது** என்னுது, ''மன்னுதாகும்'' என்றதனால் அவ்விடத்தொடு சிறுபான்மை வருதல் கொள்க. மன்னுதல்—பெரும்பான்மையும் நிகழ்தல்' என்று எழுதியிருக்கின்றார். அவர் எழுதியிருக்கும் விசேடவுரை அமைவதன்று ; மன்னுது என்பதற்கு நிலைபெறுது என்றெழுதியிருக்கும் உரை உட்கொள்ளத்தக்கது.

நச்சினார்க்கினியர் :— ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'முன்னிலை.....வியங்கோட்கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்கு, ஏவற் பொருண்மையை முற்றமுடித்தலை உணர்த்துஞ் சொல் முன்னிலையும் தன்மையுமாகிய அவ் விரண்டிடத்துப் பொருளொடும்

---

9. கிளவியாக். 34.

அஃறிணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறுது; உயர்திணைக்கண் பெரும்பான்மையும் நிலைபெறும் என்று உரை எழுதியிருக்கின்றார். அன்றியும் அவர், [10] 'நோயும் இன்பமும்' என்னும் பொருளியற் சூத்திரத்திலும், [11] 'ஞாயிறு திங்கள்' என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்திலும் ஏவற்பொருண்மையை அஃறிணை முற்ற முடியாது என்பதை ஆசிரியர் கூறுகின்றார் என்றும், அவற்றிற் கேற்ப ஈண்டும், முன்னிலைக்கண் வரும் அஃறிணை, ஏவற்பொருண்மையை முற்ற முடியாது என்பதை 'மன்னுதாகும்' என்பதனால் உணர்த்தினர் என்றும், நடவா முதலிய இருபத்து மூன்றீற்று முன்னிலையேவலொருமையும் அஃறிணைக்கண் வருங்கால் ஏவல்வினையை உணர்ந்து அவை முற்றமுடியா என்றும் அவற்றை ஏவுதல் மரபன்று என்றும் கூறியுள்ளார்.

'மன்னுது' என்னுஞ் சொல்லிற்கு (உயர்திணைக்கண்) **நிலைபெறும்** என்று பொருள் கூறுதல் யாங்கனம் அமையும்? அன்றியும், அஃறிணைப்பொருள் ஏவலின் பொருளை அறிந்து அதனை முற்ற முடிக்குந் திறனுடையதன்று என்னுங் காரணத்தால் முன்னிலையிடத்தில் அஃறிணைப்பொருட்கண் வியங்கோள் வாராது எனின், படர்க்கையிடத்தில் அஃறிணைக்கண் வியங்கோள் வருதல் எவ்வாறு அமையும்? ஆண்டும் அஃறிணைப்பொருள் ஏவலை அறிந்து முற்ற முடியாதன்றே?

---

10. பொருளியல் 2.
11. செய்யுளியல் 201.

இவற்றுல், நச்சினர்க்கினியர் கூறியுள்ள பொருளும் காரணமும் அமைவுடையவல்ல என்பது அறியலாகும்.

கல்லாடர்:— கல்லாடர், 'முன்னிலை வியங்கோள் .....ஒரன்ன உரிமைய' என்னுஞ் சூத்திரத்தின் உரையில், வியங்கோள் பெரும்பான்மையும் படர்க்கை ஓரிடத்திற்கே வரும் என்றூர். அவர், 'முன்னிலை..... வியங்கோட் கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்கு, 'முன்னிலை தன்மை என்று சொல்லப்பட்ட அவ்விரண்டிடத்தோடு நிலைபெறுதாகும், அவற்றுள் ஏவற்பொருண்மையை உணர்த்துஞ் சொல்' என்று உரை கூறி, "தன்மை முன்னிலை" என்னுது, "முன்னிலை தன்மை" என்றதனுல், சிறுபான்மை முன்னிலை தன்மைக்கண்ணும் வரும்' என்று விசேடவுரை எழுதினர். இவர் கூறிய பொருள் அமைவுடையது; விசேடவுரை ஆசிரியர் கருத்திற்கு ஒத்ததன்று.

[12] **பழையஉரை:—** 'முன்னிலை..... வியங்கோட் கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்கு, 'முன்னிலையும் தன்மையும் ஆகிய இரண்டிடத்துப் பொருளொடும் ஏவற் பொருண்மையை முற்ற முடித்தலை உணர்த்துஞ்சொல் நிலைபெறுதாகும்' என்று பொருள் எழுதி, 'முன்னிலை தன்மை எனச் சூத்திரஞ் செய்தலாற் சிறுபான்மை உயர்திணைத் தன்மையினும் முன்னிலையினும் வரும்' என்றும், 'அஃறிணைக்கண் தன்மைச்சொல் இல்லாமை

---

12. இவ்வுரையின் ஆசிரியர்பெயர் தெரியவில்லை. இஃது உரியியல் முடியக் கிடைத்துளது.

யானும் அஃறிணை முன்னிலை ஏவற்பொருண்மையை முற்ற முடியாமையானும் கூறிற்றிலர்' என்றும் கூறுகின்றது.

இவ்வுரை, சூத்திரத்திற்குக் கூறியுள்ள பொருள் அமைவுடையதே; விசேடவுரையும் அதிற் கூறுங் காரணமும் அமைவுடையனவல்ல.

தெய்வச்சிலையார்:— தெய்வச்சிலையார், 'முன்னிலை.....வியங்கோட்கிளவி' என்னுஞ் சூத்திரத்திற்கு 'வியங்கோட்சொல் முன்னிலையும் தன்மையுமாகிய விடத்து [13] நிலைபெரு' என்று பொருள் கூறியுள்ளார். அன்றியும் அவர், 'நீ வாழ்க' என்று முன்னிலைக்கண் வருதல் மரூஉவழக்கு என்றும் எழுதியிருக்கின்றார்.

அவர் கூறியுள்ள உரை அமைவுடையதே.

இவ்வுரைகளுள் இளம்பூரணமும் சேனாவரையமும் கல்லாடமும் ஒரு தன்மையவாதலும், நச்சினார்க்கினியமும் பழையவுரையும் ஒரு தன்மையவாதலும், தெய்வச்சிலையாருரை தனித்தகைமையதாதலும், மேல் எழுதியிருப்பவற்றுள் அறியப்படும். இவற்றுள் ஆசிரியர் கருத்திற்கு ஒத்தவுரை தெய்வச்சிலையாருரையே ஆகும்.

இனி, நன்னூல் முதலிய பிற்கால இலக்கணங்களை நோக்குவோம்:

நன்னூலார்:— நன்னூலார் முன்னிலை யொருமை வினையைக் கூறுமிடத்து,

---

13. நிலைபெரு என்றிருத்தல் வேண்டும். இது பின்னல் கொடுக்கப்பட்டுளது.

14 'ஏவலின் வருஉம் எல்லா வீற்றவும்'

என்று கூறியிருத்தலின், நட வா முதலிய இருபத்து மூன்றீற்றுச் சொற்களும் ஒருமையேவல் வினைகளாய் வரும் என்பதும், முன்னிலைப் பன்மை வினையைக் கூறுமிடத்து, 15'மின் அவற்றேவல்' என்று கூறியிருத்தலின், மின் ஈற்று வினைச்சொல் பன்மையேவலாகும் என்பதும் அறியப்படும். அவர்,

15 'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலும் இடம்பால் எங்கு மென்ப'

என்று கூறியிருத்தலின், க முதலிய ஈற்று வியங்கோள் மூன்றிடத்தும் ஐந்து பாலிலும் வரும் என்பது நன்கறியலாகும்.

இவற்றுல், ஏவல்வினை முன்னிலையில்மட்டுமே வருவது என்பதும், வியங்கோள்வினை மூன்றிடத்தும் வருவது என்பதும் நன்னூலார் கொள்கையாதல் பெற்றும்.

நேமிநாதர் கொள்கை :— நேமிநாத நூலாரும் வியங்கோள் மூன்றிடத்தும் ஐந்து பாலிலும் வரும் என்று கொண்டார்.

16 '.....வேறில்லை உண்டு **வியங்கோளும்**—தேறும்
இடமூன்றே டெய்தி இருதிணை ஐம் பாலும்
உடனென்றிச் சேறலும் உண்டு'

என்றது காண்க. ஆயின் அவர், நட வா முதலிய வினைகளையும், மின் ஈற்று வினைச்சொல்லையும் முறையே

---

14. வினையியல் 16.
15. வினையியல் 19.
16. ,, 18.
17. வினைமரபு 7.

முன்னிலை யொருமை வினையிலும் பன்மை வினையிலும் அடக்கியுள்ளாரேயன்றி, அவற்றை, நன்னூலார் போன்று 'ஏவல்' என்னும் பெயரான் விதந்து கூறினாரல்லர்.

17'மின்னும்இர் ஈரும் விளம்பு மிருதிணையின்
முன்னிலைப் பன்மைக்காம் மொய்குழலாய்—சொன்ன
ஒருமைக்கண் முன்னிலையாம் இஐஆய் உண் சேர்
பொரு என் பனவும் புகல்'

என்றதை நோக்குக. அதன் உரைகாரரும் இவை ஏவல்வினை என்று தெரிவித்திலர்.

இலக்கணவிளக்கத்தார் கொள்கை:— இலக்கண விளக்கத்தில், [18]நட, வா முதலிய இருபத்து மூன்றீற்றுச் சொற்களும், [19]அல் ஆல் ஏல் காண் என்னும் ஈறுகளையுடைய சொற்களும் முன்னிலைக்கண் ஒருமையேவலாய் வரும் என்றும், மின், உம் இவ்வீற்றுச் சொற்கள் பன்மையேவலாய் வரும் என்றும் கூறியுள்ளார். அவர் நச்சினார்க்கினியத்தைப் பின்பற்றி ஒருமையேவலில் அல் முதலிய நான்கீறும் பன்மையில் உம்மீறும் கூட்டியுள்ளார். [20]'முன்னின்றுன் தொழில் உணர்த்துவனவேயன்றி அவனைத் தொழிற்படுத்து-

---

17. வினைமரபு 5. 18. வினையியல் 12.

19. 'உண்ணும் தின்னும் எனப் பன்மைக்கண் வரும் உம்மீறும், உண்ணல் என வரும் அல்லீற்று மறையும், மருல் என வரும் ஆலீறும், அகையேல்.....என வரும் ஏலீறும், உண்டுகாண்.....என வரும் காணீறும் ஆகிய சொல் வகை ஐந்து' என்பது நச்சினார்க்கினியம். (வினை 27-உரை.)

20. வினையியல் 13.

வனவும் எதிர்முக மாத லொப்புமையான் முன்னிலை யாயின' என்று எழுதியிருக்கும் உரை அறியத்தக்கது. இனி,

> [21]'கயவொடு ரவ்வொற் றல் ஆல் உம் மார்
> ஐகா னீற்ற வியங்கோள் மூற்றவை
> எய்து மிடம்பால் எங்கு மென்ப'

என்னுஞ் சூத்திரத்தால், வியங்கோள்வினை ககரம் யகரம் முதலிய எட்டு ஈற்றதாய், மூன்றிடத்தும் ஐந்து பாலிலும் வரும் என்பது கூறப்பட்டது.

பிரயோகவிவேகநூலார் கொள்கை:— [22]பிரயோகவிவேகநூலார் நட, வா முதலிய சொற்கள் ஏவல் வினையாய் வரும் என்று கூறியுள்ளார்; ஆயின் அவை ஏவல்வினை யாங்கால் எடுத்துச்சரிக்கவேண்டும் என்று விதித்திருக்கின்றார். வியங்கோள் மூன்றிடத்தும் வரும் என்பதுவே அவர்கருத்து.

இக்காலத்தார் கொள்கை:—நன்னூல் முதலிய பிற்கால நூல்களில் ஏவல்வியங்கோள்களுக்குக் கூறப் பட்டிருக்கும் இலக்கணத்தை நோக்கி, அவை இரண் டற்கும் உள்ள வேறுபாட்டை [23]இக்காலத்தவர் இவ் வாறு கூறியுள்ளார். அவையாவன: 'ஏவல் கட்டளைப் பொருளில்மாத்திரமே வரும்; வியங்கோள் வாழ்த்துதல் முதலிய பல பொருள்களில் வரும்; ஏவல் முன் னிலையில்மாத்திரமே வரும்; வியங்கோள் ஐம்பால் மூவிடங்களிலும் வரும்; ஏவலில் ஒருமை பன்மை

---

21. வினையியல் 13. 22. திங்நுப்படலம் 1 உரை.
23. சடகோபராமாநுஜாசாரியர் காண்டிகை யுரை.

என்ற பகுப்பு உண்டு; வியங்கோளில் அப் பகுப்பு இல்லை' என்பனவாம்.

இவையெல்லாம் தொல்காப்பியனுர்கொள்கைக்கு மாறுபட்டனவே யாதல் மேல் எழுதியிருப்பவற்றுன் அறியப்படும். இவை அமைவுடையனவு மாகா என்பது முன்னர்க் கூறப்படும். ஈண்டு, வடமொழி-யிலும் தெலுங்கு முதலிய திராவிடமொழிகளிலும் இது பற்றிக் கூறப்பட்டிருப்பவற்றை நோக்குவோம்:

வடமொழி :—இவ்விப் பொருளில் இவ்வீவ் வினை விகற்பம் (பத்து வகை லகாரங்களுள் ஏற்பது) வரும் என்பது பாணினீயத்தில் விரிவாகக் கூறப்பட்டுளது. ஆண்டு,

[24]'விதி நிமந்த்ரணமந்த்ரணதீஷ்ட ஸம்ப்ரச்ந ப்ரார்த்தநேஷு லிங்'.

[25]'லோட் ச'

என்பன கூறப்பட்டுள்ளன. விதி முதலிய பொருள்-களில் 'லிங்'கும் 'லோட்'டும் வரும் என்பது இவற்றின் கருத்து. இவை ஏற்ற பெற்றி மூன்றிடத்தும் வரும்.

[26]விதியாவது—பணியாளர் முதலிய தாழ்ந் தோரை ஏவுதல்.

நிமந்த்ரணமாவது—ஆவசியகமாகச் செய்யக்கடவ தனைச் செய்ய ஏவுதல்.

(இது செய்யாவிடின் குற்றம் நேரும்.)

---

24. பாணினீ 3 . 3 : 161.
25. ,, 3 , 3 : 162.
26. ஸித்தாந்த கௌமுதீ.

ஆமந்த்ரணமாவது—விருப்பமானதைச் செய்ய அனுமதித்தல்.

அதிஷ்டமாவது—ஸத்காரஞ் செய்து ஏவுதல்.

ஸம்ப்ரச்னமாவது—எதைச் செய்வது என்று ஆராய்தல்.

ப்ரார்த்தனையாவது—இரத்தல், வேண்டுதல்.

இவற்றுக்கு[27] உதாரணம்—(லிங் வினைக்கு)

விதி—கடம் குர்யாத் (அவன் பாய் செய்யட்டும்.)

நிமந்த்ரணம்
ஆமந்த்ரணம் } —இஹ பவான் ஆஸீத (இங்குத் தாங்கள் இருக்க.)

அதிஷ்டம்—அதீச்சாமோ பவந்தம் மாணவகம் பவான் அத்யாபயது.

(தாங்கள் மாணவகனுக்கு ஓதுவிக்கவேண்டும் என்று தங்களை வேண்டுகின்றோம்.)

ஸம்ப்ரச்னம்—கிம் நு கலு போ வ்யாகரணம் அத்யயை

(ஐய, நான் இலக்கணம் படிக்கட்டுமா என்ன)

ப்ரார்த்தனை—பவதி மே ப்ரார்த்தனு வ்யாகரணம் அத்யயை

(இலக்கணம் கற்க என்பது என் வேண்டுகோளாகும்.)

---

27. காசிகா.

இவற்றுள் **விதி** முதலிய நான்கும் ஏவுதலிலேயே பொருளாக உடையதனால், விதி என ஒன்றேயாகக் கொள்ளுதல் அமையுமாயினும், அவற்றின் வேறுபாடு அறிதற்கு வேறு வேறு கூறியுள்ளார். **'ஏவலில் "லிங்" வரும் என்பதுவே சாலுமாயினும், அந் நான்கனையும் வேறு வேறுகக் கூறியிருப்பது விவரணத்தின் பொருட்டு'** என்று, [28]சித்தாந்த கௌமுதியில் எழுதியிருப்பது காண்க. [29]வாழ்த்துதற் பொருளிலும் 'லிங்', 'லோட்' இரண்டும் வரும். [30]ஆசம்ஸை (தனக்கு இல்லாததும் விருப்பமுடையதுமானதை அடைய விழையும் வேட்கை), [31]இச்சை முதலிய பொருள்களில் வரும் வினையைக் குறித்து வேறு வேறு சூத்திரங்களிற் கூறியுள்ளார்.

விதிப்பொருள் (கட்டளை) படர்க்கையிடத்தும் வரும் என்பது ஈண்டு அறிதற்பாலது.

தெலுங்கு :—தெலுங்குமொழியிலுள்ள 'பாலவ்யாகரணம்' என்னும் நூல், [32]வாழ்த்து, சாபம், வேண்டிக்கோடல் இப்பொருள்களில் படர்க்கைக்கண் **எடுன், தன்** என்னும் ஈறுகள் வரும் என்றும், [33]விதிப் பொருளில் [34]அதி (=அது) என்பது வரும் என்றும்,

---

28. சித்தாந்த கௌமுதி, சூ. 2208 உரை.
29. பாணினீய 3 . 3 : 173.
30. ,, 3 . 3 : 132.
31. ,, 3 . 3 : 157.
32. பாலவ்யா. க்ரியாபரிச்சேதம். 26.
33. ,, ,, 27.
34. தமிழிலும் அது என்பது, செய்வது கூறுவது என்பனபோல வியங்கோட்பொருளில் சிறுபான்மை வருகின்றது.

[35]வாழ்த்து முதலிய பொருள்களில் முன்னிலையொருமைக்கு முவ் விகுதியும், பன்மைக்கு டுவ் விகுதியும் வரும் என்றும் கூறுகின்றது. **எடுன், தன் ஈறுகள் படர்க்கையிலன்றி முன்னிலை தன்மைகளுக்கு வருதல் இல்லை.**

[36]இனி, தன்மையும் முன்னிலையும் கூடிய வினை வேண்டுதற்பொருளில் வரும்போழ்து **அமு** (அம்) விகுதி வரும் என்பது கூறப்பட்டுளது. உதா:— மனமு வண்டுதமு. (நாம் சமைப்பாம்.)

வாழ்த்து முதலிய பொருள்களில் படர்க்கைக்கும் முன்னிலைக்கும் வேறு வேறு விகுதிகள் வருதலும், படர்க்கையில் எண்வேறுபாடின்றி இருபாற்கும் ஒரு விகுதியே வருதலும், முன்னிலையில் எண்வேறுபாடிருத்தலும், உளப்பாட்டுப் பன்மையில் வேண்டிக்கோடற் பொருளில் அம் விகுதி வருதலும், வேண்டுதற்பொருள் படர்க்கையிடத்தும் வருதலும் ஈண்டு உளங்கொளற் பாலன.

மலையாளம்:—மலையாள இலக்கணங்களுட் சிறந்ததாகிய கேரளபாணினீயம் வினைச்சொற்களை நியோஜகம், விதாயகம், அனுஜ்ஞாயகம், நிர்த்தேசகம் என்னும் நான்கு வகையாகப் பிரித்துக் கூறுகின்றது. அவை குறிக்கும் பொருள் முறையே—நியோகம் (ஏவல்), விதி, அனுஜ்ஞை (உடன்பாடு), பகுதியின் பொருள் என்பன.

---

35. பாலவ்யாகர. க்ரியாபரிச். 29
36. ,, ,, 30.

நியோஜகம் (ஏவல்வினை) — முன்னிலையொருமையில் பகுதியளவேயாய் இருக்கும்; கு-சேர்ந்தும் வரும். பன்மையில் இன் (வின் = மின்) சேர்த்து வழங்கப்படும். தன்மையிலும் படர்க்கையிலும் ஒருமை பன்மை இரண்டற்கும் 'அட்டெ' என்பது சேர்ந்து வரும்.

உதா :—

போ, போகு — முன்னிலையொருமை
போகின், போகுவின் — முன்னிலைப்பன்மை

ஞான் போகட்டெ (நான்)
ஞங்ஙள் போகட்டெ (நாங்கள்) } தன்மை

அவன் போகட்டெ
அவள் ,,
அவர் ,, } படர்க்கை
அது ,,
அவ ,,

விதிவினையில் அணம் (வேண்டும்—வேணம்) என்பது சேர்ந்துவரும். (இதில் இடவேறுபாடு இல்லை.) உதா:—

பறயணம்—(சொல்லவேண்டும்)

அனுஜ்ஞை வினையில் ஆம் என்பது சேர்ந்துவரும்.

உதா :—

போகாம்—(போகலாம்)

தமிழில் வழங்கும் வியங்கோள் வினைக்கு ஆசாஸகம் என்று பெயரிடப்பட்டுளது. உதா :—

"குணநிதி குருநாதனும் மே
துணையருளீடுக காவ்யபந்தனுர்த்தம்"

(மே—எனக்கு)

'ஆர்யே வேஷம் தரிச்சு கழிஞ்ஞால் இங்ஙோட்டு வரிக தன்னெ.'

இங்கு, பவதி (தான்) என்னும் படர்க்கைச்சொல் சேர்த்து முடிபுகொள்ளல் வேண்டும்.

முன்னிலை யொருமையேவலில் விகுதியில்லாமல் வழங்குதலும், விதிப்பொருளில் வேண்டும் என்பதன் மரூஉவாகிய அணம் என்பது வழங்குதலும் ஈண்டு அறியவேண்டுவன. மலையாளத்தில் அட்டெ என்பதற் கிடாகத் தமிழில் அட்டும் என்பது வழங்குகின்றது.

கன்னடம்.—கன்னட மொழியில் உள்ள 'கர்ணாடக சப்தானுசாஸனம்' என்னும் நூலில்,

37 'ஆசீர் விதி நிமந்த்ரணமந்த்ரணத்யேஷண ஸம்ப்ரச்ந ப்ரேஷண விஜ்ஞாபனஜ்ஞாபன ப்ரார்த்தனே கெ(கெ)த்'

என்று கூறப்பட்டுளது. ஆசி முதலிய பொருள்களில் **கெ** விகுதி வரும் என்பது இதன் பொருள்.

ஆசியாவது — கூறப்படுவோனுக்கு விருப்பமுள்ளது உண்டாகுமாறு வேண்டுதல்.

ப்ரேஷணமாவது—தாழ்ந்தவனை ஒன்று செய்யவேவுதல்.

---

37. கர்ணாடகசப்தானுசாஸனம். சூ. 465.

விஜ்ஞாபனமாவது — உயர்ந்தவனிடம் ஒன்று செய்ய வேண்டிக்கோடல்.

ஆஜ்ஞாபனம்—ஒருவன் செய்யவேண்டிய வேலையைச் செய்ய ஏவுதல். (கட்டளை)

(மற்றவற்றின் பொருள், மேல் வடமொழியில் எழுதப்பட்டுள்ளது காண்க.)

கெ-விகுதி படர்க்கையிடத்தில்மட்டும் ஒருமை பன்மை இரண்டற்கும் வருவது. உதாரணம்:

ஆசி—இருபத்துநால்வர் தேவர் விமலரத்னத்ரயத்தைத் தயைசெய்க (தயெ கெய்கெ).

(இவ்வாறே பிறவற்றிலும் கெ கொள்க.)

விதி—அறிவுடையவன் இறைவனைப் பூசிக்க.

நிமந்த்ரணம்—அந்தியில் நியமம் செய்க. (செய்யாவிடின் குற்றம் வரும்).

ஆமந்த்ரணம்—புலவர் பிரசங்கம் செய்க.

அத்யேஷணம்—ஆசிரியன் மாணாக்கனை ஓதுவிக்க.

ஸம்ப்ரச்நம்—மகன் இலக்கணங் கற்கவா, வேதமோதவா.

ப்ரேஷணம்—அடியர் ஊழியஞ் செய்க.

விஜ்ஞாபனம்—அரசன் இதைச் செய்க.

ஆஜ்ஞாபனம்—குடிகள் இவ்வாறு ஒழுகுக.

ப்ரார்த்தனை—எனக்கு இவன் ஐயம் இடுக.

இவையெல்லாம் படர்க்கையிடத்தனவாதல் அறிக.

[38]ஆண்பால் பலர்பால்களில் வாழ்த்து முதலிய பொருளில் 'உது' விகுதிவரும் உதா :—

ஜினன் எமக்குச் சுகத்தைச் செய்வது (மாடுவுது)

குருக்கள் எமக்கு மெய்ப்பொருள் சொல்வது (பெஸஸுவுது)

நீயிர் எமக்கு விரும்பியதை ஈவது (ஈவுது)

[39]இப்பொருள்களில் முன்னிலைப்பன்மையில் [40]'இம்' விகுதி வரும். உதா :

குருக்காள், மகிழ்வுடன் எமக்குக் கதை சொல்லும் (பெஸலிம்)

[41]இப்பொருள்களில் முன்னிலையொருமையில் அய் கெடுதலும் அ-வருதலும் உண்டு. அ-வாராமையும் உண்டு. உதா :—

செய்வை (=செய்வாய்) என்று ஐ விகுதி பெற்று இப் பொருள்களில் வருதல் இல்லை.

---

38. கர்ணடகசப்தானுசா. சூ 466.

39. ,, சூ. 467.

40. இம் என்பது (கன்னடத்தில்) முன்னிலைப் பன்மையாகிய நீம் என்பதன் கூறு. தமிழில் நும் என்பது பெயராயினதனல் உம் என்பது இப்பொருளில் வழங்குகின்றது. செய்யும், கேளும் என்பனபோல்பவற்றில் உம் விகுதி வந்துளது காண்க. இவ்விகுதியை நச்சினர்க்கினியர் மேற்கொண்டுள்ளார்.

41. கர்ணடகசப்தானுசாஸனம் சூ. 468.

[42] இப்பொருள்களில் தன்மைப் பன்மையில் எஞ்சு (எம்) என்பதற்கு 'வம்' (அம்) வரும். உதா :—

நானும் நீயும் இன்னோன்பு நோற்பம் (மாம்பம்).

[43] இப்பொருள்களில் தன்மை யொருமையில் 'என்' என்பது 'வென்' என்று திரியும். உதா :—

நான் ஜினனைப்பூஜிக்குவென் (பூஜிஸ்வென்)

கர்ணாடக சப்தமணி தர்ப்பணகாரர், [44]"விதிப் பொருளில் படர்க்கை யொருமை பன்மைகட்குக் கெ, கெ வரும்; ககரம் இரட்டித்தலும் உண்டு. முன்னிலை தன்மைகளில் பன்மைக்கு முறையே இம், அம் என் பவை வரும்' என்றும், [45]விதிப்பொருளில் முன்னிலை யொருமையில் பகுதியே வரும் என்றும்,

[46] முன்னிலை யெதிர்மறைவினை விதிப்பொருளாகு மிடத்து அல் வரும் (மீறலிம்-மீறன்மின்) என்றும் சுருங்கக் கூறியுள்ளார்.

கன்னடத்தில் விதி முதலிய பொருள்களில் படர்க்கையிடத்துமட்டுமே கெ விகுதி வரும் என்பதும், ஏனையிடங்களில் வேறு வேறு விகுதிகள் வரும் என் பதும், விதி முதலிய பொருள்கள் மூன்றிடத்திலும் வரும் என்பதும் ஈண்டு அறியவேண்டுவன.

---

42. கர்ணாடகசப்தாநுசாஸனம் சூ. 470.
43. ,, சூ. 471.
44. சப்தமணிதர்ப்பணம் 240.
45. ,, 241.
46. ,, 245.

இதுகாறும் கூறியவற்றுல். வடமொழியிலும் தெலுங்கு முதலிய திராவிட மொழிகளிலும் ஏவல்-வினை படர்க்கையிடத்தும் வருதலும், வாழ்த்துதல், வேண்டுதல் முதலிய பொருள்களில் வரும் வினை ஏற்ற பெற்றி மூன்றிடத்தும் வருதலும் அறியப் படும். அன்றியும், கன்னடம் தெலுங்கு இம்மொழி-களில் வாழ்த்துதல் முதலிய பொருளில் வரும் வினைக்கு முன்னிலை தன்மைகளில் வேறு வேறு விகுதிகள் அமைந்திருத்தலும் புலனுகும்.

இனி, ஆசிரியர் தொல்காப்பியனுர் வியங்கோட் கிளவி முன்னிலை தன்மைகளில் வாராது என்று விலக் கியது பற்றி ஆராய்வோம் :

வியங்கோட் பொருளில் முன்னிலை தன்மை களில் வரும் விகுதிகள் : ஆசிரியர் தொல்காப்பிய னுர் வியங்கோள் என்று கொண்டது [47]கவ்வீற்று வியங் கோளையே என்பதும், அஃது எண்வேறுபாடின்றி ஒருமை பன்மை இரண்டற்கும் வருதலின், அச்சொல் முன்னிலை தன்மைகளில் வாராது என்று விலக்கப்பட் டது என்பதும் மேற்கூறப்பட்டன. அதனுல், வாழ்த்து-தல் முதலிய பொருள்களில் முன்னிலை தன்மைகளில் கவ்வீறல்லாத பிறவீற்று வினைச்சொல் வரும் என்பது உணரலாகும்.

---

47. கவ்வீற்றுச்சொல் தெலுங்கு மலையாள மொழிகளிற் போன்று தொழிற்பெயராகும் என்றும், அதனுனே அது படர்க் கைக்குமட்டும் வரும் எனவும் ஏனையிடங்கட்கு வாராது என வும் விலக்கப்பட்டது என்றும் கருதுதல் அமையும்.

தெய்வச்சிலையார் 'வாழ் உண் தவிர் என்னும் ஏவல் குறித்த சொற்கள் தன்மைப்பெயர்க்கண்ணும் படர்க்கைப்பெயர்க்கண்ணும் ஏலாது, முன்னிலையொருமைப்பெயர்க்கண் நீ வாழ், நீ உண், நீ தவிர் என ஏற்றலின், ஆண்டுப் பாலுணர்த்துஞ் சொல்லோடு ஒருநிகரனவாகி முன்னிலை வினையுள் அடங்கின. அப் பொருட்கண் தன்மை கூறும்வழி, யான் வாழ்வல், உண்பல், தவிர்வல் எனக் கூறவேண்டலின் அவை தன்மைவினையுள் அடங்கின. இனிப் படர்க்கைக்கண் வருங்கால் அவன் வாழ்க, உண்க, தவிர்க எனக் ககரம் கடையாத்துக் கூறவேண்டுதலின் அவ்வாறு வருஞ் சொல் பாலுணர்த்தாமையின் வியங்கோள் என வேறு குறி பெற்றது. அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க என ஐந்து பாற்கும் உரித்தாகி வந்தவாறு கண்டுகொள்க. நீ வாழ்க, உண்க எனவும் வருமால் எனின் அவை அக்ககரம் பெருக்காலும் பொருள் இனிது விளங்குதலின், அவ்வாறு வருவன மரூஉவழக்கு என்று கொள்க' என்று எழுதியிருக்கின்றார்.

இவற்றுள், வியங்கோட் பொருளைக் குறிக்கப் படர்க்கையிடத்திற்குமட்டுமே தனிவிகுதி வேண்டும் என்பதூஉம், தன்மை முன்னிலைகட்கு அவ்விடங்கட்கோதிய விகுதிகளே சாலும் என்பதூஉம் அறியலாகும்.

முன்னிலை யொருமைக்கண் ஏவல் முதலிய பொருளில் பகுதியே வழங்குதல் சாலும் என்பது நன்னூலார் நேமிநாதத்தார் நச்சினார்க்கினியர் பிரயோக விவேக முடையார் இவர்தம் கூற்றுக்களானும் அறியப்படும்;

இனி, கர்ணாடக சப்தமணிதர்ப்பணம், கர்ணாடகசப் தானுசாஸனம், கேரளபாணினீயம் இவற்றிற் கூறி யிருப்பதனால் இக்கொள்கை வலியுறுவதாகும். ஈண்டு, ஆய் விகுதி புணர்ந்து கெட்டது என்றலே அமைதி எனின், வடநூற் கொள்கைபற்றிக் கூறுவார் அங்கனம் கூறுபவாயினும் பகுதியே ஓசைவேறுபாட்டான் ஏவற் பொருள் தருதல் கூடும் என்பது தென்மொழியாளர் கருத்து. அன்றியும், உண்பாய் போவாய் வருவாய் என விகுதியோடு சேர்ந்த சொற்கள், உண்டாய் போனாய் வந்தாய் என்னும் வினைகளின் எதிர்கால வினைப்பொருளை உணர்த்துதலேயன்றி, உண், போ, வா என விகுதி சேராத சொற்கள்போன்று ஏவற் பொருளைத் தருதல் வழக்கில் இலது. பண்டைச் செய்யுட்களிலும் இப்பொருளில் ஆய் விகுதி சேர்ந்த சொற்கள் வழங்கிற்றில. பிற்காலச் செய்யுட்களிற் காண்பவை பண்டைநெறியிற் பிறழ்ந்து வந்தனவே யாகும். கன்னட மொழியில், ஐ விகுதி சேர்ந்த முன்னிலை யொருமைவினை ஏவல் முதலிய பொருளைத் தாராமை ஈண்டுக் கருதுதற்பாலது. இப்பொருளில் முன்னிலை யொருமைக்கண் விகுதி சேர்வதாயின், இகர விகுதி சேரும். உண்டி உரைத்தி தின்றி என இகரஞ் சேர்ந்த சொற்கள் எடுத்தலோசையால் ஏவற் பொருள் தரும் என்றுர் [48]நச்சினர்க்கினியரும். இகரவிகுதி வியங்கோட்பொருளும் தருதல் அடியார்க்கு நல்லா ருரையினால் அறியலாகும். நச்சினர்க்கினியரும் அக் கருத்தினரே. இனி, செய்வீர் என்பதுவும் செய்தீர் செய்கின்றீர் என்பவற்றோடொப்ப வரும் எதிர்கால

48. வினையியல் 24-உரை

வினைப்பொருளைத் தருதலன்றிச் 'செய்யும்' என்பது போன்று ஏவற்பொருளைத் தருதல் வழக்கில் இல்லையன்றே! செய்யுட்களிலும் ஏவற்பொருளில் மின் விகுதி வருமென்று நன்னூலார் கூறினாரேயன்றி இர் ஈர் விகுதி வரும் என்று கூறினாரல்லரே.

முன்னிலைப் பன்மைக்கண் ஏவல் முதலிய பொருள்களில் மின் விகுதி சேர்ந்து வரும். இவற்றுள், முன்னிலை யொருமைவினைக் கோதிய விகுதிகளுள் ஐ ஆய் என்பனவும், பன்மை வினைக்கோதிய விகுதிகளுள் இர் ஈர் என்பனவும் சாதாரண வினைக்கண் வருவன வாகவும், முன்னிலை யொருமையில் இகரமும் பன்மையில் மின்னும் வியங்கோள் வினையில் வருவனவாகவும் அமைந்துள்ளன என்பது அறியலாகும்.

தன்மை யொருமைக்கண் வியங்கோட் பொருளில் அல் விகுதி வரும் என்பது தெய்வச் சிலையாருரையினுல் அறியலாகும். ஆகவே, தன்மையொருமைக் கோதிய விகுதிகளுள் என் ஏன், கு டு து று என்பவை சாதாரண வினைக்கண் வருவன என்றும், **அல் விகுதி வியங்கோள் வினைக்கண் வருவது** என்றும் அறிதல் கூடும்.

இனி, தன்மைப் பன்மைக்கண் வியங்கோட் பொருளில் எவ் விகுதி வரும் என்பதை ஆராய்வோம்: என் ஏன் கு டு து று என்னும் விகுதிகளுக்கேற்ற பன்மை விகுதிகளாகிய எம் ஏம் கும் டும் தும் றும் என்னும் விகுதிகள் பன்மைவினையில் சாதாரண வினைக்கண் வரும் என்பது தன்மை யொருமையிற் காணும் நியதியினுல் அறிதல் கூடும். அவை யொழிய எஞ்சி நிற்பன

அம் ஆம் விகுதி இரண்டே. இவையே வியங்கோட் பொருளில் தன்மைப் பன்மைக்கண் வருவனவாகும். இவ் விகுதிகள் முன்னிலையைத் தன்னெடு படுக்கும் பெயராகிய நாம் என்பதன் கூருதல் எளிதின் அறியப் படும். தெலுங்கிலும் கன்னடத்திலும் இப் பொருளில் அம் விகுதி வருதல் இவ்வுகத்திற்குப் பெரிதுந் துணைசெய்கின்றது.

தன்மைவினைக் கோதப்பட்டுள்ள விகுதிகளுள் கு[49]டு து[49a]று என்பவை மூன்றிடத்தும் ஒருமையைக் குறித்து வருவனவாயும், கும் டும் தும் றும் என்பவை மூன்றிடத்தும் பன்மையைக் குறித்து வருவனவாயும் மிகப் பழைய காலத்தில் அமைந்திருந்தன என்பது உய்த்துணர்தற்பாலது. கு டு து று விகுதிகள் தன்மை யொருமைக்கும் து று டு இவ் விகுதிகள் படர்க்கை ஒன்றன் பாலுக்கும் வரும் என்று தமிழிலக்கணங்கள் கூறுதலும், கும் விகுதி மூன்றிடத்தும் மூன்று காலத் தும் மூன்று லிங்கத்துக்கும் வேறுபாடின்றி வரும் என்று கன்னட இலக்கணங்கள் கூறுதலும் உளங் கொண்டு ஆராயத்தக்கன.

இதுகாறும் கூறியவற்றால் வியங்கோட் பொருளில் கன்னடத்திற்போலவே தமிழிலும் படர்க்கை ஐம்பாற் கும் கவ் விகுதி வருதலும், அப்பொருளில் அம்மொழி யில் முன்னிலை தன்மைகளில் வேறு வேறு விகுதிகள் அமைந்திருப்பனபோன்று தமிழிலும் முன்னிலை தன்மைகளில் வேறு வேறு விகுதிகள் அமைந்திருத் தலும் அறியப்படும். வாழ்த்து முதலிய பொருள்—

49, 49a. டு, று: இவை துவ்வின் திரிபு

களில் தன்மை முன்னிலைகளில் ஒருமை பன்மைகட்கு இவ்விவ்விகுதி வரும் என்று கன்னடத்தில் விரித்துக் கூறியதுபோன்று தொல்காப்பியனர் விதந்தோதிற் றிலர். இத்துணையே குறை.

ஆயினும், பண்டைப் புலவருட் பலர் ககரவீற்று வியங்கோளைப் படர்க்கைக்கண்ணே வழங்கியுள்ளனர்; முன்னிலை தன்மைகளில் வழங்கினரல்லர்.

50 'அருள வல்ல ஆகுமதி அருளிலர்
கொடாமை வல்லர் ஆகுக
கெடர்த துப்பின் நின் பகையெதிர்ந் தோரே'

என்றும்,

51 'இறங்குசுடர்க் கழனி நின் னிளையருங் கவர்க
நனந்தலைப் பேரூர் எரியு நக்க
மின்னுநிமிர்ந் தன்ன நின் னெளிறிலங்கு நெடுவேல்
ஒன்னார்ச் செகுப்பினுஞ் செகுக்க என்னதூஉம்
கடிமரந் தடிந்த லோம்பு'

என்றும் வந்துள்ள பகுதியில் படர்க்கைக்கண் கவ்விகுதி சேர்ந்திருத்தலும் முன்னிலைக்கண் சேராதிருத்தலும் காண்க. ஆயின்,

'பேரம ருண்கண் இவளினும் பிரிக'
'கடாவுக பாக நின் கால்வ னெடுந்தேர்'

என்று பண்டைச் செய்யுட்களிலேயே தன்மை முன்னிலைகளில் கவ்விகுதி வந்துளதால் எனின், இவை தொல்காப்பியனர் கருத்திற்கு மாறாய் வந்தனவே

---

50. புறம் 27. 51. புறம் 57.

யாகும். இவ்வாறே மாறுய் வந்துள்ளன பலப்பல. அற்றன்று, 'நீ கடாவுக என வாராது, பாக கடாவுக என வருதலின், அது படர்க்கைப் பெயர் விளியேற்ற-வழி வந்த தென்க' என்று தெய்வச்சிலையார் கூறியாங்கு, கடாவுக என்பது படர்க்கைக்கண் வந்தது என்று கொள்ளாமோ எனின், அஃது அமையாது. படர்க்கைப்பெயர் விளியேற்றதுணையானே எதிர்முகமாயிற்று. ஆகலின், முன்னிலைப் பெயராகிய நீ என்பது வந்து 'கடாவுக' எனபதனோடு முடியும். ஈண்டு, தான் என்னும் படர்க்கைப் பெயரை வருவித்து, 'தான் கடாவுக' என்று முடித்தலாகாதோ எனின், அவ்வாறு படர்க்கைப் பெயரை முன்னிலைக்கண் கூறுவது உயர்வு கருதியவழியே ஆகும். ஈண்டுப் பாகனுக்குத் தலைவன் கட்டளையிடுவதாகலின், உயர்வு குறிப்பதாகிய படர்க்கைப்பெயரை வருவித்து முடித்தல் வேண்டாவன்றே? ஆயின், சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் 'கடாவுக பாக' என்பது வேண்டிக்கோடற் பொருட்கண் வந்தது என்றுரால் எனின், தலைவன் விரைந்து செல்ல விரும்பினானாகலின், பாகனை வேண்டிக்கொண்டானாவன் என்று கருதி, அவ்வாறு அவர்கள் கூறினராவர். தேர்ப்பாகன் பணியாளனாகலானும் 'கடாவுக' என்பவன் தலைவனாகலானும் ஈண்டு ஏவற்பொருளது என்றலே சிறக்கும். சேனாவரையர் இவ்வாறு வருபவற்றை வேண்டிக்கோடற் பொருட்கண் வந்த வியங்கோள் என்று கொண்டதனானே 'முன்னிலைக்கண் ஏவல் வருவதுண்டேற் கண்டு கொள்க' என்று எழுதினர். ஈண்டு 'ஏவல்' என்றது ஏவற்பொருளில் வரும் வியங்கோளை. இவ்-

வாறே 'தன்மைக்கண் ஏவல் இல்லை' என்ற விடத்தும் கொள்க.

வியங்கோளின் சொற்பொருள்:—இனி, வியங்கோள் என்னுஞ் சொல்லின் பொருளை நோக்குவோம்: வியங்கோள் என்பது வியத்தைக் கொள்வது என்னும் பொருளதாகும். ஆசிரியர் நச்சினார்க்கினியர்,[52] 'வியவர் –ஏவல் செய்வார்; வியங்கோள் போல' என்று எழுதியிருக்கின்றார். [53]பதிற்றுப்பத்தின் உரைகாரரும் 'வியம் -ஏவல்' என்று எழுதியுள்ளார். இவற்றால், வியங்கோள் என்பது ஏவலைக்கொண்டது என அறியலாகும். விதித்தல், வேண்டுதல், வாழ்த்தல், சபித்தல் முதலிய எல்லாவற்றிலும் ஏவற்கருத்து அமைந்திருத்தலின், வியங்கோள் என்று பொதுப்பெயர் இடப்பட்டுளது. நச்சினார்க்கினியர், 'அவைதாம் **கூறுகின்றவர் கருத்தான் ஏவல் கண்ணியே** வரும். உயர்ந்தான் இழிந்தானை இன்னது செய்க என விதித்தல் ஏவல் கண்ணியது; இழிந்தான் உயர்ந்தானை இன்னது செய்ய வேண்டும் என வேண்டிக்கோடலும் ஏவல் கண்ணிற்று. இனி, உயர்திணைப் பொருளாகிய முன்னிலைக் கண் வாழ்க, வாழிய என வாழ்த்துப் பொருண்மைக் கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று. "கடாவுக பாக நின் கால்வனெடுந்தேர்' என வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் வந்ததும் ஏவல் கண்ணிற்று' என்று எழுதியிருப்பது ஈண்டைக்கு அறியத்தக்கது. 'வியங்கோள் ஏவற்பொருட்டாய் வருவது. வாழ்த்

---

52. சீவக 601–உரை.

53. பதிற் 47-உரை

துதல் முதலாகிய பிற பொருளும் உடைத்தாகலின் இக் குறி மிகுதி நோக்கிச் சென்ற குறி என உணர்க' என்று சேனவரையர் எழுதியிருப்பது உளங்கொளற் பாலது. வியங்கோட்கிளவி என்பதற்கு ஏவற் பொருண்மையை முற்ற முடிக்குஞ் சொல் என்று உரைகாரர் பலரும் எழுதியிருப்பதும் அறியத்தகும்.

வியங்கோள் குறிக்கும் பொருள்கள் : இக் கூறியவற்றுல் வியங்கோள் குறிக்கும் பொருளும் ஒராற்றுன் அறியப்படும். அவையாவன—ஏவல், விதித்தல், வாழ்த்துதல், வேண்டிக்கோடல் என்பன. இவற்றோடு சபித்தற் பொருளையுங் கூறினர் பிரயோக விவேக நூலார். செய்தற்பொருள், தவிர்தற்பொருள் இவ் விரண்டுங் தெய்வச்சிலையா ருரையினுல் அறியலாகும். சப்தானுசாசனத்திற் கூறப்பட்டுள்ள பத்துப் பொருளிலும் வியங்கோள் வரும் என்று கோடல் அமையும். வடமொழி முதலியவற்றிற்போலத் தொல் காப்பியனர் வியங்கோட் பொருள்களை விவரித்துக் கூருததனுல், முக்கியமான பொருள்களைமட்டும் உரை யாசிரியர்கள் குறித்தனர்.

இனி, வியங்கோள் ஏவல் கண்ணியது எனவும் ஏவல் கண்ணுதது எனவும் இருவகைப்படும் என்றனர் இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும். ஆயினும் அவர்க் குட் கருத்து வேறுபாடு உண்டு. அது முன்னர்க் கூறப் படும்.

வியங்கோட் சொல்லின் விகுதிகள் . ஆசிரியர் தொல்காப்பியனர் ககரவீற்று வினைச்சொல்லை வியங் கோட்சொல் என்று கொண்டாராகலின், அஃது அகர

வீற்ற தாகும். அதனனே அவர் அகரவீற்றுப் புணர்ச் சிக்கண் வியங்கோட் சொல்லுக்கும் விதி கூறினர். ஆயின் வியங்கோட் பொருளில் வருஞ் சொற்களை நோக் கிச் சேனாவரையர் அல்லீறும் ஆலீறும் குறித்தார். அவர் ஆலீறெனக் கொண்டதுவும் அல்லீற்றினுட் பட்டு அடங்கும். நச்சினார்க்கினியர் அல் ஆல் என்னும் இரண்டனோடு அர் ஆர் உம் [54]ஐ இந்நான்கீறும் கொண் டார். தெய்வச்சிலையார் அல்லீறு கொண்டதேயன்றி, வாழ்க என்னுஞ் சொல் வாழி, வாழிய, வாழியர் எனவும் வரும் என்றுராகலின் இ, ய, அர் இவற்றையும் கொண்டாராவர். அன்றியும் அவர், வியங்கோள் ஈறு திரியும் என்று கூறி,

> 'திசைதிசை தேனுர்க்குந் திருமருத முன்றுறை
> வசைதீர்ந்த என்னலம் வாடுவ தருளுவார்
> * * *
> * ஏதிலட் டுறைபவர்'

என்னும் அடிகளைக் காட்டி, 'ஏதிலட்டுறைவார் அருளு வாராக என வேண்டிக்கோடற் பொருண்மைக்கண் ஈறு திரிந்தது' என்று எழுதினர். இதனால், பொரு ணோக்கத்தால் சாதாரண வினைச்சொல்லும் வியங் கோட் சொல்லாகக் கொள்ளப்படும் என்பது அறிய லாகும். ஆசிரியர் நச்சினார்க்கினியர்,' ''நிலவன் மாரே புலவர்'', "பாடின் மன்னரைப் பாடன்மா ரெமரே", "நோய்மலி வருத்தங் காணன்மா ரெமரே" என்பன, நிலவுக பாடுக காண்க என்னும் வியங்கோட்கு எதிர்-

---

54. இதனை 'மை' விகுதி எனக் கொண்டுள்ளார் பிற்காலத் தவர்.

மறை என்று உணர்க. இனி, நிலவுவார் பாடுவார் காண்பார் என்பன சில வியங்கோண்முற்று என்று கூறி, அதற்கு எதிர்மறையாய் நிலவாதொழிவார் பாடாதொழிவார் காணதொழிவார் என ஏவற் பொருண்மையை உணர்த்தி நின்றன என்றலும் ஒன்று' என்று எழுதி யிருப்பதனாலும் இக் கருத்து வலியுறும்.

மேலே கூறியிருப்பவற்றுள், தன்மைக்கண் வரும் அல்லீறும் அம்மீறும் முன்னிலைக்கண் வரும் இகர வீறும் மின்னீறும் வியங்கோள் விகுதி எனக் கொள்ளப் படும். இவையேயன்றி, நட வா முதலிய இருபத்து மூன்றீறுகளும் பொருணேக்கத்தால் வியங்கோட் சொற்களாகுமாதலின் அவ்வீறுகளுஞ் சேர்த்துக் கொள்ளலாம். ஆயின், ஆசிரியர் இவ் விகுதிபெற்ற சொற்களைத் தன்மை முன்னிலை வினைகளுள் அடக்கினு ரேயன்றி வியங்கோள் என்றிலராகலின் இவை வியங் கோள் விகுதி எனப்படா.

இனி ஆசிரியர், 'இயற்கை பொருளை இற்றெனக் கிளத்தல்', 'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்' என்று இவ்வாறே வியங்கோட் பொருளில் தொழிற் பெயரை வழங்கி யிருத்தலின், இதில் எண்வேறுபாடு இன்மையான் இதனைப் படர்க்கைக்கே உரிய தாக்கி னர் என்று கொள்ளுதல் அமையும்.

பழைய உரைகாரர் கொள்கையின்படி ஏவல் வியங்கோள்களின் வேறுபாடு :— இனி, நட வா முதலியன வியங்கோளாவது என்னை எனின், அதுபற்றி ஆராய்வோம் : ஏவப்பட்டான் முற்ற முடித்தற்குரிய வினை ஏவல்; மற்றையன வியங்கோள் என்பதே

பழைய உரையாளர் பலர் கருத்து. இனி, [55]'நை நொ என வியங்கோளாகியும் வரும்' என்றும், [56]'உவ வே என வியங்கோளாயும் வரும்' என்றும், [57]'போ என ஏவலாயும் வரும்' என்றும் ஆசிரியர் நச்சினார்க்கினியர் எழுதியிருப்பவற்றுள் அறியலாகும். ஒருவனை நோக்கி, 'நீ போ' என்று கூறின், உடனே அவன் அவ் வினையைச் செய்தல் கூடும். அவனை நோக்கி, 'நீ உவ' (உருப்புடனிரு) என்றுதல், 'நீ நை' (வருந்து) என்றுதல் கூறின், அவன் உடனே யாது செயற்பாலன்? அன்றியும், 'உவ' என்று கூறினவன், கூறப்பட்டவன் உவப்படையத்தக்க நல்வினை நேர்தல் வேண்டும் என்னுங் கருத்தினனுய்க் கூறினனேயன்றி, போ என்பதுபோலக் கட்டளையிட்டானு மல்லன். 'நை' என்றதும் இவ்வாறே யாகும். 'ஆ வாழ்க அந்தணர் வாழ்க' என்னும் வியங்கோளும் இது போன்றதே. 'மன்னிய பெருமநீ நிலமிசை யானே' என்ற வழி, 'மன்னிய' என்பது ஏவல் கண்ணுத வியங்கோள் என்னும் உரையாசிரியர் கருத்தின்படி இத்தகைய வியங்கோள் ஏவல் கண்ணுத வியங்கோள் ஆகும். இதுவும் ஏவல் கண்ணியதே என்று நச்சினார்க்கினியர் கூறினரால் எனின், 'ஏவல் கண்ணுதது' என்பதற்கு, வாழ்த்தப்பட்டானை ஏவியதன்று என்று பொருள் கொள்ளாமல் அவன் வாழ்தலைக் கண்ணிற்றிலது என்று பொருள் கொண்டாரை மறுத்தாராவர். நிற்க.

நொ என்பதனை வியங்கோளாகக் கூறிய நச்சினார்க்கினியர் தாமே, 'நட வா விரி ஈ கொடு கூ மே நை நொ

55. மொழிமரபு 41-உரை. 56. மொழிமரபு 41-உரை.
57. மொழிமரபு 43-உரை.

போ வெள என்னும் உயிரீறு பதினென்றும்.....
முன்னிலை **யேவ**லொருமை முற்றுப் நிற்கும் என்று, 'நொ' என்பதனை ஏவலாகவும் கொண்டுள்ளாரால் எனின், 'நொ' என்பது நீ நொ (வருந்து) என்றும், அவனை நொ (நோகு) என்றும் கூறத்தகுமாகலின், 'அவனை நொ' என்னு மிடத்து ஏவலும், 'நீ நொ' (நோதல் அடைவாய்) என்னு மிடத்து வியங்கோளு மாகுமாதலின், அதனை இரண்டிடத்தும் கொண்டார் எனக் கொள்க. இவ்வாறே 'நீ நீடுவாழ்' என்னு மிடத்து வாழ் என்பது வியங்கோளும், 'நீ மனைவியுடன் கூடி வாழ்' என்னு மிடத்து வாழ் என்பதுவே ஏவலும் ஆகும். 'தாயே சாப்பிட்டு இரண்டு நாள் ஆயின; ஒரு பிடி சோறு போடு,' 'கங்கையாடிப் போந் தேன் ஒரு பிடி சோறு தம்மின்' என்னு மிடத்து, போடு, தம்மின் என்பன இரத்தற் பொருளில் வந்த வியங்கோளும், இரப்போன்சொற் கேட்ட இல்லத்துக் கிழவன் பணியாளனையாதல் இல்லாளையாதல் நோக்கி 'அவனுக்குச் சோறு போடு' என்னு மிடத்தும், [58]'மாதாங் கெறுழ்த்தோள் மறவர்த் தம்மின்' என்னு மிடத்தும் போடு, தம்மின் என்னும் அவையே ஏவலும் ஆகும். 'கடவுளே அடியேனைக் கா,' 'வனதேவதை காள் இவளைக் காமின்' என்னுமிடத்து, கா, காமின் என்பன வேண்டிக்கோடற் பொருளில் வந்த வியங் கோளும், 'இக் கள்வனைக் கருத்தொடு கா,' 'காமின்கள் நெறி' என்னு மிடத்து, கா, காமின் என்னும் அவையே ஏவலும் ஆகும். இவ்வாறே பிறவுங் காண்க.

58. மதுரைக்காஞ்சி 729.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் ஓசை வேற்றுமையாற் [59]ககரஉகரமும் றகரஉகரமும் வியங்கோண் முற்றுயும் நிற்கும் என்று கூறி,

> 'நெடுந்தேர் தாங்குமதி வலவவென் றினிதிழிந்தனன்'
> 'தாங்குகின் னவலம் என்றீர்'

எனவும்,

> 'நீ கூறும் பொய்ச்சூளணங்காயின் மற்றிது
> யார்மேல் விளியுமோ கூறு'

எனவும் உதாரணங் காட்டினார். இவற்றுள் 'நெடுந்தேர் தாங்கு' என்பதில் 'தாங்கு' என்பது ஏவலாதற்கே அமைதி என்பது மேற் கூறப்பட்டதனான் அறியலாகும். அவர்,

> 'ஐய சிறிதென்னை ஊக்கி'
> 'ஈதன்மாட் டொத்தி பெரும'

எனவும் ககரமும் தகரமும் பெற்ற இகரம் ஏவல் கண்ணியே நிற்கும் என்று எழுதியுள்ளார். ஏவல் கண்ணும் என்றதனால், இவை ஏவல் கண்ணிய வியங்கோள் ஆதல் பெறப்படும்.

ஏவல் படர்க்கையிலும் வருதல்:—ஏவற் பொருளைத் தருஞ் சொற்கள் முன்னிலையிலன்றிப் படர்க்கையிலும் வருதல் உண்டு. இது கன்னடம் முதலிய பிறமொழிகளாலும் அறியலாகும். இனி, தலைவனைரு-

---

59 வல்லுகரங்களுள் முதலதும் இறுதியதும் ஆகிய குகர றுகரங்களைக் கூறியதனான் இடை நின்ற ஏனை உகரங்களும் இவ்வாறே வரும் என்பது கொள்ளலாகும்.

வன் தன்முன் நிற்கும் பணியாளருள் ஒருவனை நோக்கி, 'கொற்ரு, நீ உழு; சாத்தன் பரம்படிக்கட்டும்; மற்ற வர் நாற்றுப் பறிக்கட்டும்' என்று பணிக்கின், உழு என்னுஞ் சொல் ஏவற்பொருளதாதல் போன்று, அடிக்கட்டும், பறிக்கட்டும் என்னுஞ் சொற்களும் ஏவற்பொருளனவே யாகுமன்றே ?

இதுகாறுங் கூறியவற்றுல், **சொன்னிலை** நோக் காது பொருணிலை நோக்கியும், கூறுவோர் கூறப்படு வோராகியோரை நோக்கியும் ஏவல் வியங்கோள்களின் வேறுபாடு அறிதல் வேண்டும் என்பது நன்கு விளங் கும்.

வியங்கோட் பொருளில் வருஞ் சொற்கள் :— வேண்டும், தகும், படும் என்னுஞ் சொற்கள் வியங் கோட் பொருளில் வருவனவாகும். இம் மூன்றும் 'செய்ய வேண்டுவது' என்னும் பொருளவாய் ஒன்றற் கொன்று வரும் என்ருர் பிரயோக விவேகநூலார். 'வஞ்சரை யஞ்சப்படும் என்பதற்கு அஞ்சத்தகும் என்பர் பேராசிரியர்; பரிமேலழகர் அஞ்சவேண்டு மென்பர். ஆதலின், கிருத்தியப் பிரத்தியயம் மூன்றும் ஒன்றற் கொன்று பிரதிபதமாய் இருதிணை ஐம்பான் மூவிடத்தினும் நிற்றலில் [60] அநவ்யய க்ருத்தாம் என்க' என்று அவர் எழுதியிருக்கின்ருர். 'நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும்' என்பதில் வேண்டும் என்பது விதிப்பொருட்டு என்ருர் பரிமேலழகர். 'கொள் ளப்படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என் பதில் படாது என்பதைத் தகுதிப்பொருட்டாகக்

60 தவ்ய, ய, அனீய என்னுங் க்ருத்ய ப்ரத்யயங்களே ஈற்றிலுள்ளவை.

கொண்டார் பேராசிரியர். இவற்றுள் வேண்டும், தகும், படும் என்னும் மூன்றும் வியங்கோட் பொருளனவே யாதல் அறியப்படும்.

ஆயின், இலக்கணக்கொத்துநூலார் 'இம் மூன்றும் (வேண்டும், தகும், படும் என்பவை) ஒருபொருட் கிளவியாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப் பொருட் பட்டே நிற்கும் என்க. தேற்றப் பொருளாவது— இக் காரியஞ் செய்தலே தக்கது, தகுதி, பொருத்தம் துணிவு, தெளிவு, நன்மை, அமைதி, முடிவு, வேண்டுவது.....எனப் பொருள் படுதல்' என்று, அம் மூன்றற்கும் உதாரணங் கொடுத்து, 'இங்ஙனம் வருஞ் செய்யுட்கட்கெல்லாம் நச்சினார்க்கினியர் சேனவரையர் பரிமேலழகர் உரையாசிரியர் முதலாயினர் முற்றும் எச்சமாயும் பொருளுரைக்கின் வழுவாம் என்று கருதி வியங்கோட்பொருட்டென்றும் விதிப்பொருட்டென்றும் தகுதிப்பொருட்டென்றும் வேண்டுவதென்றும் தமக்கு வேண்டியவாறே பொருளெழுதிச் சொற்குணம் வாளா போயினர்' என்று எழுதியிருக்கின்றார். இவர் கூற்றினும் பிரயோக விவேக நூலார் கூற்றே மேற்கொள்ளத் தக்கதும், பழைய உரையாளரால் மேற்கொள்ளப் பட்டதும், அமைவுடையதும் ஆகும்.

முடிபுரை ;—இதுகாறும் ஆராய்ந்தவற்றுள், ஆசிரியர் தொல்காப்பியனார் முன்னிலை தன்மைகளில் மன்னுது என்று விலக்கிய வியங்கோட் கிளவி கவ்வீற்றதே என்பதும், அது படர்க்கைக்கண்ணே வரற்பாலது என்பதும், முன்னிலை தன்மைகளில் வியங்கோட் பொருளில் வேறு வேறு விகுதிகள் அமைந்துள்ளன என்பதும், அவ் விடங்களில் கவ்வீற்று

வியங்கோள் வந்திருத்தல் தொல்காப்பிய விதிக்கு மாறு பட்டதுவே என்பதும், வியங்கோள் ஏவல்கட்கு வேறு பாடு இவை என்பதும் விளக்கமுறும்.

கன்னட மொழியில் வாழ்த்து முதலிய பொருள்களில் வரும் கெவ்வீற்று வினைச்சொல் இன்றளவும் படர்க்கைக்கணன்றி முன்னிலை தன்மைகளில் வழங்கப் பட்டிலது. தெலுங்கிலும் வாழ்த்து முதலிய பொருள்களில் வரும் **எடுன், தன்** என்னும் இவ்வீற்று வினைச் சொல் படர்க்கைக்கணன்றி முன்னிலை தன்மைகளில் வழங்கிற்றில. மலையாளத்திலும் படர்க்கை தன்மைகளில் வரும் **அட்டெ** என்னும் விகுதி முன்னிலைக்கண் வந்திலது. இவற்றை நோக்கின், சில நியதிகள் பிற திராவிடமொழிகளில் நிலைத்திருப்பனவாகவும், தமிழில் மட்டும் மேற்கொள்ளப்படாமல் வீழ்ந்தொழிந்தன என்பது புலனாகும். இவ்வாறே, தமிழ்மொழியில் பண்டே மேற்கொள்ளப்படாத தொல்காப்பிய விதிகள் சில, கன்னடம் முதலிய மொழிகளில் நிலைபெற்றுள்ளன என்பது யான் எழுதியுள்ள 'தமிழிலக்கணமும் ஏனைத் திராவிட மொழிகளும்' என்னுங் கட்டுரையினால் அறியலாகும்.

———

6. ஏவல்வினையமைபு

ஒரு மொழியில் வினைச்சொல்லின் இலக்கணமே மிகப்பரந்துபட்டதாயிருக்கும். அதைப்பற்றிக் கூறும் இலக்கணப்பகுதியும் விரிந்திருக்கும். ஆயின், நமது தமிழ்மொழியில் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் வினைச்சொல்லின் இலக்கணம் சுருக்கமாகவே கூறப்பட்டுளது. அவர் வினைச்சொற்களின் விகுதிகளை எடுத்துக்கூறினரேயன்றி, அவற்றின் அமைதியைக் கூறினரல்லர். ஆயின், நன்னூலார் இக்குறையை ஒருவாறு நீக்கினர் எனலாம். அவர் "பதவியல்" என்னும் ஓர் இயலை வகுத்து, வினைச்சொற்களைப் பிரிக்கும் முறையையும், அவற்றின் உறுப்புக்களையும் கூறினர். அன்றியும், ஏவல்வினையையும் அது ஈரேவல் ஆகும் வகையையும் கூறியுள்ளார். தொல்காப்பியனர் வியங்கோள்வினை யென்று விதந்தோதியதன்றி, ஏவல் வினையை அவ்வாறு கூறினரல்லர்.

'ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்' 1
'ஏவல் குறித்த உரையசை மியாவும்' 2

என்று ஏவல் என்னும் சொல்லையே ஈரிடத்தில்மட்டும் கூறியிருக்கின்றார். அவர் ஏவல்வினையை முன்னிலை வினையுள் அடக்கினராவர். [3] இது, "வினைச்

---

1. உயிர் மயங். 8
2. ,, ,, . 22
3. தொகை மர. 9 உரை.

சொற்கள் முன்னின்றுன்தொழி லுணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்துவனவும் என இருவகைய. இ, ஐ, ஆய் முதலிய தொழி லுணர்த்துவன. நட, வா முதலிய உயிரீறும், புள்ளியீறும் தொழிற்படுத்துவன" என்று ஆசிரியர் நச்சினர்க்கினியர் எழுதியிருப்பதனால் அறியலாகும். தொழிற்படுத்தும் வினைச்சொல்லே ஏவல் எனப்படுவது. ஆகவே, ஏவலாவது ஒரு தொழில் செய்யும்படி முன்னின்றனுக்குக் கட்டளை யிடுவதாயிற்று. ஏவல் உயர்திணைக்கண்ணே வருவது.

இனி, ஏவல் வினையை நோக்குவோம். ஓர் ஏவல் வினையில் இரண்டு கருத்தாக்கள் இருப்பதை அறியலாம்.

சாத்தா உண்

என்னும் ஏவலில், சாத்தனை உண்ணும்படி ஏவினவன் ஒரு கருத்தா; உண்ணுதலைச் செய்பவனுகிய சாத்தன் ஒரு கருத்தா. வினைப்பகுதிகளெல்லாம் முன்னிலை யொருமைக்கண் எடுத்தலோசைபற்றி ஏவலாய் வரும், இம்முறை திராவிடமொழிகளெல்லாவற்றிலும் காணப் படுகின்றது. வடநூல் முறையை மேற்கொள்வோர், 'செய்யாய்' என்னும் முன்னிலைவினையில் ஆய்கெட்டுச் 'செய்' என்று வந்துளது என்பர். தொல்காப்பியனுர் 'செய்யாய்' என்னுஞ் சொல் 'செய்' என்று ஆகுமிடன் உளது என்றுராகலின் அஃது அருகியவழக்காகும். அன்றியும் அவர் ஏவலைப்பற்றிக் கூறிற்றிலர்.

இனி, ஒலி வேறுபாடே ஏவல்வினையை உணர்த்தும் என்பது தொல்காப்பியத்தானும் அறியப்படுகிறது.

"உப்ப காரம் ஒன்றென மொழிப
இருவயி னிலையும் பொருட்டா கும்மே"

என்னுஞ் சூத்திரத்தால், தபு என்னுஞ் சொல் ஓசை வேறுபாட்டால் ஈரேவலாய் வருத லுணர்த்தப்பட்டது. இச்சூத்திரத்தினுரையில், 'தபு என்பது படுத்துக் கூற "நீ சா" எனத் தன்வினையாம். எடுத்துக் கூற, "நீ ஒன்றனைச் சாவப் பண்" எனப் பிறவினையாம்' என்று ஆசிரியர் நச்சினர்க்கினியர் எழுதியிப்பது அறிதற் பாலது. 'நட, வா முதலிய முதனிலைத் தாதுக்கள் முன்னிலையேவல் வினையாங்கால் எடுத்து உச்சரிக்க' என்று பிரயோகவிவேக நூலார் கூறியிருப்பது ஈண்டைக்கு அறிதற்பாலது.

இனி, குற்றெழுத்தை நெட்டெழுத்தாக ஒலிக்கின் பிறவினைப் பொருளைத் தருதல் பழைய நூல்களில் அறியப்படுகின்றது.

'கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்'
'நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே'[5]

என்னுமிடத்தில் எழூஉதல் - எழுப்புதல்; படூஉம் என்பது படுத்தும் என்னும் பொருளது. செலுத்தும் என்று உரைகாரர் எழுதியிருப்பது காண்க.

---

4. தொல். 6
5. புற. 195

நன்னூலார் [6] 'நடவா' என்னுஞ் சூத்திரத்தில்,

"எய்திய இருபான் மூன்று மீற்றவும்
செய்யெ னேவல்; வினைப்பகாப் பதமே"

என்று இவ்வீறுகள் 'செய்' என்னும் ஏவலாத லேயன்றி, வினைச்சொற்களின் பகுதியுமாகும் என்று உணர்த்தியுள்ளார். இதில், 'பகாப்பதம்' என்றது 'பகுதி' என்றடி. வினைப்பகுதியைத் தொழிற்பெயர் என்பர் பிரயோகவிவேகநூலார் முதலியோர்.

'செய்' என்னும் ஏவலுக்கு மேல் பிறிதோர் ஏவல் வருமிடத்து அதனைக் குறித்தற்கு 'வி' அல்லது 'பி' என்னும் விகுதி வரும். அதன்மேலும் ஈரேவல் வருமிடத்து 'வி,பி' என்னும் இரண்டு விகுதிகளும் இயையுமாற்றுன் இணைந்துவரும். இது,

'செய்யென் வினைவழி விப்பி தனிவரின்
செய்வியென் ஏவல்; இணையின் ஈரேவல்'

என்னுஞ் சூத்திரத்தா லறியலாகும். செய்வி என்னும் வினையில் மூன்று கருத்தாவும், செய்விப்பி என்பதில் நான்கு கருத்தாவும் இருத்தல் காண்க. இது சங்கர நமச்சிவாயருரையானும் போதரும். நன்னூலார் வி, பி என்னும் இரண்டு விகுதிகளைக் கூறியுள்ளாராயினும் இவ்விரண்டிலும் வ், ப் இடைநிலைகளென்றும், அவற்றின்மே லுள்ள இகரமே ஏவலையுணர்த்துவதென்றும் அறியப்படுகின்றன. வான், பான்

---

6. பத. 10
7. வினை. 23—உரை
8. வினை. 20

என்னும் வினையெச்ச விகுதிகளில் ஆன் என்பதுவே விகுதியென்று சேனவரையர் எழுதியிருப்பது ஈங்கு ஒப்பிடற்பாலது.

இலக்கண நூலார் சொற்கள் வழங்குமாற்றை நோக்கிக் கூறும் இயல்பினரேயன்றி, சொற்களின் தொல்லுருவத்தையும், அவற்றின் உண்மைத்தன்மையையும் ஆராய்ந்து கூறுதலை மேற்கொள்வாரல்லர். அப்பணியை மொழிநூலார் செய்தற்குரியர்.

இனி, கற்பித்தான், தெளிவித்தான் என்பனபோன்று வருமிடங்களை நோக்கின் இவ்வுண்மை நன்கு விளங்கும். அஃதாவது, கற்பித்தான் என்னுஞ் சொல் கற்பு + இத்தான் எனப் பிரிந்து கற்றலைக் கொடுத்தான் என்றும், தெளிவித்தான் என்னுஞ் சொல் தெளிவு + இத்தான் எனப் பிரிந்து தெளிவைக் கொடுத்தான் என்றும் உண்மைப் பொருளை நன்கு அறிவித்தல் காண்க. வழக்கில் கற்பித்தான் என்னுஞ் சொல் சொல்லிக்கொடுத்தான் என்று வழங்குதலை நோக்கின் இது வலியுறும். இத்தான் என்பது ஈத்தான் என்னுஞ் சொல்லின் குறுகிய வடிவமே. கன்னட மொழியில் 'இத்தான்' என்பதே உளது.

இனி, பிரயோகவிவேக நூலார் கூறுமதனை நோக்குவோம்.

நட, வா, மடி என்னுந் தாதுக்கள் **வி, பி** யோடு நின்று **காரிதம்** எனப் பெயர் பெறும். இது வட மொழியில் 'ணிசந்தம்' எனப்படும். (அஃதாவது இகர விறுதி என்பதாம்.)

ணிசந்தமாவது—ஏவுவான்வினையும் இயற்றுவான்-வினையும் உடனே தோன்றும் ஏவற்கர்த்தாவின் வினை. ஆற்றிஞெழுக்கி, கேளிர்ப் பிரிப்பர், தொல்காப்பிய னெனத் தன்பெயர் தோற்றி, ஊட்டு, தீற்று, ஆட்டு, கூட்டு, தேற்று என வி, பி இன்றித் திரிந்தும் ஒற்றுப் பெற்றும் வருஞ் சகச ணிசந்தம்.

தேற்றுவொழுக்கம் என்பது தேறுவொழுக்கம் என்று பொருள் படுமிடத்து, பகுதிப்பொருள் விகுதி-யில் வந்த காரிதம் என்பர்.

நன்னூலார் சாதாரண ஏவலை உணர்த்துதற்கு வி, பி என்னும் இரண்டனையே கூறி அமைந்தார். ஆயின், பிற்காலத்து உரைகாரர்கள் வி, பி யேயன்றி, பகுதியோடு கு, சு, டு, து, பு, று என்னும் வல்லுகரங் கள் சேர்ந்தும், பகுதியில் ஒற்று இரட்டித்தும், மெல் லொற்று வல்லொற்றுகத் திரிந்தும் ஏவல் வினைகள் வரும் என்றனர். உதாரணமாக.

பகுதியோடு கு, சு, டு, து, பு, று விகுதி சேர்ந்து வருவதற்கு,

போகு	உருட்டு	எழுப்பு
பாய்ச்சு	நடத்து	துயிற்று

என்பன போன்றவற்றையும்,

பகுதியில் ஒற்று இரட்டி வருவதற்கு,

கூடு—கூட்டு ஏறு—ஏற்று

என்பன போன்றவற்றையும்,

மெல்லொற்று வல்லொற்றுகத் திரிந்து வருவதற்கு,

நீங்கி - நீக்கி; திருந்து - திருத்து; திரும்பு - திருப்பு

என்பன போன்றவற்றையும் காட்டியுள்ளனர். ஏவற் பொருளையுணர்த்தற்கு வல்லுகரங்கள் ஆறும் பகுதிகளோடு சேர்ந்து வருமென்றதை ஆழ்ந்து நோக்கின் சு, டு, று இம்மூன்றும் 'து' வ்வின் திரிபே என்பது எளிதின் அறியலாகும்.

பாய் + து = பாய்ச்சு ; உருள் + து = உருட்டு ; துயில் + து துயிற்று என்று அமையுமன்றே?

வீரசோழிய நூலார் ஆட்டு, ஆற்று, தீற்று முதலிய தாதுக்கள் காரிதத் தாது எனப்படும் என்றும், அவற்றின்மேல் வி, பி வந்து ஆட்டுவி, ஆற்றுவி, தீற்றுவி, கேட்பிப்பி என்று வருபவை காரிதக் காரிதத் தாது ஆகும் என்றும் கூறியுள்ளார்.

இனி, மேற்கூறிய இருவேறு வகைப்பட்ட விகுதிகளைப் பகுதியோடு சேர்த்துப் பொருளை நோக்குவோம்.

பகுதி	நன்னூல் விகுதி சேர்ந்தது	உரைகாரர் கூறும் விகுதி சேர்ந்தது.
ஆடு	ஆடுவித்தான்	ஆட்டினன்.
உருள்	உருள்வித்தான்	உருட்டினன்.
உணர்	உணர்வித்தான்	உணர்த்தினன்.
உண்	உண்பித்தான்	ஊட்டினன்.
கலங்கு	கலங்குவித்தான்	கலக்கினன்
வீழ்	வீழ்வித்தான்	வீழ்த்தினன்.

ஆடுவித்தான் என்பதும் ஆடினன் என்பதும் ஆடு என்னும் பகுதியிலிருந்து தோன்றிய வினைகளே. ஆட்டுவித்தான் என்பது ஆடுவிப்பித்தான் என்பது போன்ற ஈரேவல்வினையாகும். ஆயின், ஆடுவித்தான் என்பதற்கும் ஆட்டினன் என்பதற்கும் பொருள்

வேறுபாடு உளது. ஆட்டினன் என்பது தொட்டிலை ஆட்டினன், ஊஞ்சலை ஆட்டினன் என்பன போன்று தானே தொழில் செய்ய இயலாத அஃறிணைப் பொருளைத் தொழிற்படுத்துவது. இதில் ஆடுவது தொட்டில்; ஆட்டுவது ஏவப்பட்ட கருத்தா; அவனே உண்மையில் தொழில் செய்பவனுகின்றன். இனி, ஆடுவித்தான் என்பது இத்தகையதன்று. கூத்தரை ஆடுவித்தான் என்னும் வினையில் கூத்தர் ஆடுதல்-தொழிலைத் தாமாகவே செய்கின்றனர். ஆடுவித்தவன் அவர்களை அவர் செய்யுந் தொழிலில் ஏவினன், அத்துணையே. தொட்டில் ஆடும்பொழுது ஆட்டுமவனுடைய தொழில் ஒருங்கு நிகழ்வது போன்று கூத்தர் ஆடும்பொழுது ஆடும்படி ஏவினவனுடைய தொழில் ஒருங்கு நிகழ்வதிலது. இது தம்முள் வேற்றுமை.

இவற்றுல், நன்னூலார் கூறிய ஏவல் விகுதிகளும் உரைகாரர் அமைத்துள்ள விகுதிகளும் பொருள் வேறுபாடுடையனவாதல் நன்கு விளங்கும். உரைகாரர் கூறிய மூவகையமைப்புக்களெல்லாம் தானே தொழில் புரிய இயலாத அஃறிணைப் பொருளைத் தொழிற்படுத்தற்கண் வரும் என்பது தெளிவாகின்றது.

இனி, உயர்திணைப் பொருளாயினும் அவன்விருப்பமின்றித் தொழில் நடைபெறுமிடத்தில் அஃறிணைப் பொருளே போறலின் அதற்குரிய திரிபுகளே வரும். தூக்குமரத்தில் தூக்கினன் என்று அஃறிணைப் பொருட்கண் வருந்திரிபு வந்தது. பகைவனை அடக்

கினுன் என்பதும் இதுபோன்றதே. இவை உயர்-திணையாகக் கொள்ளப்படின், தூங்கு வித்தான், அடங்குவித்தான் என்று வரும்.

இனி, உயர்திணைப் பொருளாயினும் ஒரு பொருளைப்பற்றிய அறிவு இல்லாதிருப்பின் அவ்விடத்தும் அஃறிணைக்குரிய திரிபுகளே வரும்.

[3] 'கனக மால்வரை யியல்பெலாந் தெரிவுறக் காட்டும்' என்னுமிடத்து, சீதை அம்மலையிலுள்ள பல்வேறு பொருள்களையும் அம்மலையின் வளத்தையும் அறியாதவளாகலின், ஒவ்வொன்றனையும் தெரித்துக் காட்டவேண்டியிருத்தலான், 'காட்டும்' என்று கூறினர். அல்லாக்கால், 'காண்பித்தான்' என்று கூறப்படும்.

மேற்கூறிய ஏவல்வினைகளிலெல்லாம் செய்பவனை இயற்றுதற்கருத்தா என்றும், செய்விப்பவனை ஏவுதற் கருத்தா என்றும் வழங்குவர்.

வி, பி, சேர்ந்து வருஞ் சொற்களே ஏவல்வினை என்றும், கு, சு, டு, து முதலியன சேர்தல், மெல்லொற்று வல்லொற்றுதல், இடையே ஒற்றுமிகுதல் இவையெல்லாம் செயப்படு பொருள் இல்லாத வினையைச் செயப்படு பொருள் உள்ள வினை ஆக்குதற்கு வருபவையே என்றும் டார்டர், கால்டுவெல் எழுதியிருக்கின்றார். ஆயின், செயப்படு பொருள் உள்ள வினை ஆக்குதல் வேண்டும் என்னுங் கருத்து ஈண்டுக் கருதப்படவில்லை; தொழிற்படுத்தலே கருத்து.

இனி அஃறிணைப்பொருள் தொழிற்படற்கண் வரும் விகுதி பெரும்பாலும் 'து' ஒன்றே எனலாம்.

கூடு - கூட்டு ஆறு - ஆற்று

என்பவற்றின் இடையே ஒற்றுத்தோன்றிற்று என்றல் மொழிநூலார் கொள்கைக்கு அத்துணை அமைவுடையதன்று. ஈண்டு துவ்விகுதியே வந்துளது என்றல் அமைதியாகும். கூடு, ஆறு என்னுஞ் சொற்களில் உள்ள வல்லுகரங்கள் இயல்பில் மெய்களே யாகலின் அவற்றோடு 'து' சேர்ந்து,

கூட்+து=கூட்டு ஆற்+து=ஆற்று

என்று அமைந்துள்ளன என்பது உய்த்துணரத்தக்கது. தெலுங்கில் 'ஆறு' என்னும் பகுதியோடு ஏவற்கண் 'சு' விகுதி சேர்ந்து,

ஆறு+சு=ஆறுசு; ஆர்சு

என்று வருகின்றது. 'கூட்டு' என்பது கூறுசு, கூர்சு என்று அம்மொழியில் வழங்குகின்றது. கூறு என்பது பகுதி. கைகூடும் என்பது சேகூறுன், சேகுறுன் என்று வருகின்றது. ஆறுசு, கூறுசு என்பவற்றில் சுவ்விகுதி தெளிவாயுளது. அது துவ்வின் திரிபேயாதல் எளிதின் அறியப்படும். இவற்றைக் குறித்துக் 'குற்றியலுகரம்' என்னுங் கட்டுரையில் விரிவாக எழுதியிருக்கின்றேன், ஆண்டுக் காண்க.

பகுதியோடு துவ்விகுதி சேர்ந்து ஏவற் பொருளுணர்த்தலே பெருவரவினதாகும்.

நட - நடத்து

உயர் - உயர்த்து

அகல் - அகற்று (ல்+து)

தாழ் - தாழ்த்து

நீள் - நீட்டு (ள்+து)

காண் - காட்டு
பூண் - பூட்டு
} (ண்+து)

இவ்வாறு காணப்படுஞ் சொற்கள் மிகப்பல. இவற்றுள், காண், பூண் என்னுஞ் சொற்களிலுள்ள ணகர மெய், தன்முன் வந்த 'து' திரிந்து இனவல்லெழுத்து(ட) ஆகி வலிதாய் ஒலித்தலின், டகர மெய்யாய்த் திரிந்தது. இவ்வழக்கு—குண்டுகட்டு, ஆரெயிலவர்கட்டு, முக்கட்டு என்னும் பிரயோகங்களிலும் காணலாகும். இவ்வாறே ணகரமெய், தனக்குமுன் வந்த தகாரத்தால் டகாரமாய்த் திரிந்து வழங்குஞ் சொற்களும் சில உள. எட்டு, கோட்டை, பெட்டை என்னுந் தொடக்கத்தன காண்க. எட்டு என்பது கன்னடத்தில் எண்டு (tu) என்றும், கோட்டை என்பது கோண்டெ (te) என்றும் வழங்குகின்றன. பெட்டை என்பது தெலுங்கில் பெண்ட (ta) என்று வழங்குகின்றது. பெண்ட=பெண்பறவை.

இவ்வுதாரணங்களால், தமிழில் வழங்கும் எட்டு, கோட்டை, பெட்டை என்னுஞ் சொற்களில் ணகர மெய்யே டகரமாய்த் திரிந்துளது என்பது தெளிவாகுமன்றே? இவ்வாறிருத்தலின், மெல்லெழுத்துக்கட்கு முன் வரும் வல்லெழுத்துக்கள் (வடமொழிவர்க்க வெழுத்துக்களுள் மூன்றும்எழுத்துப்போல்) மெல்லொலிபெற்று வழங்கும் என்றும், இது திராவிட மொழிகளின் இயல்பு என்றும் கூறுபவர் கூற்று உண்மையை நன்காராய்ந்துணராமல் கூறியதேயாகும் என்று விடுக்க.

---

7. உந்தீற்றுச் சொல்

பழைய செய்யுட்களில் வந்துள்ள உந்தீற்றுச்சொற் களை ஆராய்வான் எடுத்துக்கொள்வோம். பரணர்-செய்யுட்களுள் இரண்டு செய்யுட்களில்மட்டுமே உந் தீற்றுச் சொல் வந்துளது. அவற்றைக் காண்பதற்கு முன், முதற்கண், உந்தீற்றுச்சொல்லைக்குறித்து உரை யாசிரியர்களும் நூலாசிரியர்களும் கூறியிருப்பவற்றை நோக்குவோம்.

புறநானூற்றில் உந்தீற்றுச் சொற்கள் வந்துள்ள பாட்டுக்களுள், 24, 137 ஆகிய இரண்டு பாட்டுக் களுக்குமட்டுமே உரையுளது. அவற்றுள் 24-ஆம் பாட்டின் உரையின்கீழ்,

"மேல் எண்ணப்பட்ட பெயரெச்சம் மூன்றும் (பாயுந்து, தூங்குந்து, தருஉந்து) மிழலை என்னும் பெயர் கொண்டன; அவை உம் உந்தாய் நின்றன"

என்றும்,

137-ஆம் பாட்டின் உரையின்கீழ்,

"முன்னின்ற பெயரெச்சம் மூன்றும் (ஒலிக்குந்து, பூக்குந்து, படரும்) நாஞ்சில் என்னும் நிலப்பெயர் கொண்டன"

என்றும் உரையாசிரியர் இலக்கணக்குறிப்பு எழுதி யுள்ளார். இவற்றுல், உந்தீற்றுச்சொல், பெயரெச்சச் சொல் என்பது அவர்கருத்தாதல் பெறுதும்.

நன்னூலாசிரியர்,

"செய்யுமென் எச்சவிற் றுயிர்மெய் சேரலும்
செய்யுளுள் உம்உந் தாகலும் முற்றேறல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே."
(நன். வினையியல், 22)

என்று கூறியிருத்தலின், செய்யும் என்னும் பெயரெச்சத்தின் உம் என்பதுவே உந்து எனத் திரிந்தது என்பது தெளிவாகும். ஆகவே, நன்னூலாரும் புறநானூற்றின் உரையாசிரியரும் இத்திறத்தில் ஒரே கொள்கையினர் என்பது போதரும். இனி, ஆசிரியர் தொல்காப்பியனார், இச்சொல்லைக்குறித்துக் கூறியிருத்தலை நோக்குவோம்: அவர்,

'உம்உந் தாகும் இடனுமா ருண்டே' (இடையியல், 44) என்றுமட்டுமே கூறியுள்ளார். அதனால், உந்தாகத் திரிவது செய்யும் என்னும் பெயரெச்சத்தின் உம் என்றுவது, செய்யும் என்னும் வினைமுற்றின் உம் என்றுவது விளங்கவில்லை. ஆயினும், சேனாவரையர்,

'இடனுமாருண்டே என்றது, இத்திரிபு, பெயரெச்சத்திற் கேயவழி என்பது கருதிப் போலும்'

என்று உரை கூறியிருத்தலானும், நச்சினார்க்கினியர்,

'இடனுமா ருண்டே என்றதனால், இத்திரிபு பெயரெச்சத்திற்கே கொள்க'

என்று எழுதியிருத்தலானும், செய்யும் என்னும் பெயரெச்சத்தின் உம் என்பதுவே உந்து எனத் திரிந்து நிற்கும் என்பது புலனாகும். நிற்க.

'புறநானூற்றின் பழைமை' என்னும் நூலின் ஆசிரியர், உந்திற்றுச்சொல்; வினைமுற்றுச் சொல்லே என்றும், மலையாள மொழியில் நிகழ்கால வினைமுற்றாக வழங்கும் செய்யுந்நு என்னுஞ் சொல், செய்யுந்து என்னும் சொல்லின் திரிபேயாகலின், செய்யுந்து

என்னும் சொல், மலையாள மொழியிற் போலவே தமிழிலும் நிகழ்கால வினைமுற்றுக முற்காலத்தில் வழங்கிவந்தது என்றும், தொல்காப்பியனார்காலத்தில் அவ்வழக்கு வீழ்ந்தமையின், அவர், அதன் உண்மைத் தன்மையை அறியாராய், பெயரெச்சமே உந்தீருகத் திரிந்தது என்று கருதி, 'உம் உந்தாகும்' என்று விதி கூறினர் என்றும், புறநானூற்றுப் பாட்டுக்களில் உந்தீற்றுச் சொல் நிகழ்காலவினைமுற்றுகவே வந்துளது என்றும், ஆதலின், அச்சொல்லை அவ்வாறு வழங்கிய பரணர், கோவூர் கிழார் முதலியோர் தொல்காப்பியனார்காலத்திற்கு முற்பட்ட புலவர் என்றும் எழுதியுள்ளார்.

இனி, இவ்விருதிறத்தவர் கூற்றுக்களையும், உந்தீற்றுச் சொல்லின் உண்மைத் தன்மையையும் ஆராய்தற்குமுன், புறநானூற்றுள் உந்தீற்றுச் சொற்கள் வந்துள்ள பாட்டுக்களெல்லாவற்றையும் நோக்குதல் இன்றியமையாததாகலின், அவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன் :

புறநானூற்றுள் உந்தீற்றுச் சொற்கள் வந்துள்ள பாட்டுக்கள் [1] பத்து. அவை—24, 137, 339, 343, 352, 380, 384, 386, 395, 396 ஆகியவை. அவற்றுள்,

---

1. புறம், 400-ஆம் பாட்டில், 'நாரரி நறவி ஞண்மகிழ் தூங்குந்து' என உந்தீற்றுச்சொல் காணப்படினும் 'நாரரித்த நறவ மகிழ்ந்து' என்னும் பாடபேதமே அமைதியாகத் தோன்றுதலின், அப்பாட்டு ஈண்டுச் சேர்த்தெண்ணப்படவில்லை. நறவு மகிழ்ந்து (புற. 396) என வந்துளது காண்க.

24-ஆம் பாட்டில் உந்தீற்றுச் சொல் 3 முறையும்,
137 ,, ,, 2 ,,
339 ,, ,, 3 ,,
343 ,, ,, 3 ,,
352 ,, ,, 2 ,,
380 ,, ,, 2 ,,
384 ,, ,, 3 ,,
386 ,, ,, 2 ,,
395 ,, ,, 3 ,,
396 ,, ,, 4 ,,

வந்துள்ளன. இவற்றுள்ளும் 339, 352, 380, 384, 395, இப்பாட்டுக்களில், சில அடிகள் இறந்து பட்டுள்ளன; அவையும் இருக்குமேல், உந்தீற்றுச் சொல் பின்னும் சில வந்திருத்தலும் கூடும்.

இப்பாட்டுக்களில், உந்தீற்றுச் சொற்கள் பல முறை அடுக்கி வந்து, ஒரு நிலப்பெயரோடு முடிந்துள்ளன. எங்கனம் எனின்,

24-ஆம் பாட்டில் எவ்வி மிழலை என்றும்
137 ,, நாஞ்சிற்பொருநன் ,,
343 ,, குட்டுவன் முசிறி ,,
352 ,, தித்தன் உறந்தை ,,
380 ,, நாஞ்சிற்பொருநன் ,,
386 ,, அன்ன நன்னாட்டுப் பொருநம் ,,
395 ,, வேண்மான் பிடவூர் ,,
396 ,, வாட்டாற்றெழினியாதன் ,,

---

2. இப்பாட்டின் 3-ஆம் அடியில், 'பூ வருந்தும்' என்று காணப்படுதல் தவறு; 'பூ வாருந்து' என்றிருத்தல் வேண்டும். 395-ஆம் பாட்டில், 'அரியலாருந்து' என வந்திருத்தல் காண்க.

அவ்வுந்தீற்றுச் சொற்கள் [3]நிலப்பெயர் கொண்டு முடிந்துள்ளன காண்க.

இவற்றுல், உந்தீற்றுச்சொல், யாண்டும் பலமுறை அடுக்கியே வரும் என்பதும், அவ்வாறு அடுக்கிவந்து நிலப்பெயரொன்றனைக் கொள்ளும் என்பதும் நன்கு புலனுகும். ஆயின் 24, 343, 352, 336 ஆகிய இப் பாட்டுக்களில், உந்தீற்றுச் சொற்கள், தலைவன் பெயர்-களைக்கொண்டு முடிந்துள்ளனவால் எனின், ஆண்டும், உந்தீற்றுச்சொற்கள், எவ்வி, குட்டுவன், தித்தன், வேண்மான் என்னும் தலைவன்பெயர்களோடு முடியா-மையும், மிழலை, முசிறி, பிடவூர் என்னும் இடப்பெயர் களையே கொண்டு முடிதலையும் அப்பாட்டுக்களின் பொருளியைபு நோக்கி அறிக.

மேற்குறித்த புறப்பாட்டுக்களெல்லாவற்றிலும், உந்தீற்றுச்சொல் பலமுறை அடுக்கி வந்திருத்தலை நோக்கின், அது வினைமுற்றும் அன்று, பெயரெச்சமும் அன்று என்பது புலனுகும். என்னையெனின், அச் சொல், ஒருமுறை வருதலின்றி, யாண்டும், பலமுறை அடுக்கிவருதலையே நியதியாகக் கொண்டிருத்தலின் என்க. வினைமுற்றுயிருப்பினும், பெயரெச்சமாயிருப் பினும், அவை, யாண்டும் பலமுறை அடுக்கியே வரு தல் இல்லை. அன்றியும், உந்தீற்றுச்சொல் வினைமுற்று யிருக்குமாயின், ஆசிரியர் தொல்காப்பியனுர், வினை யியலுள் வினைமுற்றுக்களைக் கூறுமிடத்து அதனைக்

---

3. 339, 384-ஆம் பாட்டுக்களில், நிலப்பெயர் வர வேண்டிய இடத்தில் அடிகள் இறந்துபட்டனவாதலின், அப் பெயர்கள் அறிதற்கு இயலவில்லை.

கூறியிருப்பர்; செய்யும் என்னும் பெயரெச்சமாயிருக்குமாயின் அப்பெயரெச்சத்திற்குச் சிறப்பிலக்கணம் கூறுமிடத்துக் கூறியிருப்பர். அவ்வாறு கூருமையின், அவர், இவ்வுந்தீற்றுச்சொல்லை வினைமுற்று என்றுவது, பெயரெச்சம் என்றுவது கருதினரல்லர் என்பது தெளிவாகும்.

நன்னூலார்,

செய்யுமென் எச்சவீற் றுயிர்மெய் சேறலும்
செய்ளுள் உம் உந் தாகலும் (வினை. 22)

என்று, செய்யும் என் வாய்பாட்டுப் பெயரெச்சத்திற்குச் சிறப்பிலக்கணம் இரண்டு கூறினர். ஆசிரியர் தொல்காப்பியனர், செய்யும் என்னும் பெயரெச்சத்தின் உம்மே உந்தாகின்றது எனக் கருதியிருப்பரேல், செய்யும் என்னும் பெயரெச்சத்திற்கு,

'அவற்றுள்

செய்யும் என்னும் பெயரெஞ்சு கிளவிக்கு
மெய்யொடுங் கெடுமே ஈற்றுமிசை யுகரம்
அவ்விடனறிதல் என்மனர் புலவர் (வினை. 41)

என்று சிறப்புவிதி கூறியவிடத்து, 'உம் உந்தாகும் என்னுஞ் சூத்திரத்தைக் கூறுவர். அங்கனம் கூருமையின், அவர், இச்சொல்லைப் பெயரெச்சம் எனக் கருதினரல்லர். இவ்வாறே,

'பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மை
அவ்வயின் மூன்றும் நிகழுங் காலத்துச்
செய்யும் என்னுங் கிளவியொடு கொள்ளா' (வினை.30)

என்று, செய்யும் என்னும் முற்றுவினைக்குச் சிறப்பிலக்கணங் கூறியவிடத்து, 'உம் உந்தாகும்' என்னும்

சூத்திரத்தை நிறுத்தாமையின். அதனை வினைமுற்று என்றும் அவர் கருதினரல்லர் என்பது துணிபு.

ஆயின், தொல்காப்பியனுர் கருத்துத்தான் யாதோ எனின், காலமொடு வரும் உம்மையிடைச்சொல், எண்ணுப்பொருளில் வரும்வழி உந்து என்றுகும் என்பதே அவர்கருத்தாதல் உய்த்துணரத்தகும். அதுபற்றியன்றே ஆசிரியர், 'உம் உந்தாகும்' என்னுஞ் சூத்திரத்தை இடையியலில், எண்ணுப் பொருளில் வருஞ் சொற்களைக் கூறும்வழி, எண்ணும்மைக்குச் சிறப்பிலக்கணம் கூறுமிடத்து நிறுத்துவாராயினர். இடையியலில், 39ஆம் சூத்திரம்முதல் 46-ஆம் சூத்திரம்வரை எண்ணுப்பொருளில் வருஞ் சொற்களைக் குறித்து இல்க்கணங் கூறியிருத்தலும், அவற்றினிடையே,

'உம்மை எண்ணின் உருபுதொக்கல் வரையார் (இடை. 44)

என, எண்ணும்மைக்குச் சிறப்பிலக்கணம் கூறி, அதனை யடுத்து,

'உம் உந்தாகும் இடனுமா ருண்டே' (இடை. 44)

என்று கூறியிருத்தலும் காண்க. இவற்றுல், தொல்காப்பியனுர்கருத்து, யான் மேகூறியவாறு எண்ணுப் பொருளில் வரும்வழியே உம், உந்து ஆகும் என்பது தெளியப்படும். அன்றியும்,

இளம்பூரண அடிகள், 'உம் உந்தாகும்' என்னுஞ் சூத்திரைவுரையில், எட்டுவகைப்பட்ட உம்மையுள் ஓர் உம்மை எனப்படாது, வினைசெய் மருங்கிற்

காலமொடு வந்தது' என்று எழுதியிருத்தல் நோக்கத் தக்கது.

சேனவரையரும் நச்சினார்க்கினியரும், 'வினை செயன்மருங்கிற் காலமொடு வருவனவற்றுள் உம்மீறு உந்தாய்த் திரிதலும் உடைத்து' என்றே பொருள் கூறியுள்ளனர்.

தெய்வச்சிலையார், 'எண்ணும்மைக்கு உரியதோர் வேறுபாடு உணர்த்துதல் நுதலிற்று' என்று கருத்துக் கூறி, 'உம் என்பது உந்து என விரிந்து நிற்கவும் பெறும் இடமும் உண்டு' என்று பொருளுரைத்து,

"நெல்லரியும் இருந்தொழுவர்
செஞ்ஞாயிற்று வெயின்முனையிற்
றெண்கடற்றிரை மிசைப்பாயுந்து
திண்டிமில் வன்பரதவர்
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சிர்தூங்குந்து
தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தருஉந்து
வண்டு பட மலர்ந்த தண்ணறுங் கானல்
முண்டகக் கோதை யொண்டொடி மகளிர்
இரும்பனையின் குரும்பைநீரும்
பூங்கரும்பின் தீஞ்சாறும்
ஓங்குமணற் குவவுத்தாழைத்
தீநீரொ டுடன்விராஅய்
மூன்நீ ருண்டு முன்நீர்ப் பாயுந்
தாங்கா வுறையுள் நல்லூர் கெழீஇய"

என்றவழி, உம் உந்தாயிற்று. எண்ணும்மை அதிகாரப்பட்டு வருதலான், இவ்வாறு வருவது ஓர்

பொருண்மேல் உம்மை அடுக்கியவழி என்று கொள்க. ஈண்டு, எண்ணும்மை யாங்கது எனின் ஒரு பொருள்-மேல் பலவினைச்சொல் வருதலின், அவை, ஒருமுகத்தான் எண்ணப்பட்டவாம்' என்று உதாரணமும் காட்டி விளக்கமும் எழுதியுள்ளார்.

இவற்றுல், வினைசெய் மருங்கிற் காலமொடு வரும் உம்மையே எண்ணுப் பொருளில் வரும்வழி உந்து என்றுகும் என்பது தெளிவாகும். இதனைன்றே, உந்தீற்றுச் சொற்கள், யாண்டும் பலமுறை அடுக்கி வருவனவாயின. ஆயின், உம் என்பது உந்து என்று ஆயினமை எவ்வாறு எனின், கூறுவேன்.

பெயர்ச்சொற்களோடு சுட்டுப் பெயர்களைச் சேர்த்து ஒரு சொற்றன்மையாக வழங்குதல் உண்டு :

நீழலவர் (குறள் 1034) — நீழல் + அவர்
மாலையவர் (குறள் 1025) — மாலை + அவர்
வன்கணவர் (குறள் 228) — வன்கண் + அவர்
காதலவர் (குறள் 1127) — காதல் + அவர்

என்பன காண்க.

இச் சொற்களில், அகரச்சுட்டு இன்றி, அர்விகுதி மட்டும் சேர்ந்து வருதலும் உண்டு. நீழலர், மாலையர், வன்கணர் என வரும்.

இவ்வாறே,

கையது (புறம் 69) — கைத்து
திரையது (குறுந் 128) — திரைத்து
மேலது (புறம் 6) — மேற்று
நீரது (குறள் 221) — நீர்த்து

வாயது — (நால்) வாய்த்து [1]
கவுளது — (இரு) கவுட்டு
கண்ணது — (மூக்) கட்டு

என்னுஞ் சொற்களில், கை, திரை முதலிய சொற்களோடு அது என்னும் சுட்டுப்பெயர் சேர்ந்தும், அகரமின்றி, து என்னும் விகுதி மட்டும் சேர்ந்தும் வந்துள்ளன காண்க.

இனி, வினைச்சொற்களிலும் இவ்வாறு வருதல் காணலாம்.

ததும்பினது (ததும்பு + இன் + அது)
—ததும்பின்று (ததும்பு + இன் + து)
போயினது (போ + இன் + அது)
—போயின்று (போ + இன் + து)
கூவினது (கூ + இன் + அது)
—கூயின்று (கூ + இன் + து)
அணையது (அணை + அது)
—அணைத்து (அணை + து)
உடையது (உடை + அது)
—உடைத்து (உடை + து)

என்பன காண்க.

இவ்வாறே, செய்யும் என்னும் வினைமுற்றேடும் அகரச் சுட்டுப்பெயர் சேர்ந்தும், (அதன் திரிபாகிய) விகுதி மட்டும் சேர்ந்தும் வருதல் உண்டு.

---

1. இருகவுட்டு முக்கட்டு நால்வாய்த்தென் உள்ளம் உருகவிட்டு நின்ற ஒளி. (உரிச்சொல் நிகண்டு.)

என்னுமவர் (குறள் 653) — என்னுமோர் (என்னும் + [1]ஆர்) ; என்மர் (என்ம் + அர்)

அறியுமவன் — அறியுமோன் (அறியும் + ஆன்) (புறம் 137)

தெரியுமவர் — தெரியுமோர் (தெரியும் + ஆர்) (தொல். பொருளிய. 35)

இருக்குமது — இருக்குந்து (இருக்கும் + து)

கூறுமது — கூறுந்து (கூறும் + து)

என்பன காண்க.

இங்குக் காட்டிய உதாரணங்களால், செய்யும் என்னும் முற்றுச்சொல்லோடு துவ்விகுதிமட்டும் கூடி வந்த சொல்லே செய்யுந்து என்றுயிற்று என்பது போதரும்.

இனி, பரணர் பாட்டுக்களில் வந்துள்ள உம்மீற்றுச் சொற்களின் பொருளை ஈண்டு ஆராய்வோம் :

புறம் 343 ஆம் பாட்டில்,

'மீனெறுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறிமூடையாற்
கலிச்சும்மைய கரை கலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசங்
கழித்தோணியாற் கரை சேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றூரமுந்

---

1. 'பாலறி மரபின்..... ஆ ஓ வாகும்' (தொல். வினை. 14) என்பதனால், ஆர் முதலியன ஓர் முதலிய ஆயின-

2. 'இருக்குமதோ யார்மனத்தும் இருக்குஞ் சோதி.' (விவ்லி. கிருட். 3) என்பது காண்க.

தலைப்பெய்து வருநர்க்கீயும்
புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்குகடல் முழவின் முசிறி யன்ன
நலஞ்சொல் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்
புரைய ரல்லோர் வரையலள் இவளெனத் [பிணும்
தந்தையும் கொடாஅ ஞயின்'

என்னும் பகுதியில், உந்தீற்றுச்சொல் மூன்று முறை அடுக்கி நின்று, முசிறி என்னும் நிலப்பெயர் கொண்டது. ஈண்டு, 'மீன மறுக்குமது, கரை கலக்குமது, கரை சேர்க்குமது (ஆகிய) முசிறி என, உந்தீற்றுச் சொற்கள் முசிறியை விசேடித்து நின்றமை அறிக.

இங்கு, இடத்துநிகழ் பொருளின் தொழில் இடத்தின்மேல் ஏறி நின்றது.

இப்பாட்டில், மறுக்குந்து, கலக்குறுந்து, சேர்க்குந்து என்பவற்றை முற்றுவினைகளாகக்கொண்டு, தனித்தனியே முடித்தல் அமைதியாகாது. என்னெனின், முன்னர்,

'முசிறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்
புரைய ரல்லோர் வரையலள் இவள்' [பிணும்

என்று வருதலின், மேல்நின்ற அடிகளெல்லாம் முசிறியை விசேடித்தல் வேண்டும் என்க. இங்ஙனம் அன்றாயின் 'முசிறியன்ன நலஞ்சால் விழுப்பொருள், என்றது சிறவாமை யறிக.

இனி 352-ஆம் பாட்டிலும்,

தேனெங் கொண்ட வெண்மடையான்
வீ.....கறக்குந்து

அவல்வகுத்த பசுங்குடையாற்
புதன்முல்லைப் பூப்பறிக்குந்து
ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்
குன்றேறிப் புனற்பாயிற்
புறவாயாற் புனல்வள .....
.....நொடை நறவின்
மாவண் டித்தன் வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன உரைசால் நன்கலம்
கொடுப்பவுங் கொளாஅன் .....

என்னும் பகுதியில், கறக்குந்து, பரிக்குந்து என்னும் உந்தீற்றுச் சொற்கள், உறந்தையைச் சிறப்பித்து நின்றமை அறிக. என்னை யெனின், 'வெண்மண்டை யிற் (பால்) கறக்குமது, பசுங்குடையிற் பூப்பறிக்குமது, ... (ஆகிய) உறந்தை' என அமைதல் காண்க. ஈண்டும், இவ்வுந்தீற்றுச் சொற்கள், உறந்தையை விசேடியாமல் தனித்தனியே முடிந்தன எனின், முன்னர்,

'வெண்ணெல் வேலி
உறந்தை யன்ன உரைசால் நன்கலம்
கொடுப்பவும் கொளாஅன்'

என வருதல் சிறவாது என்க. ஆகலின், மேல்நின்ற அடிகளெல்லாம் உறந்தையையே சிறப்பித்து வருதல் வேண்டும் என அறியத்தகும். ஆயின், கோவூர்கிழார் பாடிய புறம், 386-ஆம் பாட்டில்,

வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின்
பாத்திப் பன்பலர்ப் பூத்தும்பின்று

---

1. 'பூத்தும் பின்று' என்னும் பாடம், அடியிற் கொடுத்துள்ள 'பூத்தமபினு' என்னும் பாடபேதத்தால் ஈண்டுக்

புறவே, புல்லருந்து பல்லாயத்தான்
வில்லிருந்த வெங்குறும்பின்று
கடலே, கால்தந்த கலனெண்ணுவோர்
கானற் புன்னைச் சினைநிலைக்குந்து
கழியே, சிறுவெள்ளுப்பின் கொள்ளை சாற்றிப்
பெருங்கனன்ஞட்டுமணெலிக்குந்து'

என்று, உந்தீற்றுச் சொற்கள் நிகழ்கால வினைமுற்றாய், தனித்தனியே முடிந்தனவால் எனின், ஆண்டும், அவற்றையடுத்து,

'அன்ன நன்ஞட்டுப் பொருநம் யாமே'

என வருதலின், மேலைய அடிகளெல்லாம், அந்நன்ஞட்டையே சிறப்பித்து நிற்றல் அமைதியாதல் அறிக. அன்றியும், ஒரே தொடர்பினவாய் வரும் வாக்கியங்களெல்லாம் பொருளமைதியில் ஒரே தன்மையனவாய் அமைந்திருத்தலே முறையாகும். ஈண்டு, நிலைக்குந்து, ஒலிக்குந்து என்பவற்றை நிகழ்கால வினைமுற்றாகக் கொள்ளின், அவற்றின் மேல் நின்ற, ததும்பின்று, குறும்பின்று என்பவற்றையும் நிகழ்கால வினைமுற்று எனக்கொள்ளுதலே முறை. அவை, நிகழ்கால வினைமுற்றல்ல என்பது வெளிப்படை. ஆகலின், ஈண்டும், 'வயல் பூத்ததும்பினதுவும், புறவு குறும்பினதுவும், கடல் கலனெண்ணுவோர் நிலைக்குமதுவும், கழி உமண் ஒலிக்குமதுவும் (ஆகிய) அன்ன நன்ஞடு' என்றுகொள்ளுதலே முறைமையாகும்.

கொள்ளப்பட்டது. முன்னர், குறும்பின்று, நிலைக்குந்து, ஒலிக்குந்து என வருதலின், 'ததும்பின்று' என்னும் பாடம் அமைதியாகுமேயன்றி, 'ததும்பின' எனப்பதிப்பிக்கப்பட்டுள்ள பாடம் அமைதியாகாது.

இதுகாறும கூறியவற்றுல் உந்தீற்றுச் சொற்கள், வினைசெயன் மருங்கிற் காலமொடு வரும் உம் என்னும் சொல்லோடு, 'து' என்னும் ஒன்றன்பால் விகுதி சேர்ந்து அமைந்த வினைப்பெயரே என்பதும், அது யாண்டும் பலமுறை அடுக்கி எண்ணியே வருகின்றது என்பதும், ஆகலின், அது நிகழ்கால வினைமுற்று அன்று என்பதும் தெளிவாகும். நிற்க.

'புறநானூற்றின் பழைமை' என்னும் நூலின் ஆசிரியர், 'மலையாள மொழியில், செய்யுந்து என்பது, நிகழ்கால முற்றுவினையாக வழங்குதலானும், அது, செய்யுந்து என்னுஞ் சொல்லின் திரிபு என்றல் அமைதியாதலானும் செய்யுந்து என்பது தமிழ்மொழியிலும், நிகழ்கால வினைமுற்றுகவேயிருந்தது என்றுரால் எனின், மலையாள மொழியில் வழங்குஞ் செய்யுந்து என்னும் முற்றுவினையின் இயல்பினை ஈண்டுக் கூறுகின்றேன்.

தமிழ்மொழியில் நிகழ்கால வினைமுற்றுச் சொல்லில், விகுதியொழிந்த சொல்லே, மலையாள மொழியில் நிகழ்கால வினைமுற்றுக அமைந்துள்ளது என்பது, கிரால், குண்டர்ட்டு, கால்ட்வெல் முதலிய மொழிநூலாராய்ச்சியாளர் துணிபு. அதுவே, 'கேரள பாணினீய' ஆசிரியருக்கும் கருத்தாதல், 'தமிழில், இன்றுவின் தோற்றம் எதுவோ அதுவே, மலையாளத்தில் உந்நுவிற்கும் என்பது முடிபு[1] என்று அவர் எழுதியிருத்தலான் அறியப்படும். ஆகலின், முதற்

1. கேரள பாணினீயம். பக்கம் 230.

கண், தமிழின் நிகழ்கால வினைமுற்றின் இயல்பினை ஆராய்தல் இன்றியமையாததாகும்.

தமிழில் இப்போது வழங்கும் நிகழ்கால முற்று வினை, பண்டைக்காலத்தில் வழங்கியதுஅன்று. செய்கின்றான், செய்கின்றாய், செய்கின்றேன் என்னும் முற்றுவினைகள் பண்டைத் தமிழ்ச்செய்யுட்களில் யாண்டும் வந்தில.

தமிழ்மொழியில் இறந்த காலத்தைக் குறித்தற்கு, இ, அல்லது, துவ்வையும், எதிர்காலத்தைக் குறித்தற்கு, கு, அல்லது பவ்வையும் வழங்குவர். காலத்தைக் குறிக்கும் எழுத்துக்கள் இவை என்று தொல்காப்பியனார் கூறவில்லை. ஆயினும், கு - எதிர்காலத்தைக் குறிக்கும் என்பது,

கடதற என்னும்....சொல்லே (தொல். வினை. 6)

என்னுஞ் சூத்திரத்தான் உணரப்படும்.

செய்கு - (செய்வேன்) என்னுஞ் சொல், இன்றும் தமிழ்ச் செய்யுட்களில் வழங்கி வருகின்றது. இச் சொல்லே, ஏன் விகுதி பெற்று, செய்கேன் (செய்வேன்) என்றும் வழங்குவதாயிற்று. செய்கு (செய்வேன்) என்னும் எதிர்காலச் சொல்லே, நொடிப்பொழுதின் பின்னர்ச் செய்யும் வினையைக் குறித்தற்கும், பல யாண்டுகளின் பின்னர்ச் செய்யும் வினையைக் குறித்தற்கும் வழங்குதல் கூடும். ஆதலின் 'இப்பொழுது செய்வேன்' என்று குறித்தற்கு, செய்கு என்னும் எதிர்காலச் சொல்லோடு, இன்று என்னுஞ் சொல்லைச் சேர்த்து, அதனோடு, ஏன், ஆன் முதலிய விகுதிகளைக் கூட்டி, செய்கின்றேன், செய்கின்றான் என்பவை

முதலிய நிகழ்கால வினைமுற்றுக்களை அமைத்திருக்கலாம்[1]. எதிர்காலவினை, இறந்தகாலவினையாகுங் காலமே நிகழ்காலமாதல் அறியத்தக்கது. இந் நிகழ்காலவினை இவ்வாறு அமைக்கப்பட்டதனாலேயே வழக்கில் வழங்குதல் இலதாயிற்று. வடமொழியில், தான் உரையாடுங் காலம்முதல் அடுத்து வரும் நடுயாமமளவும் உள்ள எதிர்காலத்து வினையைக் குறித்தற்கும், அதற்கு மேல் உள்ள எதிர்காலத்து வினையைக் குறித்தற்கும் வெவ்வேறாக வினைச்சொற்களை அமைத்து வழங்குதலும் ஈண்டைக்கு அறியத்தகும்.

இக்கூறியவற்றால், செய்கின்றேன் (செய்+கு+இன்று+ஏன்) என்பது, செய்கின்றேன் என்னும் பொருளதாகி, **யான் இப்பொழுது செய்வேன்** என நிகழ்கால வினைமுற்றாய் வழங்குகின்றது என்பது தெளிவாகும். க்-எதிர்காலத்தைக் குறிப்பது என்றும், அத

---

1. கன்னட மொழியில், இறந்த காலத்தைக் குறிக்கும் தவ்வோடு, எதிர்காலத்தைக் குறிக்கும் பவ்வைச் சேர்த்து, நிகழ்காலவினை அமைத்துள்ளது அறிக. போதம்-இறந்தகாலம்; போபம்-எதிர்காலம்; போதபம்—நிகழ்காலம். தெலுங்கு மொழியில், (எதிர்காலத்தைக் குறிக்குங் குவ்வின் திரிபாகிய) சுவ்வோடு, உன்ன (உள்ள) என்பதைச் சேர்த்து, சேயுசுன்ன என்பது போல நிகழ்காலவினை அமைக்கப்பட்டுளது. இவற்றை நோக்குமிடத்து, தமிழ்மொழியிலும், எதிர்காலங் குறிக்குங் குவ்வோடு இறந்தகாலங் குறிக்கும் இன், து என்னும் இரண்டனையுஞ் சேர்த்து, நிகழ்கால வினைமுற்றை யமைத்து வழங்கியிருக்கலாமோ எனவும் தோன்றுகின்றது. இருக்குது, போகுது என்பன போல்பவற்றில், குவ்வும், துவ்வுமே சேர்ந்துள்ளன. இருக்கு என்பது போல்வனவே வழக்கிற் பயில்கின்றன.

னோடு இன்று என்னுஞ் சொல் சேர்ந்து, கின்று என்று ஆயிற்று என்றும், கிரால், குண்டர்ட், [1]கால்ட்வெல், முதலாய ஆராய்ச்சியாளரும் கூறியுள்ளனர். இவற்றுல், தமிழில் செய்கின்று, நடக்கின்று, இருக்கின்று என வழங்கும் சொற்கள் மலையாளத்தில், செய்யுங்ங, நடக்குங்ங, இரிக்குங்ங என வழங்குகின்றன என்பது அறிக. மலையாள மொழியில், இரு, நட என்பன

---

1 Dr. Graul, I believe (in his "Outlines of Tamil Grammar") was the first to suggest the origination of this sign from k=g, a sign of tbe future in poetical Tamil, and indru, now. His idea appears to have been that Tamil was originally without a present tense, and that the present was a new secondary tense, formed from the future by the addition of a sign of present time. Kindru was thus=k-indru (then kiru). The same view seems to have been adopted, or independently arrived at, by Dr Gundert. The fact that the form of this particle retained in Malayalam is unnu (in older compositions often innu) would seem to prove that kindru, not kiru, was the form in use in Tamil prior to the final separation from Tamil of the Malayalam, and, therefore, not only the more classical form in Tamil, as it is admitted to be, but also the more ancient. This fact, though it does not prove the derivation of kindru from k-indru, yet favours that supposition.—Caldwell's Comparative Grammar, 3rd Edition, Page 494. க் என்பதனோடு, இற என்னுஞ் சொல் சேர்ந்து, இடையே னகரமெய் தோன்றப்பெற்று, கின்ற என்றுயிற்று என்றும், அதனோடு, ஆன், ஏன் முதலிய விகுதிகள் சேரும்போது, அதன் ஈற்றில் நின்ற அகரம் கெட்டது என்றும், கேரள பாணினீய ஆசிரியர் கருதியுள்ளார். கேரள பாணினீயம், பக்கம் 231.

போன்ற பல வினைப்பகுதிகள் கு - பெற்றும், செய், வரு என்பன போன்ற சில வினைப்பகுதிகள் கு - பெறும மூலும் வழங்குதலின், அவற்றின்மேல், இன்று என்பது சேர்க்க, அவை, இரிக்குந்து, நடக்குந்து என்றும், செய்யுந்து, வருந்து என்றும் அமைந்தன என அறிக.

ஆயின், தமிழில் இன்று என வழங்குஞ் சொல், மலையாளத்தில் உந்து எனத் திரிந்தது என்றல் எங்ஙனம் அமையும் எனின், கூறுவேன் :

தமிழில், ன்ற - என ஒலிப்பது, மலையாளத்தில், ன்ன என ஒலிக்கும். உதாரணமாக, நின்று - நின்னு, என்று - என்னு, குன்று - குன்னு, ஒன்று - ஒன்னு, அன்று - அன்னு என்பன போல்வன காண்க. இவ்வாறு வருதலைக் 'கேரள பாணினீய' ஆசிரியர், 'அநுநாஸிகாதி ப்ரஸரம்' என்று அமைத்துள்ளார். [1] இதனால், ன்று என்பது ன்னு என வருதல் பெறப்பட்டது ; இனி இகரம் உகரமாகத் திரிந்ததற்கு நியாயம் என்னெனினின்,

கன்னட மொழியில், அறியிம், தெளியிம், ஒழியிம் என்னும் முன்னிலைப் பன்மை வினைச்சொற்களில் உள்ள இம் விகுதி, தமிழ் மொழியில், அறியும், தெளியும், ஒழியும் என உம் விகுதியாக வழங்குகின்றது. இவற்றில், இம் என்பது, நீம் என்பதன் உறுப்பாகலின் அதுவே, உம் எனத் திரிந்ததென அறிக. தமிழ்மொழியிலேயே பண்டை நாளில், செய்யாதீம்[2] என வழங்கிய சொல், பிற்காலத்தில், செய்யாதும் என, இம் என்பது

1 கேரளபாணினீயம். பீடிகை, பக்கம், 22.

2 நீம் என்பதன் உறுப்பாகிய ஈம் என்பது செப்பாதீம், வாராதீம் எனப் பழைய நூல்களில் வழங்குகின்றது.

உம் என்றுகி வழங்குகின்றதன்றே! இனி, தமிழில், தம்பிரான், தம்பிராட்டி என வழங்குபவை, மலையாளத்தில், தம்புரான், தம்புராட்டி என, இகரம் உகரமாக மாறி வழங்குகின்றது. இம்முறையில், தமிழில் நிகழ்கால வினையிலுள்ள இன்று என்பதன் இகரம், மலையாளத்தில் உகரமாகத் திரிந்துளது என்பது தெளிவாகும். இன்று என்பதனீற்றில் உகரம் இருத்தலின், அதன் முதலில் உள்ள இகரமும் உகரமாக ஒலிக்கலாயிற்று.

தெலுங்கு மொழியில், இகரவீற்றுப் பெயர்களுக்கு முன், பன்மை விகுதியாகிய லு வருமிடத்து, அவ்விகரவீறு உகரவீறுகத் திரிந்து வழங்குகின்றது.

தல்லி + லு = தல்லுலு.
தண்ட்ரி + லு = தண்ட்ருலு.
பனி + லு = பனுலு

என்பன போல்வன காண்க. இவ்வுதாரணங்களில், இகரம், தன் முன் வந்துள்ள உகரத்தினுல் தானும் உகரமாகத் திரிந்துள்ளமை ஈண்டு அறியத்தகும். கேரளபாணினீய ஆசிரியர், 'தமிழில் இன்று என்பது மலையாளத்தில் உன்னு என்றுதலைப்பற்றி யாதோர் ஐயப்பாட்டிற்கும் இடமில்லை; பன்றி என்பது, பன்னி என்றுதல் போல, அநுநாஸிகாதிப்ரஸரத்தினுல், இன்று என்பது இன்னு என்றுகும். இகர உகரங்கட்கு மாறுதல் தாராளமாகையால், இன்னு என்பது எளிதில் உன்னு என மாறுதலுஞ் செய்யும். திராவிட பாஷைகளுக்கு இயல்பாயுள்ள (Harmonic sequence of vowels) ஸ்வரானுஸம்வாத நயத்திற்கு மலையாளத்தில் அதிக ப்ரசாரம் இல்லை யெனினும், அதுவும் ஈண்டுத்

துணை செய்தது என்னலாம். இதுமட்டுமன்று ; லீலா திலகம் முதலாய பழைய மலையாள கிரந்தங்களில், போகின்றது என இக்காரமே காண்கின்றது ; உகாரம் காணவில்லை. 'வராயின்னு' என்று எதிர்மறை உருவத்தில் இன்னு என்பதேயன்றி, உன்னு என்பது எந்தக் காலத்திலாகிலும் வந்திருக்குமோ என்பது ஐயப்பாடே[1]' என்று எழுதியிருத்தல் ஈண்டு நோக்கற்பாலது. இவற்றால், தமிழில், இன்று என வழங்குதலே மலையாளத்தில், உந்து என வழங்குகின்றது என்பது தெளிவாகும்.

'இன்று என்பதுவே உந்து எனத் திரிந்தது என்றல் பொருந்தாது ; ன்ற என்பது ன்ன எனத் திரியுமேயன்றி, ந்ற எனத் திரியாதன்றே ! மலையாள மொழியில், செய்யுன்னு என்று னகாரமிட்டு எழுதாமல் செய்யுந்து என நகாரமிட்டே எழுதுதலின், அது, செய்யுந்து என்பதன் திரிபேயாகும்' என்று 'புற நானூற்றின் பழைமை' என்னும் நூலின் ஆசிரியர் கூறினால் எனின், மலையாள மொழியில், கந்து, குந்து, அந்து, மூந்து, வெந்நவன் என்பவற்றிலும் நகாரமே இட்டெழுதுதலின், அவையும், முறையே, கந்து, குந்து, அந்து, மூந்து, வெந்தவன் என்னுஞ் சொற்களின் திரிபே எனல் வேண்டும் ; இவை, கன்று, குன்று, அன்று, மூன்று, வென்றவன் என்னுஞ் சொற்களின் திரிபாதலேயல்லாமல், கந்து, குந்து முதலியவற்றின் திரிபு ஆகாவன்றே ! ஆதலின், செய்யுந்து எனத் தந்நகரம் இட்டு எழுதுதல்பற்றி, அது செய்யுந்து என்பதன் திரிபு எனக் கொள்ளவேண்டும்

1. கேரளபாணி. பக். 230.

என்றல் அமைதியாகாமை அறிக. மலையாள மொழியில் னகார எழுத்து பிற்காலத்தில் வழக்காறற்று இறந் தமையின், அதற்கும் நகார எழுத்தே இட்டு எழுதி வருதலான், உன்னு என எழுத வேண்டுவதனையும் உந்து என எழுதி வருகின்றனர் என்பது அறியத் தக்கது.

இதுகாறுங் கூறியவற்றுல், மலையாள மொழியில் செய்யுந்து என வழங்குஞ் சொல், செய்யுந்து என்னுஞ் சொல்லின் திரிபு அன்று என்பதும், செய்யுந்து என்பது தமிழில் நிகழ்கால வினைமுற்றன்று என்பதும், அது காலமொடு வரும் உம் என்பதனோடு து சேர்ந்து வினைப் பெயராகி வருவது என்பதும், யாண்டும் பலமுறை அடுக்கியே வருதலின், அஃது எண்ணுப்பொருளில் வரும்வழியே வரும் என்பதும், அது கருதியே ஆசிரியர் தொல்காப்பியனர், 'உம் உந்தாகும்' என்னுஞ் சூத்திரத்தை, இடையியலில் எண்ணும்மைக்குச் சிறப்பிலக் கணங் கூறியவழி வைத்தார் என்பதும் நன்கு விளங்கும். ஆகலின், 'புறநானூற்றின் பழைமை' என்னும் நூல், உந்து என்பதுவே உது என்றும், உந் எள்றும், ந் என்றும் திரிந்தது என்று கூறுதலும் பொருந்தாது எனக் கொள்க. அவற்றைக் குறித்தும் எழுதப்புகின் மிகவும் விரிந்து, 'மற்றொன்று விரித்தல் என்னுங் குற் றத்திற்கு இடனுகுமாதலின், இவ்வளவில் நிறுத்து கின்றேன்.

---

8. அசைச்சொல்

அசைநிலைச் சொற்களாகக் கூறப்பட்டுள்ள சொற்கள், ஏனைய சொற்களைப் போலப் பண்டைக் காலத்தில், தமக்கெனச் சிறப்புப்பொருளுடையனவே என்பதும், அவற்றின் சிறப்புப்பொருள் அறியப்படா தொழிந்த காலத்தில், அவை அசைநிலைகள் எனக் கூறப்பட்டன என்பதும் மொழிநூல் வல்லார் கொள்கை. **கண்டீர், காணும், என்ப, அன்றே** முதலிய சொற்கள் சிறப்புப்பொருளுடையனவாகவும், அவற்றின் பொருள் சிறவாத இடத்தில், அவற்றை அசைநிலை எனக் கூறலாயினர் என்பது உய்த்துணரத் தக்கது. இக்கூறியவற்றால், அசைநிலைச் சொற்களும் முற்காலத்தில் சிறப்புப் பொருளுடையனவாகவே இருந்தன என்பது துணியப்படும்.

முன்னிலைக்கண் வரும் கண்டிசின் என்பது போன்ற சொற்களில் 'சின்' என்று பிரித்தல் தக்கதன்று; இன் என்று பிரித்தலே அமைதி. இது நீன் என்னும் பழைய முன்னிலையொருமைப்பெயரின் கூறு. கண்டிசின் என்பது போன்ற சொற்களின் உண்மைத் தன்மையை ஈண்டு ஆராய்வோம்.

கண்டிசின் என்பதன் தொல்லுருவம் கண்டிகின் என்பதே எனத் தெரிகின்றது. எவ்வாறெனின், முன்னிலைக்கண் கண்டிகும் என்னுஞ் சொல்லும்

அசைநிலையாய் வழங்குதலானும், அது பண்டு முன்னிலைப் பன்மையில் வழங்கியதாகுமாதலானும், அதற்கேற்ற ஒருமை வினை கண்டிகின் என்பதேயாகும் என்க.

ஆயின், கண்டிகின் என்பதில் ககரம் சகரமாய்த் திரிதல் எவ்வாறு அமையும் எனின் கூறுவல்.

தமிழ்மொழியில், சொற்களில் த்த=ச்ச ஆகவும், ந்த=ஞ்ச ஆகவும், ந=ஞ ஆகவும், த=ச ஆகவும் திரிந்து வழக்கிற் பயின்றும் செய்யுளில் அருகியும் வழங்குதல் அனைவரும் அறிந்ததுவே. இதற்குக் காரணம் யாது? மேல்நின்ற எழுத்துக்களானே இத் திரிபு உண்டாகின்றது. நடத்தினன், காத்தான், நிறுத்தான், பூத்தது, கோத்தான் என்பனபோல்வன வற்றில் த்த—திரியாதேயிருக்க, அடித்தான், நீத்து, அடைத்தான் என்பனபோல்பவற்றில் த்த—ச்ச ஆய்த் திரிந்து வழங்குதலும், நடந்தான், இருந்தான், மோந்தான் என்பன போல்பவற்றில் ந்த—திரியாதேயிருக்க, பிழிந்தான், நீந்தினன், அலைந்தான் என்பனபோல் பவற்றில் ந்த—ஞ்ச ஆகத் திரிந்து வழங்குதலும், இருக்குநர், வெளவுநர் என்பன போல்பவற்றில் ந—திரியாதேயிருக்க, அரிநர், வலைநர் என்பனபோல் பவற்றில் நகாரம் ஞகாரமாய்த் திரிந்து வழங்குதலும், வருதி, போதி என்பவற்றில் த—திரியாதேயிருக்க, பெரிது, இளது, என்பவற்றில் த—ச ஆகத் திரிந்து வழங்குதலும் ஆழ்ந்து நோக்கின், மேல் நின்ற எழுத்துக்களானே இவை திரிபவாயின என்பது எளிதில் போதரும். உயிரெழுத்துக்களுள் இ, ஈ, எ, ஏ, ஐ இவ்

வைந்தெழுத்துக்களும் தாலுவில் (இடையண்ணத்தில்) பிறப்பனவாகலின் அவை 'தாலவ்யம்' ஆகும். த, நக்கள் பல்லினிடத்தில் பிறப்பனவாகலின் 'தந்த்யம்' (dentals) எனப்படும். இடையண்ணத்தில் பிறக்கும் எழுத்துக்களைச்சாரப் பல்லினது அடியிற் பிறக்கும் எழுத்துக்களை யொலித்தல் அருமையும், அவற்றை இடையண்ணத்தில் ஒலித்தல் எளிமையுமாய் இருத்தலின், மக்கள் இவ்விடங்களில் தந்த்யங்களைத் தாலவ்யங்களாக ஒலிக்கின்றனர். உ, ஊ, ஒ, ஓ, ஔ இதழில் பிறப்பனவாகலின் அவற்றின்முன் வருந் தந்த்யம் தந்த்யமாகவே ஒலித்தல் எளிமையாகலின் அவற்றை அவ்வாறே ஒலிக்கின்றனர். மெய்யெழுத்துக்களுள் யகாரம் தால்வயம் (Palatal) ஆகலின், அதன்முன் வருந் தந்த்யம் தாலவ்யமாய்த் திரிந்து வழங்குகின்றது. தேய்ந்து, தேய்த்து என்பவனவை தேஞ்சி, தேச்சி என்றதலின் காரணம் இதுவே. மொழிமுதற்கண் இ, ஈ, எ, ஏக்கள் ஊரப்பெற்ற ககரம் சகரமாய்த் திரிந்து வழங்குதலும் ஈண்டு அறியத்தகும்.

இதுகாறும் கூறியவற்றுல் கண்டிகின் என்னும் முன்னிலை யொருமைவினையே கண்டிசின் என்றுயிற்று என்பது தெளிவாகும். ஆகவே, அவ்வினையின் விகுதி 'இன்' என்பதும், அது நீன் என்னும் பழைய பெயரின் கூறு என்பதும் அறியப்படும்.

இனி, அசைச்சொற்களுள் ஒன்றுகிய 'இகும்' என்பதைப் பற்றியும் ஈண்டு ஆராய்தல் ஆவசியகமாகின்றது. ஆசிரியர் தொல்காப்பியனர்,

'மியா இக மோமதி இகும் சின் என்னும்
ஆவயினுறும் முன்னிலை யசைநிலை'

என்று கூறி, அடுத்து,

'இகுமும் சின்னும் ஏனை யிடத்தொடுந்
தகு நிலையுடைய என்மனார் புலவர்'

என்று கூறியிருத்தலை நோக்கின், **இகும், சின்** இவை முதலில் முன்னிலைக்கண்ணே வழங்கிவந்தன எனவும், நாளடைவில் அவை ஏனை இரண்டிடங்களிலும் வழங்கலாயின எனவும் புலனாகும். ஆகவே, இகும் என்பதுவும் (இசின் (சின்) என்பதுபோல) முன்னிலைச் சொல்லே என்பது வலியுறும். ஆகலின், ஈண்டு ஆராய்தற்கெடுத்துக்கொள்ளளப்பட்டது.

கண்டிகும் என்பது காண் என்னும் பொருளில் பயின்று வந்துளது.

'மெல்லம் புலம்ப கண்டிகும்.'

'கண்டிகும் மடவரல் புறவின் மாவே'

என்னு மிடங்களில், கண்டிகும் என்பது காண் என்னும்பொருளதாதல் அறிக. இகும் என்பது அசையாயின் காணிகும் என்று வருதலே அமையும். முதனிலை விகாரப்பட்டும் ஒற்றுத் தோன்றியும் வருதல் வேண்டுவதின்று. ஆகலின், இகும் என்பதனை அசைநிலையாகக் கொள்ளுதல் அமையாது.

கண்டிகும் என்பது கண்டீகும் என்னுஞ் சொல்லின் திரிபு. அது கண்டருளும் என்னும் பொருளதாகும். ஆகவே, அது முன்னிலைப் பன்மைக் குரிய

சொல்லாதல் நன்கறியப்படும். நீம் என்னும் பெயர் முன்னிலைப் பன்மைக்கண் வழங்கிய காலத்தில், கண்டிகும் என்பது அப்பெயர்க்குரிய வினைச் சொல்லாய்ப் பயின்று வந்தது. அப்பெயர் முன்னிலைக்கண் விலக்குண்ட காலத்தில், முன்னர்ப் பொருட்போலி வுடையதாயிருந்த இகும் என்னுஞ் சொல் அசைநிலையாகத் தள்ளப்பட்டது. பட_வே, அது முன்னிலைக் கண்ணே யன்றி ஏனையிடங்களிலும் வருவதாயிற்று.

இக் கூறியவாற்றுன் இகும் என்பது முன்னிலைப் பன்மைக்கண் வழங்கிய வினைச்சொல்லே என்பது தெளிவாகும். இச்சொல்லில் உள்ள மகரம் நீம் என்னும் பெயரில் உள்ள பன்மையை யுணர்த்தும் மகரமே.

கண்டிகும் என்னுஞ் சொல்லில் இறுதியிலும் அதன் மேலிடத்திலும் இதழிற் பிறக்கும் மகரமும் உகரமும் இருத்தலின், உகரவுயிர் ஊர்ந்த ககரம் திரிந்திலது என் றறிக.

இனி, 'மோ என்னுஞ் சொல்லை நோக்குவோம்;

மோ என்னும் விகுதி பழைய தமிழில் சிலவழி, முன்னிலையேவ யொருமைக்கண் வருவது என்ரூர் டாக்டர், கால்ட்வெல். அஃது அமைவுடையதன்று. உண்மையை நோக்கின், அது பன்மையைக் குறிக்கும் மகரமெய்யோடு ஓகாரம் சேர்ந்தமைந்தது என்பது புலனுகும்.

'மாமறை மாக்கள் வருகுலங் கேண்மோ'

என்பது போன்ற இடங்களில் இவ்வுண்மை நன்கு தெளியப்படும். கேண்மோ என்றது கேண்மின் என்னும் பொருளது. ஆகலின், ஈண்டு ஓகாரம் அசையாகும். நீம் என்னும் முன்னிலைப் பன்மைப் பெயரில் மகரம் விலக்கப்பட்டதனால் முன்னிலைப் பன்மைவினைக்கண்ணும் மகரம் வருதல் கொள்ளப்படாதாயிற்று. ஆகலின், மகரத்தைத் தனியாகப் பிரிக்காமல் மோ என்று கொண்டு அதனை அசைநிலை என்று தள்ளினர். அசைநிலை எனப்பட்டதனால், 'கண்டது மொழிமோ' என்று முன்னிலை யொருமைக்கண்ணும் வருவதாயிற்று. இக்கூறியவற்றால் மோ என்பது விகுதி யன்றுதல் அறியப்படும்.

இனி, மியா என்னும் அசைச் சொல்லை நோக்குவோம். பழையவுரையாளர்கள், கேண்மியா, சென்மியா என்பவற்றை உதாரணமாகக் காட்டியிருக்கின்றனர். ஈண்டு, கேண்ம், சென்ம் என்னும் பழைய முன்னிலைப் பன்மையேவல்வினைமுற்றோடு யா என்னும் அசைநிலைச் சொல் சேர்ந்துளது.

'தன்னெழி மெய்முன் யவ்வரின் இகரம் துன்னும்'

ஆகலின், மகரத்தின் முன் இகரம் வந்துளது. பழைய முன்னிலைப் பன்மைப் பெயரில் மகரம் விலக்கப்பட்டதனால், மோ என்று பிரித்தது போல, மியா என்று பிரிக்கலாயினர். ஆகலின், உண்மையில் மியா என்பதொரு சொல் இல்லை என்பது விளங்கும். யா என்னும் அசைநிலையும் ஏ என்னுஞ் சொல்லின் திரிபு. இச் சொல் (ஏ) இக்காலத்திலும் முன்னிலைக்கண் வழங்குதல் உளது.

ஆசிரியர் கூறிய முன்னிலை அசைச்சொற்களுள் மதி என்னுஞ் சொல் மலையாளத்தில், 'போதும்' என்னும் பொருளில் முன்னிலைக்கண் வழங்குகின்றது. அப்பொருள் அமையுமிடனும் பழைய செய்யுட்களில் உளது.

'வாஅப் பாணி வயங்குதொழிற் கலிமாத்
தாஅத் தாளிணை மெல்ல வொதுங்க
இடிமறந் தேமதி வலவ குவிமுகை
வாழை வான்பூ வூழுறு புதிர்ந்த
ஒழிகுலை யன்ன திரிமருப் பேற்றெரு
கணைக்கால் அம்பிணைக் காமர் புணர்நிலை
கடுமான் தேரொலி கேட்பின்
நடுநாட் கூட்டம் ஆகலும் உண்டே' (அகம். 134)

இதில், கடுமான் தேரொலி கேட்பின், ஏற்றெரு பிணை புணர்நிலை நடுநாளில் ஆகல் இலதாகும். ஆகலின், கலிமா மெல்ல ஒதுங்க இடி மறந்து ஏ (ஏவு) மதி என்று பொருள் முடிதலின், மதி என்பதற்கு, சாலும், போதும் என்னும் பொருள் அமைதியாதல் அறிக.

இனி, முன்னிலை யசைச்சொற்களுள் 'இக' என்ப தொன்று மட்டும் ஆராய வேண்டுவதாயுளது. நிற்க,

இனி ம் என்னும் எழுத்தினை நோக்குவோம்.

'முன்னிலை முன்னர் ஈயும் ஏயும்
அந்நிலை மரபின் மெய்யூர்ந்து வருமே'

என்று விதித்தவர் இன்ன எழுத்து வரும் என்று கூறிற்றிலர். ஆயின், ஏகாரம் ஊர்ந்து வருதற்குரிய எழுத்தாக மகரம் வந்துள்ள சொற்களை உரையாளர் காட்டியுள்ளனர்.

'அட்டி லோலை தொட்டனை நின்மே.'
'மரந்தையன்ன என் நலந்தந்து சென்மே.'

இவ்வடிகளில் உள்ள நில், செல் என்னுஞ் சொற்க ளோடு ஏகாரம் ஊர்ந்து வரவேண்டுமாயின் பிறிதொரு மெய்யெழுத்து ஆண்டு வருதல் ஏன்? நில்லே, செல்லே என்று ஏகாரம் ஊர்ந்து வருதல் இயலுமே! உயிரெழுத்து ஊர்ந்து வருதற்கு இயை பில்லாத விடத்திலன்றே மெய்யெழுத்து இடையே வருதல் வேண்டும்.

'இன்ன துறைவி யரும்படர் கூரே'

என்னுமிடத்து, கூர என்னுஞ் சொல்லோடு ஏகாரம் சேர்ந்து கூரையே என்று வருதல் அமையுமன்றே? ஈண்டு மகரமெய் வருதல் ஏன்? வேறுயாதேனும் ஒரு மெய்யெழுத்து வருதலின்றி மகரமெய்யே யாண்டும் வருதல் ஏன்? இவற்றை ஆராயின், மகரமெய் ஏகாரம் ஊர்ந்து வருதற்பொருட்டு இடையே வந்தது அன்று எனப் புலனுகும். இதன் உண்மைநிலை யாதோ எனின், மேல் ஆராய்ந்த 'மோ,' 'மியா' என்னுஞ் சொற்களில் உள்ள மகரத்தைப் போன்று ஈண்டும் முன்னிலைப் பன்மையை உணர்த்தற்கு வந்த மகரமேயாகும்.

முன்னிலை யொருமை வினைக்கு மேல் ம்—சேர்ந்து நில்+ம்=நின்ம் என்று ஆகியுளது. இவ்வாறே மற்றை யனவும். இத்தகைய வழக்குப் புறநானூற்றுச் செய்யுட் களில் காணப்படுகின்றது.

'இரும்பேரொக்கலொடு தின்ம் எனத் தருதலின்.'
'உண்ம் என இரக்கும் பெரும்பெயர்ச் சாத்தன்.'

இவ்வடிகளில் பன்மையைக் குறிக்க மகரம் வந்துள்ள தறிக. இம் மகரம் நீம் என்னும் பழைய பன்மைப் பெயரிலுள்ள மகரமே.

---

9. 'தெவ்'வா, 'தேவ்'வா?

மதுரைக் காஞ்சியில்,

'1நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசை'

என்று பதிப்பித்திருக்கும் அடிகட்கு, 'நீரை இடாவான் முகந்துகொள்ளும் நிரையாக நின்று தொழில் செய்வாரிடத்தே ஒலிக்கும் ஓசை' என்னும் உரை காண்கின்றது. 'நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்' என்னும் அடிக்கு, 'நீர்த்தெவு நிரைத்தொழுவர்' என்னும் பாடாந்தரம் கொடுக்கப்பட்டுளது. அன்றியும், மேலையடிகளின் உரையின் கீழ்க்குறிப்பில், 'தெவ்வு என்ற பாடமே நேரானது' என்று குறிக்கப்பட்டிருக்கின்றது. ஆயின், தொல்காப்பியப் பதிப்புக்களெல்லாவற்றிலும், 'தெவுக் கொளற்பொருட்டே' என்னும் பாடமே உளது. இளம்பூரணருரையில், 'நீர்த்தெவு நிரைத்தொழுவர்' என்று உதாரணங் கொடுக்கப்பட்டுளது. சேனாவரையத்தில், 'நீர்த்தெவு நிரைத்தொழுவர்' என்னும் உதாரணமும், 'தெவும் தெவ்வும் முறையானே கொள்ளுதலும் பகையும் ஆகிய குறிப்பு உணர்த்தும்' என்னும் உரையும் காண்கின்றன. நச்சி-

---

1. இடா முதலியவற்றுல் நீரை இறைத்தற் பொருளில் 'தேவு' என்னுஞ் சொல் மலையாளமொழியில் வழங்குகின்றது. இப்பொருளே ஈண்டு அமைவுறுகின்றது. ஆகலின், கொளற் பொருட்டில் வந்ததற்கு இவ்வடி அத்துணை அமைவுடைய உதாரணமாதல் இன்று.

னுர்க்கினியருரையில், 'தெவு கொள்ளுதலாகிய குறிப்பு உணர்த்தும்' என்னும் உரையும், 'நீர்த்தெவு நிரைத்தொழுவர்' என்னும் உதாரணமும் காண்கின்றன. தெய்வச்சிலையாருரையில், 'தெவு என்னுஞ் சொல் கொள்ளுதல் என்பதன் பொருள் படும்' என்னும் உரையும், 'நீர்தெவு நிரைத்தொழுவர்' என்னும் உதாரணமும் உள்ளன. இப்பதிப்புக்களுளொன்றனிலாதல், 'தெவ்வுக் கொளற்பொருட்டே' என்று வகரமெய் இரட்டித்த பாடம் காண்கிலது; உதாரணத்திலும் வகரமெய் இலது.

பத்துப்பாட்டின் பதிப்புக்களில், 'நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்' என்று வகரமெய் சேர்த்துப் பதிப்பித்திருப்பதற்கு முக்கியக் காரணம் பிரயோகவிவேகமே ஆகும். அந்நூலில், [1]"நாநார்த்த பதத்தையெல்லாம், "வர்ணவற்பாவம்" என்னும் எழுத்தொப்புமையுடைய பலபொருளொருசொல், பலசொல்லல்லது ஒருசொல் அன்று எனவும், ஒன்றல்லவை பல என்பதனுல் பல என்பதல்லது ஒருசொல்அன்று எனவும், இரு சொல்லாதலின் இருகால் உரைக்க எனவும் வடநூலார் கூறுவர்: என்னை? "பய: க்ஷீரம் பயோம்புச" என அமரசிங்கத்துள் வருதலின் என்க. தொல்காப்பியரும் "தெவ்வுக் கொளற்பொருட்டே", "தெவ்வுப் பகையாகும்" எனவும் இரட்டித்துக் கூறுவர்" என்பது காண்கின்றது. இஃது அமரசிங்கன்கருத்தாயின் அமரத்துட் பலபொருள் ஒருசொற்றொகுதி (நாநார்த்த வர்க்கம்) என்ற சொல்வழக்கிற்கே இடனின்று; பல பொருளைத் தருமிடத்திற் பல சொல்

1. திங்நுப். 6

ஆகுமன்றே? ஆகையால், பலபொருளொருசொல்-எல்லாவற்றையும் பலகால் எடுத்துக்கூறியிருத்தல் வேண்டும். எவ்வாறெனின், அவர் காட்டிய 'பயஃ க்ஷீரம் பயோம்புச' என்பதுபோல. இனி, 'பய; க்ஷீரம் பயோம்புச' என்பதன் பின்னுள்ள அடியை நோக்குவோம்.

'ஓஜோ தீப்தௌ பலே ஸ்ரோத இந்த்ரியே நிம்நகாரயே'

என்னும் அடியில், தீப்தி பலம் என்னும் இரு பொருளையுடைய ஓஜஸ் என்னுஞ் சொல்லையும், இந்திரியம் ஆற்றினெழுக்கு என்னும் இருபொருளையுடைய ஸ்ரோதஸ் என்னுஞ் சொல்லையும் இருகால் கூறியிருத்தல்வேண்டும்; அங்ஙனம் கூறிற்றிலரே! இனி, நாநார்த்தவர்க்கத்தின் முதற்கண்,

'ஆகாசேத்ரிதிவே நாகோ லோகஸ்து புவநே ஜநே'

என்று, இரண்டு பொருளுடைய நாக என்னுஞ் சொல்லையும், லோக என்னுஞ் சொல்லையும் ஒருகாற் கூறியுள்ளாரேயன்றி இருகாற்கூறினரல்லர். யமன் முதலிய பதின்மூன்று பொருளையுடைய ஹரி என்னுஞ் சொல்லையும் ஒருகாற் கூறியதேயன்றிப் பலகாற் கூற்றிலர். ஆதலின், 'இரு சொல்லாதலின் இருகால் உரைக்க' என்பது வடநூலாருள் ஒருசாரார் கொள்கையாதலேயன்றி எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததன்று என்பது நன்கறியப்படும். இதனை, 'அப்பயதீக்ஷிதர் [1]"ஏகநாளாவலம்பி பலத்துவந்துவம்" போல என்று திருஷ்டாந்தங் கூறி, ஒருகால் உரைக்கவே பல பொருளிற் பிரவிருத்தி நிமித்தம் ஒருங்கு தோன்றும் என்றுங் கூறுவர்' என்று

1, 'ஏகநாளாவலம்பி பலத்வயவத் எள்பது ஒரு நியாயம்.

பிரயோக விவேகமுடையரார்தாமே கூறியிருப்பதனுன் அறிதல் கூடுமே. 'ஸக்ருத் உச்சரித: சப்த: ஸக்ருத் ஏவ அர்த்தம் கமயதி' (ஒருகால் உச்சரிக்கப்பட்ட சொல் ஓரர்த்தையே தெரிவிக்கும்) என்னும் நியாயத்தை மேற்கொண்டவர்களும் சொற்சுருங்குதற் பொருட்டுப் பலபொரு ளொருசொல் ஆண்டனராயினும், பொரு ளுரைக்குங்கால் ஆவ்ருத்தி செய்து பல பொருள் கூறுவர்.

இவற்றுல், பல பொரு ளுடைய சொல்லைப் பல காற் கூறுதல் வேண்டும் என்னும் முறைமை அமர சிங்கனுக்குக் கருத்தன்று என்பது அறியலாகும். ஆயின், பயஸ் என்ற சொல்லை இருமுறை கூறியது என்னெனின், 'விருத்தம் அமைவுறல் வேண்டி இங் கனம் கூறியிருத்தல் வேண்டும் என்று சொல்வது மிக்க அமைதி' என்று பாரமேச்வரீய வியாக்யானம் கூறுஞ் சமாதானம் உட்கொளத்பாலது.

இனி, தொல்காப்பியத்தை நோக்குவோம்: தொல்-காப்பியனுர் பல பொருள் தருஞ் சொற்களுள் ஒன்றனை யாவது பலகால் எடுத்துக் கூறிற்றிலர்.

'பணையே பிழைத்தல் பெருப்பு மாகும்'
'படரே உள்ளல் செலவு மாகும்'
'அழுங்கல் இரக்கமும் கேடுஞ் செய்யும்'
'செழுமை வளனும் கொழுப்பு மாகும்'

என்னும் இச் சூத்திரங்களிற் கூறப்பட்ட பணை முதலிய சொற்களெல்லாம் ஒன்றற்கு மேற்பட்ட பொருளை யுடையனவாயிருப்ப், அவற்றை ஒருகால் கூறியதுவேயன்றிப் பலகால் உரைத்திலரே! இதனுல், 'தெவ்வு' என்னுஞ் சொல் இருபொருள் தருதலின்

அதனை இருகாற் கூறினர் என்ற கூற்றுச் சிறிதும் அமைவதன்றுதல் அறியப்படும். ஆகலின், பழைய உரைகாரரனைவரும் மேற்கொண்டு காட்டியுள்ள வடிவமே உண்மையாவதன்றிப் பிரயோகவிவேக நூலார் கொண்டது உண்மையாதல் இன்று என்பது கூறுமலே விளங்கும். ஆயின், அமரசிங்கன் ஓரோவழி விருத்தம் அமைதல் வேண்டி இருகாற் கூறியாங்குத் தொல்காப்பியரும் அடி நிரம்புதல் வேண்டி இருகால் உரைத்தார் என்று கொள்ளுதல் கூடும் எனின், அன்ன தன்று, 'தெவ்வுப் பகையும் கொளற்பொருட்டு மாகும்' என்று கூறின் அடி நிரம்புமாகலின்.

இனி, பழைய உரைகாரர் கொண்ட சொல் யாதோ எனின், **'தேவு'** என்பதுவே. ஓலையேட்டில் எழுதுங்கால் மெய்கட்கும் எகரஒகரங்கட்கும் புள்ளி யிடும் முறை மேற்கொள்ளப்படாததனுன், **தேவு** என்பது **தெவு** என்று எழுதப்படும். தொல்காப்பிய வுரைகளைப் பதிப்பித்தவர்கள் தெவு என்றே பதிப்பித் தனர். மாந்தரஞ் **சேர** லிரும்பொறை என்பது மாந்தரஞ் **சொ** லிரும்பொறை என்றும், **'சேரன்** மட வன்னம்' என்பது **'சொன்** மடவன்னம்' என்றும் பதிப்பிக்கப்பட்டமை ஈண்டைக்குக் கருதத்தகும்.

இனி, **தேவு** என்பதுவே உண்மைப் பாடம் என்பது யாதனிற் பெறப்படும் எனின், கூறுவேன்;

ஆசிரியர் தொல்காப்பியனுர் பெரும்பாலும் எது-கை மோனைகள் அமைத்தே சூத்திரம் செய்துள்ளார். எதுகைக்கண், இரண்டா மெழுத்தொன் றெதுகையே யன்றி இனவெதுகை முதலியனவும் அமைந்திருக்கும். இதனைப் பலவிடத்துங் காணலாகும்'

'நிட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி எழுஉதல் என்மனர் புலவர்.'

'நெட்டெழுத் திம்பரும் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே'

என்பன காண்க. இனி, உரியியலிலேயே நோக்குவோம்:

'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொன் மேன.'

'உருஉட் காகும் புரைஉயர் பாகும்
குருவும் கெழுவும் நிறனு கும்மே.'

'செல்லல் இன்னல் இன்னு மையே
மல்லல் வளனே ஏபெற் றாகும்.'

இவ்வாறு வந்துள்ளன பல. இனி, இச்சொல் (தேவு) வந்துள்ள சூத்திரத்தின் முதலடி,

'தாவே வலியும் வருத்தமு மாகும்'

என்றிருத்தலின், இரண்டாம் அடி,

'தேவுக் கொளற்பொருட்டு தெவ்வுப் பகையாகும்'

என்றே அமைந்திருக்கும் என்பது எளிதிற் புலனாகும். தொல்காப்பியப் பதிப்புக்களில் சூத்திரத்திலும் உரைகளிலும் உதாரணங்களிலும் தெவ்வு என்று வகரமெய் இரட்டாதிருத்தலும் இப்பாடத்தை வலியுறுத்தும்.

'தேவு என்னுந் தமிழ்ச்சொல்' என்னுங் கட்டுரையில் இன்னும் சில காரணங்கள் எழுதப்பட்டுள்ளன. அக்கட்டுரையிற் கண்டு கொள்க.

---

10. நக்கீரரா, நற்கீரரா?

சொற்களின் உண்மைத் தன்மை யறிந்து, இன் புறும் இன்பம் இணையில்லாதது. ஆகலின், ஈண்டு நக்கீரர் என்னுஞ் சொல்லின் தன்மையைச் சிறிது ஆராய்தும் :—

"குல நீணெயல் நம்பி, ...நீணிரை நப் பின்னே
யில வலர்வா யின்ன மிர்தம் எய்தினன்" (கோவிதை—74)

செய்யுளின் உரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர்,

"பின்னே, அவள் பெயர்; ந—சிறப்புப் பொருள் உணர்த்துவ தோரிடைச்சொல்; நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல; நம்பின்னை விகாரமுமாம்"

என்று எழுதியிருத்தலின், நக்கீரன் என்பதில், ந — சிறப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல் என்றும், கீரன் என்பது பெயர் என்றும் அறிதல் கூடும்.

இனி, நச்சினார்க்கினியர், "நம்பின்னை விகாரமு மாம்" என்றெழுதி யிருத்தலின், அது நம்பின்னை என்பதன் விகாரம் எனவுங் கூடும்.

"பெய்வளைக் கையாள்நம் பின்னைதா னுமென்றே"
(ஆய்ச்சியர் குரவை)

என்னுஞ் சிலப்பதிகார அடியின் உரையில் "நீணிரை நம்பின்னை" என்றார் பிறரும்; நப்பின்னை என்பாரும் உளர்' என்று அடியார்க்கு நல்லார் எழுதியிருத்தலின் "நம்பின்னை" என்பதுவே சிந்தாமணிச் செய்யுளிலில் அவர்கண்ட பாடம் என்பது விளங்கும். எவ்வாறு யினும் நம்பின்னை என்பதே விகாரமில்லாத பெயர் என்பது மேற்காட்டியவற்றான் அறியப் படுமன்றே?

ஆகவே, இனி நம்பிள்ளை என்பதில் "நம்" என்பதன் உண்மைத் தன்மையை ஆராய்தல் வேண்டும்.

மணவாள மாமுனிகள் 'உபதேச ரத்ன மாலை'யில்

"நம்பெருமாள் [1]நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
என்பர் அவரவர்தம் ஏற்றத்தால்" (உபதேச. 50)

என்று அருளியிருத்தலின், நம் என்பது ஏற்றத்தை உணர்த்துவதேயாகும். ஆயின், நம் என்பது சிறப்புப் பொருள்தரும் சொல்லாதல் யாங்ஙனம்? இதுவும் ஆராய்தற்பாலதே. நிற்க.

பண்டைப் புலவருட் பலரது பெயர்க்குமுன் 'நல்' என்னும் அடைமொழி காண்கின்றது.

நல்லந்துவனர், நல்லாதனர், நல்லுருத்திரன் என உயிர்முதற்பெயர்கள் வருமிடத்தும், நன்னாகனார், நன்னாகையார், நன்மார்பனர், நன்முல்லையார், நன்மூலனர் என மெல்லெழுத்துமுதற்பெயர்கள் வருமிடத்தும், நல்விளக்கனர், நல்வெள்ளியார், நல்வெள்ளையார், நல்வேட்டனர் என இடையெழுத்துமுதற்பெயர்கள் வருமிடத்தும், 'நல்' என்பதுவே அடைமொழியாக வந்துளது.

இவ்வாறு உயிர், மெலி, இடையெழுத்துக்கள் முதற்கண் உள்ள பெயர்கள் வரும்வழி, நல் என்னுஞ் சொல்லே சிறப்புப்பொருள் உணர்த்தும் அடைமொழியாய் வந்திருத்தலை நோக்கின், ஏனை வல்லெழுத்துமுதற் பெயர்கள் வரும்வழியும் 'நல்' என்னுஞ்

---

1. நம் பெருமாள், நஞ்சீயர் முதலியவற்றை நோக்கி 'நம்மாழ்வார் என்று கூறப்பட்டுளது. இதனை 'ஒற்றுமைப் போலி' (Analogy) என்பர்.

சொல்லே அடைமொழியாக வந்திருத்தல் வேண்டும் என்பது எளிதிற் புலனாகும்.

இது, நற்சேந்தனார் (121), நற்றமனார் (133) என்று நற்றிணையிலும், கோடி மங்கலம் வாதுளி நற்சேந்தன் (279), மதுரைப் பாலாசிரியர் நற்றமனார் (92) என்று அகநானூற்றிலும் காணுதலானும், நற்கீரர் எனப் பண்டையோர் எழுதிவந்த வழக்கானும் நன்கு தெளியப்படும். பண்டையோர் வழக்கில் நற்கீரர் என்று வழங்கியதனை ஹாலாஸ்ய மாகாத்மியத்தில் நக்கீரர் எனவே காணப்படுதலின் அறிதல் கூடும். நக்கீரர் என்று பண்டு வழங்கியிருக்குமாயின் நக்கீரர் என அந் நூலில் வழங்குதற்கு நியாயமில்லை. ஆகலின், அது தமிழ்ப் பெயரின் திரிபென்பதே அமைவுடையது.

இதுவேயன்றி, "நற்கீரன் என்று சிலகாலத்துக்கு முன் வழங்கிய பெயரை" என்று, பண்டிதர், இ. வை. அனந்தராம ஐயரவர்கள் எழுதியிருத்தலானும் அறியப் படும். இன்னும், பக்குடுக்கை நன்கணியார் (புறம்) எனக் காணுதலும் இதனை வலியுறுத்தும். ஈண்டு 'நல்' என்பது 'நன்' எனத் திரிந்து நிற்றல் அறியத்தக்கது.

இவற்றுள், நம்பினை, நம்பெருமாள், நஞ்சீயர், நம்பிள்ளை என்னும் பெயர்களிலும் 'நல்' என்னும் அடைமொழியே 'நன்' என்றாகி 'நம்' என மருவி நிற்கின்றது என்பது நன்கறியப்படும். நன்பகல், நன் பொருள் என்னுஞ் செய்யுள்வழக்கானும் 'நல்' என்பது 'நன்' என நிற்றல் தெளியப்படும். பொருள்-களின் சிறப்பினை யுணர்த்தற்கு 'நல்' என்னும் அடை மொழி கொடுத்து வழங்கும் வழக்கு நற்காட்சி, நன்

ஞானம், நல்லொழுக்கம் என்பனவற்றுலும் அறிய வரும். மேற் கூறியவற்றுல், வல்லெழுத்து முதற் பெயர்கள் வருமிடத்தும் 'நல்' என்பதுவே அடை மொழியாயுளது எனவும், அதுவே முன்வந்த வல் லெழுத்தை நோக்கி நற்சேந்தன் என்பதிற்போல 'நற்' எனத் திரிந்து, நச்செள்ளை என்பதிற்போல மருவிற்று எனவும், நன்கணியார் என்பதிற்போல 'நன்' எனத் திரிந்து, நம்பின்னை என்பதிற்போல மருவிற்று எனவும் நுண்ணிதின் உணரப்படும். நல்செய் என்பது நன் செய் என்றுகி நஞ்செய் (நஞ்சை) என மருவியது போல, நல்பின்னை என்பது நன்பின்னை என்றுகி நம் பின்னை என மருவிற்று எனக் கொள்க.

இவ்வாறின்றி, ந - என்பது ஓர் இடைச்சொல் எனக் கொள்ளின், நப்பின்னை என ஒற்றிரட்டி வருதல் அமையுமேயன்றி, நம்பின்னை என இனமெய் தோன்றப் பெற்று வருதல் அமைதியாதல் இல்லை; அதனை விகாரம் எனின், இவ்வகை விகாரம், செய்யுளின் அடி தொடை நோக்கி ஆண்டு வருதலே யன்றி அடியின் இடையே வருதல் இல்லை. "பெய்வளைக் கையாணப் பின்னைதா னுமென்றே" என்று விகாரமில்லாது வருதல் கூடுமே; அங்கனமாகவும் "பெய்வளை கையாணம் பின்னைதா னுமென்றே" என்று விகாரம் பெற்று வருதல் எற்றிற்கு?

இதுகாறுங் கூறியவற்றுல், கீரன் என்பது முதலிய பெயரைச் சிறப்பிக்க வருவது 'நல்' என்னுஞ் சொல்லே யன்றி 'ந' என்னுஞ் சொல் அன்று என்பது நன்கு அறியப்படும்.

---

11. திராவிட மொழிகளில் சில இலக்கண நியதி

தொல்காப்பியத்திற் கூறப்பட்டுள்ள இலக்கணங்க ளெல்லாம் மிக்க பழமைய. அவற்றுட் சில, சங்கச் செய்யுட்களிலும் அமைந்திருக்கவில்லை. ஆயின், தொல் காப்பியம் கூறும் இலக்கண வழக்குக்கள் பலவும் சங்கச் செய்யுட்களிற் காணும் அமைதிகள் (பிற்காலத் துச் செய்யுட்களிற் காணப்படாதவை) சிலவும் கன்னடம், தெலுங்கு, மலையாளம் இம் மொழிகளிற் காண்கின்றன. அவற்றுள்ளும் கன்னட மொழியில்தான் தமிழ்வழக்குக்கள் பலப்பல உள்ளன.

தமிழில் சுருங்கக் கூறியிருப்பவை கன்னடத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றுட் சிலவற்றை ஈண்டு எழுதுகின்றேன். இவற்றுள், தமிழ் மொழிக் கும், கன்னடம் முதலிய மொழிகட்கும் உள்ள ஒற்றுமை அறியப்படுதலேயன்றி, பழைய வழக்குக் களைக் கன்னடம் முதலிய மொழிகள் விடாமல் மேற் கொண்டுள்ள ஊற்றமும் அறியப்படும்.

1. முன்னிலை யொருமைப் பெயர்.

நீ என்னும் முன்னிலை யொருமைப்பெயர் இரண் டாம் வேற்றுமை முதலியவற்றின் உருபுகளை ஏற்கு மிடத்து நின் என்றுகும் என்று ஆசிரியர் தொல்காப் பியனார் கூறியுள்ளார். அவ்விதிப்படி, நின்னை நின் னொடு நினக்கு நின்னின் நினது நின்கண் என்று வரும். இவ்வாறே பண்டைச் செய்யுட்களில் வந்துளது.

ஆயின், பிற்காலத்தில், நின் என்பது **நுன்** எனத் திரிந்து, வேற்றுமையுருபேற்றவழி நுன்னை நுன்னெடு நுனக்கு முதலிய வடிவில் வழங்கியது. அதுவும் பின்னர், **உன்** எனத் திரிந்து, உன்னை உன்னெடு உனக்கு என்னுந் தொடக்கத்தவாய் வழங்குவதா யிற்று. இதுவே இக்காலத்தில் வழங்குகின்றது. நீ என்னும் யெயர்க்கும், உன் என்னும் வடிவிற்கும் யாதொரு தொடர்பும் இல்லையன்றே ?

தமிழில் இவ்வாறு திரிந்துபோயினும் மலையாளத் தில் நின்னை, நின்னெடு, நினக்கு, நின்னினின்னு நின்னெக்காள், நின்றெ (நின்னுடை), நின்கல் (நின்கண்) என **நின்** என்னும் வடிவமே இன்றும் இருவழக்கிலும் வழங்குகின்றது. புதுக்கன்னடத்திலும் நின்னன்னு, நின்னிந்த, நினகெ, நின்னதெலெயிந்த, நின்ன, நின் னல்லி என்று **நின்** என்னும் வடிவமே உளது. தெலுங்கில் இரண்டாம் வேற்றுமையில் நின் என்பது வும், மற்ற வேற்றுமைகளில் நீ என்பதுவும் உள. இலக்கியவளம் இல்லாத மொழிகளாகிய துளு, துத, கோத, குயி, ஓராஒன், ராஜ்மஹால் மொழிகளிலும் நின் என்னும் வடிவம் நிலைபெற்றிருக்கின்றது.

2. சாரியை.

நிலா, மழை, வெயில், இருள் இச் சொற்களுக்கு அத்துச் சாரியை வரும் என்று ஆசிரியர் தொல்காப்பிய னர் கூறியுள்ளார் [1]. ஆயின், இச் சொற்கள் அத்துச் சாரியை பெற்றுவருதல் காணப்படவில்லை. (இவற்றுட்

1. எழுத்ததி. 228, 287, 377, 402.

சில [2] ஓரோவழி அத்துச் சாரியை பெற்று வந்திருக்கலாம்.) ஆயின், மலையாளத்தில், நிலா மழை வெயில் என்னுஞ் சொற்கள் அத்துச் சாரியை பெற்றே வருகின்றன. இருள் என்னும் பொருளில் இருட்டு என்னுஞ் சொல் வழங்குதலின் அச்சொல் அத்துச் சாரியை பெற்றுவருகின்றது. ஆகவே, நிலா முதலிய நான்கு சொற்களும் அத்துச் சாரியை பெற்று வருதல் அறியலாகும்.

3 'சரதி குளிர் நிலாவத் துத்தமே மெத்தமேல்'

என்னுமிடத்து, நிலா என்னுஞ் சொல் அத்துச்சாரியை பெற்றுளது காண்க. இவ்வாறு வருதலை நோக்கி,

4 'இருட்டத்து நிலாவத் தென்
னித்யாதிக் கத்து தன்னெயோ.....'

என்று, இக்காலத்தில் ஸ்ரீராஜராஜ வர்ம கோயிற்றம் பிரானவர்கள் இலக்கணம் வகுத்துள்ளார். அன்றியும் அவர்,

5 'அத்து வேதிலுமே சேரும்
கால தேச விவக்ஷயில்'

என்று சூத்திரம் செய்து,

காற்றத்து—(காற்றுள்ள இடத்து அல்லது காற்றுள்ள காலத்து)

மழயத்து—(மழையுள்ள இடத்து அல்லது மழையுள்ள காலத்து)

---

2. 'இருளத் திதுவென் இதுவென் இதுவென்னே'. பெரியதிருமொழி. 10. 8 : 3.
3. சந்த்ரோத்ஸவம். 1 : 62.
4. கேரளபாணினீயம். சூ, 68.
5. கேரளபாணினீயம். சூ. 67.

என்று உதாரணமும் காட்டியுள்ளார். வெயிலத்து, மழயத்து என்பது அம்மொழியில் சாதாரண வழக்கு.

3. உள் (உருபு):

உள் என்னும் ஏழனுருபு ஒரு பொருளை ஒரு குழுவினின்று பிரித்து உறுதிப்படுத்தும் பொருளில் (நிர்த்தாரணார்த்தத்தில்), தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் பண்டு வழங்கப்பட்டுள்ளது. பிற் காலத்தில் அவ்வழக்குக் கெட்டது. இக்காலத்தில் அதனை நோக்கும் எண்ணமே இல்லாதொழிந்தது. அதனல், 'அவருள் இவன் நல்லவன்' என்று எழுத வேண்டுவதனை, 'அவரில் இவன் நல்லவன்' என்று எழுதி விடுகின்றனர். 'அவரில் இவன் நல்லவன்' என்பது 'அவரைக்காட்டிலும் இவன் நல்லவன்' என்னும் பொருளைத் தருதலேயன்றி, 'அவருள் இவனே நல்லவன்' என்னும் பொருளைத் தாராதன்றே?

தெலுங்கு கன்னடங்களில் நிர்த்தாரணார்த்தத்தில் உள் என்பதுவே வருகின்றது. உள் என்பது தெலுங்கில் 'லோன்', 'லோபல' என்று வழங்கும்; கன்னடத்தில் 'ஒள்' என்று வழங்குகின்றது.

[6] 'லோபல நிர்த்தாரணேத்பவா ஷஷ்ட்டீ'

'நிர்த்தாரணார்த்தத்திற் பிறந்த ஷஷ்ட்டிக்கு லோபல என்பது வரும்' என்பது தெலுங்கு இலக்கணம்.

[7] 'ஆதாரம ததிகரண மல்லி ஸப்தமி திளி நிர்த்தாரண .....அர்த்தகதம்'.

---

6. ஆந்த்ர சப்த சிந்தாமணி. 3 : 31.
7. சப்தமணி தர்ப்பணம். 195.

என்பது கன்னட இலக்கணம். 'ஆதாரமாயிருப்பது அதிகரணம் எனப்படும். அங்கு ஏழனுருபு வரும். தெளி ; அது நிர்த்தாரணம்..... பொருள்களை உடையது' என்பது இதன் பொருள்.

இவ்விலக்கணம் மாறாது இவ் விருமொழியிலும் இன்றும் நிலைத்துளது. வழக்கிலும் அவ்வாறே வழங்குகின்றது.

4. தன்மை, முன்னிலைப் பெயர்களோடு விகுதி சேர்ந்து வருதல் :

படர்க்கைப் பெயரைத் தன்மை முன்னிலைகளில் வழங்கும்போது அப்பெயரொடு தன்மை முன்னிலையைக் குறிக்குஞ் சொல்லைச் சேர்த்து வழங்கும் வழக்குப் பண்டைச் செய்யுட்களில் உளது.

8 'யாமவன் கிளைஞரேம்'
9 'வான வரம்பனை நீயோ பெரும'
10 'யாரை யோநீ'
11 'சுரத்திடை யிருந்தனிர் யாரீர்'

என்று பண்டைச் செய்யுட்களில் வந்திருப்பன காண்க. தன்மை யொருமையைக் குறிக்க 'ஏன்' என்பதனையும், தன்மைப் பன்மையைக் குறிக்க 'ஓம்' என்பதனையும் சேர்த்து வழங்கும் வழக்குச் சாசனங்களில் யாண்டுங் காணலாகும். இவ்வழக்குப் பிற்காலத்தில் அருகியது. முன்னிலையைக் குறிக்க ஐ, இர், ஈர் என்பன சேர்த்து வழங்கும் வழக்கும் ஒழிந்தது. ஆயின், இதுபோன்ற வழக்குத் தெலுங்கில் நிலைபெற்றுளது. இதுபற்றிய

8. புறம். 144. 9. புறம். 2.
10. சிலப். 20 : 49 11. புறம். 141.

இலக்கணம் [12] ஆந்த்ர சப்த சிந்தாமணியில் நான்கு சூத்திரங்களிற் கூறப்பட்டுளது. அவ்விலக்கணத் திறகு மாறுக—படர்க்கைப் பெயரை அப்படியே தன்மை முன்னிலைகளில் வழங்குதல்—இன்றளவும் இல்லை. உலக வழக்கிலும் அந் நியதி பெருப்பாலும் உளது. கன்னடமொழியில் இவ்வழக்கு உறழ்ச்சியாய் வரும் என்பது [13] சப்தமணி தர்ப்பணத்தினுல் அறியப் படுகின்றது.

5. எல்லாம் என்னுஞ் சொல்:

எல்லாம் என்னுஞ் சொல் அஃறிணைப் பன்மையை உணர்த்துஞ் சொல். அது, தன்மைப்பன்மைக்கண் அஃறிணையை உளப்படுத்தும் வழியன்றி உயர்திணைக் கண் வருதல் இல்லை என்று ஆசிரியர் தொல்காப் பியனுர்,

[14] 'தன்னு ளுறுத்த பன்மைக் கல்ல
துயர்திணை மருங்கி னுக்கம் இல்லை'

என்னுஞ் சூத்திரத்திற் கூறியுள்ளார். அதன்படி 'யாமெல்லாம்' என்றல் அமையுமேயன்றி, படர்க்கைக் கண், 'அவரெல்லாம்' என்றல் அமையாது; 'அவரெல் லாரும்' என்பதே அமையும்.

'நெறிதாழிருங் கூந்தல் நின் பெண்டிர் எல்லாம்
என உயர்திணைப் படர்க்கையிலும்,

நீயி ரெல்லாம் விளையாடப் போதுமின்

---

12. ஹலந்தபரிச்சேதம். 32—5.
13. சப்தமணி தர்ப்பணம். 230.
14. தொல். சொல். பெய. 33.

என முன்னிலையிலும் வருமால் எனின் அவை இலக்கண வழக்கல்ல; மருஉ வழக்காகி வந்தன' என்று தெய்வச்சிலையார் எழுதியிருப்பது காண்க. ஆயின்,

15 'புலவ ரெல்லாம் கின்னைக் கினரே'

என்று பண்டைச் செய்யுளிலேயே வந்துளது.

எல்லாம் என்னுஞ் சொல் தெலுங்கில் எல்லன் என்று வழங்கும். அஃது அஃறிணைச் சொல்லோடு சேர்ந்து 'அவியெல்லன்' என்று வருமேயன்றி, உயர்திணைச் சொல்லோடு சேர்ந்து, 'வாரெல்லன்' என்று வருதலே இல்லை.

எல்லாம் என்பது புதுக் கன்னடத்தில் எல்லவு என்று வழங்கும். அஃது அஃறிணைப் பெயரோடு மட்டுமே சேர்ந்துவரும். உயர்திணைப் பெயரோடு 'எல்லரூ' என்பதுவே சேர்ந்துவரும். 'அவரெல்லரூ பந்தரு' என்று வருதலேயன்றி, 'அவரெல்லவு பந்தரு' என்று வருதல் இல்லை.

6. உயர்திணைப் பெயருக்கு வரும் அடைமொழி:

உயர்திணைப் பெயர்க்கு அடையாக வரும் எண்கள் எண்ணியற் பெயராய் வருதலே பழைய வழக்கு; 'நால்வர் மக்கள் உளர்' என்பதுபோல வரும்; நான்கு மனிதர் என்று வாராது. இவ்வமைதி இக்காலத்தில் பெரும் புலவர் நூல்களிலும் காண்பது அரிதாயுளது. தெலுங்கிலும், கன்னடத்திலும் இந் நியதி நிலைபெற்றுளது. தெலுங்கில், 'இத்தரு மனுஷ்யுலு வச்சிரி'

15. புறம். 42.

என்று வழங்குதலன்றி, 'ரெண்டு மனுஷ்யுலு வச்சிரி' என்று வழங்குதல் இல்லை. அவ்வாறே புதுக் கன்ன டத்திலும் 'இப்பரு மனுஷ்யரு பந்தரு' என்றே வழங்குகின்றது. 'எரடு மனுஷயரு பந்தரு' என்று வழங்குதல் இல்லை.

குறிப்பு:—இந்நூலில், 35-ஆம் பக்கத்தில் முதலில் சேர்த்துக் கொள்க.

இனி, இலக்கணைப் பொருளினின்று தோன்றும் வ்யங்க்யப் பொருட்கு உதாரணம்

துணைசெய் தாயெனக் கேபெரி தன்பநீ
குணமு ளோனெனல் காட்டினை இன்றும்மேல்
அணையும் நாளிலும் இங்கனம் ஆசரித்
திணையில் இன்புடன் வாழுதி என்றுமே.

இது பகைவனோடு சொல்லியதாகலின், சொற் பொருள் இங்கு அமைதலின்று; 'நீ எனக்கு மிக்க துன்பம் விளைத்தாய்; துஷ்டனென்பதையும் வெளிப் படுத்தினாய். பகைவனே! மேலும் இவ்வாறு நடந்து கொண்டு பல நாட்கள் இன்புற்றிருக்க இடனிலா தாகுக' என்று சாபமிடுதலாகிய இலக்கணைப் பொருளைப் பயந்தது. இங்கு 'நீ என்பால் எத் துணைப் பகைமை கொள்ளினும் உனக்கு விருப்ப மில்லாத சொல்லைப் பேசவும் நான் நினைக்கவில்லை' என்பது வ்யங்க்யப் பொருளாகும்.

ஆசிரியரின் நூல்கள்

1.	நுண்பொருள் விளக்கம்	ரூ. 1-80
2.	தென்மொழிகள்	ரூ. 3-00
3.	குற்றியலுகரம்	ரு. 0-80
4.	தென்மொழிக் கட்டுரை	ரூ. 2-00

கிடைக்குமிடம்

1. பாரி நிலையம்,
   59, பிராட்வே, சென்னை-1.
2. சைவசித்தாந்தக் கழகப் பதிப்பகம்,
   1/140, பிராட்வே, சென்னை-1.
3. மாணவர் மன்றம்,
   12, வேங்கட ஐயர் தெரு, சென்னை-1.